இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 35 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 27 – புதன்கிழமை 13 செப்டம்பர் 2023 – வெளியீு 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 35 : Thiruvalluvar Year - 2054 - Aavani 27 - Wednesday 13 September 2023 - Dak 12 Pages ₹5.00

## 1.06 கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் பயன் பெறுகிறார்கள்! செப்.15 அன்று செயல்படுத்தப்படும் மாபெரும் திட்டமான

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்ட வேண்டும்!

## அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டுகிற வகையில் மிகுந்த கவனமுடன் செயல்படுமாறு அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, செப். 13 -

**பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று 1 கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் பயன் பெறும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள மாபெரும் திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை வெற்றிகரமாக செயல் படுத்திக் காட்ட வேண்டும் எனவும், அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டும் வகையில் மிகுந்த கவனமுடன் செயல்படுமாறும் அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிர் பயன் பெறும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்த ஆய்வுக் கூட்டம் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2023) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.9.2023 அன்று தொடங்கப்படவுள்ளதையொட்டி அதுகுறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் தொடக்க விழாவானது வருகிற 15–ஆம் நாள் காஞ்சிபுரத்தில் நடைபெற இருக்கிறது.

அன்றைய தினமே அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் அமைச்சர்கள் முன்னிலையிலும் நடைபெற இருக்கிறது.

### குடும்பத் தலைவிகளுக்கான மிகப்பெரிய திட்டம்!

தமிழ்நாடு அரசின் மிகப்பெரிய திட்டம் என்றால் இதுதான். ஒரே நேரத்தில் ஒரு




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2023) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.9.2023 அன்று தொடங்கப்படவுள்ளதையொட்டி அதுகுறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வளர்ச்சி ஆணையர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் - ஆயிரம் ரூபாயை மாதாமாதம் - ஆண்டு தோறும் பெறப் போகிறார்கள்.

அதிகப்படியான நிதி ஒதுக்கீடு தேவைப் படும் திட்டமாகவும் -

அதிகப்படியான பயனாளிகள் உள்ளடக்கிய திட்டமாகவும் இது அமைந்துள்ளது. இதனை வெற்றிகரமாக நடத்திக் காட்டும் பொறுப்பும் கடமையும் அதிகாரிகளாகிய உங்களுக்கு இருக்கிறது.

ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள் பயன் பெறுகிறார்கள் என்பதால் கிடைக்கின்ற பாராட்டு, ஒரு கோடி பாராட்டுகளுக்கு சமம்.

அதேபோல்தான் சிறு தவறு நடந்துவிட்டால் அதனால் கிடைக்கும் கெட்டபெயரும், என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

எனவே எந்த இடத்திலும் - எந்தச் சூழலிலும் - எந்த ஒரு தனிநபருக்கும் சிறு தவறு கூட நடந்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லி வருவதை, தற்போதும் நினைவு படுத்த விரும்புகிறேன்.

### மிகவும் கவனமாக செயல்பட்டு திட்டத்தை சரியாக செயல்படுத்த வேண்டும்!

தகுதி வாய்ந்த பெண்களுக்கு உரிமைத் தொகை அவர்களது வங்கிக் கணக்கில் வரும் செப்டம்பர் 15 முதல் கிடைக்கும் வகையில் நாம் ஏற்பாடு செய்துள்ளோம். இத்தகைய தகுதி பெற்ற குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் மாதம் தோறும் வங்கிகளில் அவர்களது கணக்கில் உரிமைத் தொகை வரவு வைக்கப்படும்.

ஏ.டி.எம். கார்டுகள் முதற்கட்டமாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலும், படிப்படியாக விரைவில் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். ஆனால் ஏ.டி.எம். கார்டு வழங்கப்படுவதற்காக காத்திருக்காமல், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் உரிமைத் தொகை வழங்கப்படும். பயனாளிகளுக்கு பணத்தை எடுப்பதில் எந்த சிக்கலும் ஏற்படக் கூடாது, அதிலும் கவனமாக இருக்க வேண்டும்.

அதேபோல், வரும் 15–ஆம் தேதி, என்னுடைய சார்பில் மகளிருக்கு அனுப்பி வைக்கப் படும் குறுஞ்செய்தியில், பணம் எடுப்பது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால், அதுகுறித்து தகவல் தெரிவிக்க வேண்டிய Toll–Free எண்ணும் சேர்க்கப்பட வேண்டும்.

இந்த திட்டத்தில் இணைந்து கொள்ள 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன. தகுதியுள்ளவர்கள் என நாம் தேர்ந்தெடுத்துள்ளது 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேர்.

அப்படியானால் மற்றவர்களது கோரிக்கைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதை நாம் அவர்களுக்குச் சொல்லியாக வேண்டும். எந்த அடிப்படையில் உங்களது கோரிக்கையை எங்களால் ஏற்க முடியவில்லை என்பதற்கான காரணத்தை குறிப்பிட்டு அவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பியாக வேண்டும்.

### அரசின் மீது மிகுந்த நம்பிக்கை பொதுமக்களுக்கு ஏற்படும்!

அப்படி அனுப்பினால் பெரும்பாலானவர்கள் மனநிறைவு அடைவார்கள்.

சிலருக்கு சந்தேகங்கள் இருக்கலாம் - மறுபடியும் நம்மிடம் விண்ணப்பிப்பார்கள். அவர்களுக்கும் அத்தகைய வாய்ப்பை நாம் வழங்க வேண்டும். வாய்ப்பை வழங்கினால் பொதுமக்களுக்கு அரசின் மீது மிகுந்த நம்பிக்கை ஏற்படும்.

வருகிற 15–ஆம் நாள் அன்று மாவட்டத் தலைநகரங்களில் இதற்கான விழா நடக்க

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## மேக்சிவிஷன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஐ ஹாஸ்பிடல்ஸ் குழுமம்

# ரூ.400 கோடி முதலீடு! 2 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

சென்னை, செப். 13 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (12.9.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில், மேக்சிவிஷன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஐ ஹாஸ்பிடல்ஸ் பிரைவேட் லிமிடெட் (Maxivision Super Speciality Eye Hospitals Private Limited), 400 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாட்டில் நிலை 2 மற்றும் நிலை 3 நகரங்களில் 100 கண் சிகிச்சை மையங்கள் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசிற்கும், மேக்சிவிஷன் குழுமத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கிவரும் தமிழ்நாடு, தானியங்கி வாகனங்கள், ஜவுளி, காலணி மற்றும் தோல்பொருட்கள், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வான்வெளி மற்றும் பாதுகாப்பு என பல்வேறு வகையான தொழில்களை நிறுவிட ஊக்கமளிப்பதன் மூலம், முதலீடுகள் மேற்கொள்வதற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து விளங்கி வருகிறது.

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கினை விரைவில் அடைவதற்காக, அதிக முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அம்முயற்சிகளுக்கு மகுடம் சூட்டும் வகையில், 2024ஆம் ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில், சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை சிறப்பான முறையில் நடத்திட உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

தரமான கண் சிகிச்சையை எளிதாகவும், குறைந்த கட்டணத்திலும் வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ள மேக்சிவிஷன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஐ ஹாஸ்பிடல்ஸ் பிரைவேட் லிமிடெட் தமிழ்நாடு, தெலுங்கானா, குஜராத், ஆந்திர பிரதேசம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் 42 பல்நோக்கு சிறப்பு கண் மருத்துவமனைகளை அமைத்துள்ள பெரிய வலையமைப்பு கொண்ட குழுமமாகும். இக்குழுமம், தமிழ்நாட்டில் நிலை 2 மற்றும் நிலை 3 நகரங்களில் 100 கண் சிசிக்சை மையங்களை அமைக்க திட்டமிட்டுள்ளது.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

மேக்சிவிஷன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஐ ஹாஸ்பிடல்ஸ் பிரைவேட் லிமிடெட் குழுமம், 400 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாட்டில் நிலை 2 மற்றும் நிலை 3 நகரங்களில் 100 கண் சிகிச்சை மையங்கள் அமைக்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசிற்கும் மேக்சிவிஷன் குழுமத்திற்கும் இடையே முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைச் செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, மேக்சிவிஷன் நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் ஜி.எஸ். கே.வேலு, தலைமை செயல் அலுவலர் வி.எஸ்.சுதீர், தலைமை மருத்துவ இயக்குநர் மருத்துவர் ஷிபு வர்க்கீ, இயக்குநர் எஸ்.பொர்னார்டு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## “இந்தியா” கூட்டணி பிரச்சாரக் குழுவின் 2வது கூட்டம்!


புதுடெல்லி, செப். 13 –

இந்தியா கூட்டணியின், பிரச்சாரக் குழுவின் இரண்டாவது கூட்டம் நேற்று நடைபெற்றது. சென்னை, டெல்லி உள்ளிட்ட 11 இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்துவது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டது.

வரும் மக்களவைத் தேர்தலில் ஆளும் பா.ஜ.க.வுக்கு எதிராக ஓரணியாக போட்டியிட இந்தியா கூட்டணி திட்டமிட்டுள்ளது. இதன் படி, எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனை கூட்டங்கள் பாட்னா, பெங்களூரு மற்றும் மும்பை ஆகிய இடங்களில் நடைபெற்றன. இதில் 14 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக்குழு, பிரச்சாரக்குழு, சமூக வலைதள குழு உள்ளிட்ட முக்கிய குழுக்கள் அமைக்கப்பட்டன.

இந்நிலையில், இந்தியா கூட்டணி பிரச்சாரக் குழுவின் இரண்டாவது கூட்டம் காணொலி மூலம் நடைபெற்றது. இதில், தி.மு.க. சார்பில், மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா பங்கேற்றார்.

இந்தக் கூட்டத்தில், டெல்லி, பாட்னா, சென்னை, நாக்பூர், கவுஹாத்தி உள்ளிட்ட இடங்களில் பொதுக்கூட்டங்களை நடத்துவது குறித்து ஆலோசனை நடத்தப் பட்டது.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 13-09-2023

# ஆயிரம் குடமுழுக்கு

**“இறை நம்பிக்கையாளர்கள் போற்றும் ஆட்சியாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செயல்பட்டு வருகிறது”** என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்திருப்பது பெருமை பொங்கும் சொற்கள் மட்டுமல்ல - உண்மையே அதுதான். ‘நாத்திகர்கள் கட்சி’ என்று கட்டமைத்து, ‘இவர்கள் ஆட்சியிடம் இருந்து கோவில்களைப் பறிக்க வேண்டும்’ என்று ஒரு கும்பல் துடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் ஆயிரமாவது குடகுழுக்கை நடத்தி இந்தக் கும்பலின் தலையில் மண்ணைப் போட்டுவிட்டது தி.மு.க. அரசு.

சென்னை மேற்கு மாம்பலம் காசி விசுவநாதர் கோவிலில் கடந்த 10 ஆம் தேதி இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் குடமுழுக்கு விழா மிகமிகச் சிறப்பாக நடந்துள்ளது. கழக ஆட்சி ஆறாவது முறையாக மலர்ந்ததற்குப் பிறகு - இந்த இரண்டு ஆண்டு காலத்தில் நடந்துள்ள கோவில் குடமுழுக்கு விழாக்களில் 1000 ஆவது குடமுழுக்குதான் இந்த காசி விசுவநாதர் கோவிலில்நடந்தது ஆகும். இதைவைத்துத்தான், **‘இறைநம்பிக்கையாளர்கள் போற்றும் ஆட்சி’** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அரசிடம் இருந்து கோவிலைப் பறித்து சூறையாட நினைக்கும் கும்பல்களால் இதனைத் தாங்கிக் கொள்ள முடியாது.

**‘அனைத்துத் துறைகளின் வளர்ச்சி’** என்பதைத்தான் திராவிட மாடல் ஆட்சியின் இலக்கணமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி வருகிறார்கள். அப்படித்தான் செயல்படுத்தியும் வருகிறார்கள். **‘எல்லார்க்கும் எல்லாம்’** என்பது இதன் உள்ளடக்கம் ஆகும்.

**எந்த மனிதரையும் ஜாதியின் பேரால் தள்ளி வைக்கக் கூடாது என்பதை அடிப்படையாக வைத்துத்தான் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. முறையாகப் பயிற்சி பெற்றவர்களாக இருந்தால் எவரும் அர்ச்சகர் ஆகலாம் என்று வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்றமும் தந்துள்ளது. இதனை உச்சநீதிமன்றமும் உறுதி செய்துள்ளது. இன்னார்தான் அர்ச்சகராக இருக்க முடியும் என்பதையும் மாற்றி, பெண்கள் அர்ச்சகர் ஆக முடியாது என்பதையும் மாற்றி சமத்துவம் உலாவும் இடமாக கோவில்கள் மாறி இருக்கின்றன.**

திருக்கோயில்கள் சார்பில் - 10 கலைக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, நான்கு கல்லூரிகள் தொடங்கப்பட்டு விட்டன.

அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் B.Com, BBA, BCA, B.Sc Computer Science ஆகிய நான்கு பாடப் பிரிவுகள் மட்டுமல்ல, சைவ சித்தாந்தமும் கற்றுத் தரப்படுகிறது. முதலமைச்சரின் கொளத்தூர் தொகுதியில் இது செயல்பட்டு வருகிறது. கொளத்தூர், திருச்செங்கோடு, ஒட்டன்சத்திரம், விளாத்திக்குளம் ஆகிய நான்கு இடங்களில் தொடங்கப்பட்டு விட்டது கோவில் கல்லூரிகள்.

திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் செய்யவே வல்லுநர் குழு அமைக்கப் பட்டது. தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் 43 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. பழமையான கோயில்களை பழமை மாறாமல் சீர்செய்து குடமுழுக்கு விழாவை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்களது ஒப்புதல் பெற்ற பிறகுதான் செயல்கள் செய்யப்படுகின்றன.

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களை பழமை மாறாமல் சீர்செய்வதற்கு ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருக்கோயில்களிலுள்ள பழமையான மூலிகை ஓவியங்களை பாதுகாக்கும் வகையிலான வழிமுறைகளை வழங்குவதற்கு தனி ஆலோசகரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

**1250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1250 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணி களையும் சேர்த்து இந்த நிதியாண்டில் மட்டும் 5078 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என அமைச்சர் சேகர் பாபு அறிவித்திருக்கிறார்.**

கடந்த காலத்தில் 1000 கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத 1000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள தலா ரூ. 1 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. தி.மு.க. அரசு பொறுப் பேற்றப்பின் திருக்கோயில்களின் எண்ணிக்கையை தலா 1250 ஆகவும் நிதியுதவியை ரூ.2 இலட்சமாகவும் உயர்த்தி அறிவிக்கப்பட்டது. இப்படி அனைத்துக் கோவில்களும் புத்துயிர் பெறுவது அந்தக் கும்பலுக்கு பிடிக்கவில்லை.

இன்னும் சொன்னால் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில்தான் இந்து சமய அறநிலையத் துறையே மிகமிகச் சிறப்பாகச் செயல்படத் தொடங்கியது.

1970 ஆம் ஆண்டுக்கு முன்னதாக அறநிலையத் துறைக்குத் தனி அமைச்சரோ, சட்டப்பேரவையில் அறநிலையத் துறைக்கு என தனி விவாதமோ நடந்தது இல்லை. வேறு ஏதாவது ஒரு துறையோடு சேர்த்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கையை நடத்துவார்கள். முதல்வர் கலைஞர் ஆட்சி காலத்தில்தான் அறநிலையத்துறைக்கு தனியான மானியக் கோரிக்கை விவாதம் நடத்துவது தொடங்கப்பட்டது.

**1967 முதல் 1975 வரையிலான காலக்கட்டத்தில் சுமார் ஐந்தாயிரம் கோவில்களுக்கான திருப்பணிகளும், 1996 - 2001 காலக்கட்டத்தில் 2,459 கோவில்களுக்கு திருப்பணிகளும், 2006 - 2011 காலக்கட்டத்தில் 4 ஆயிரத்து 539 கோவில்களுக்குத் திருப்பணிகளும் நடத்தியவர் முதல்வர் கலைஞர்.**

அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் பல்லாயிரக்கணக்கான கோவில் களைக் கொண்டு வந்து சேர்த்தவர் கலைஞர். அவரது ஆட்சியில் தான் கோவில் சொத்துக்களும் அதிகம் ஆனது. கோவில்களின் வருமானமும் அதிகம் ஆனது. 1989, 1996 ஆண்டுகளில் ஆன்மிகப் பெரியவர்களைக் கொண்டு அறநிலையப் பாதுகாப்புக் குழுவை அமைத்தவர் கலைஞர். கிராமப்புற பூசாரி களுக்கு ஓய்வூதியத் திட்டம் அறிவித்தவரும் அவரே. திருக்கோவில் தொடர்பான ஆகம விதிகள் வடமொழியில் உள்ளதை தமிழில் மொழி பெயர்த்து, வெளியிட முயற்சிகள் செய்தார். போற்றி புத்தகங்களை வெளியிட்டார். இவை அனைத்தும் மீண்டும் இப்போதும் வெளியிடப்பட்டு வருகின்றன.

**அன்றைய மடாதிபதிகள் எப்படி கலைஞர் ஆட்சியை பாராட்டினார்களோ - அதே வகையில் இன்றைய மடாதிபதிகள் இன்றைய முதல்வரையும் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இப்படி இறை நம்பிக்கையாளர்கள் நம்பிக்கை யையும் சேர்த்துப் பெறும் வகையில் செயல்பட்டு வருகிறார் அமைச்சர் சேகர்பாபு. அதனால்தான் அவரை குறி வைக்கிறது ஒரு கும்பல். அந்த கும்பல் உண்டியலைப் பற்றி மட்டுமே பேசுகிறது. ஆனால் தி.மு.க. அரசு, பக்தர்களைப் பற்றி மட்டுமே அக்கறையோடு செயல்படுகிறது.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.9.2023) தலைமைச் செயலகத்தில், இந்தியாவின் நம்பர் 1 செஸ் வீரர் செல்வன் டி.குகேஷ் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது முதலமைச்சர் அவர்கள் செல்வன் குகேஷிற்கு நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, வேலம்மாள் கல்வி அறக்கட்டளையின் தாளாளர் எம்.வி.எம். வேல்மோகன் மற்றும் செல்வன் குகேஷின் பெற்றோர் ஆகியோர் உள்ளனர்.

### ச.பரமசிவம் தலைமை! வசந்தி பரமசிவம் எம்.சி. முன்னிலையில்

## முரசொலி அச்சகப் பிரிவு எஸ்.சதீஷ் பிரபு - பி.கெசியா திருமண விழா!

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன் எம்.பி. - மு.க.தமிழரசு - எம்.கே.மோகன் வாழ்த்து!

சென்னை, செப்.12 - சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் மறைந்த சி.ராஜி (எ) செ.முகிலன், சகுந்தலா முகிலன் ஆகியோரின் பேரனும், செல்வகுமார் - திருமதி சாந்திபாய் ஆகியோரின் மகனும் முரசொலி நாளிதழின் அச்சகப்பிரிவு பொறுப்பாளருமான எஸ். சதீஷ் பிரபுவுக்கும், பத்மநாபன் - திருமதி லில்லி ஆகியோரின் மகள் பி.நற்குண லட்சுமி (எ) கெசியாவுக்கும் திருமணம் மற்றும் வரவேற்பு நிகழ்ச்சி இன்று (13.9.2023 - புதன்கிழமை) மாலை 6 மணிக்கு மேல் மலையாள கிளப் எண்.28,



கிளப் சாலை சீனிவாச நகர் சேத்துப்பட்டில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு அண்ணா நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் தலைமை வகிக்கிறார். வசந்தி பரமசிவம் எம்.சி. முன்னிலை ஏற்கிறார். 100வது வட்டக் கழக செயலாளர் ஆ.ஏகாம்பரம் வரவேற்புரையாற்றுகிறார்.

மணவிழா வரவேற்பில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தயாநிதி மாறன் எம்.பி., மு.க.தமிழரசு, அண்ணா நகர் தெற்கு பகுதி செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., கலாநிதி வீராசாமி எம்.பி., கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஆர்.ராணி ரவிச்சந்திரன், எஸ்.சேரன், ஏ.டி.முருகன், என்.ஆனந்த், அ.நிர்மலா தேவி, மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என். துரை, பி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டியன் பாபு, ஜீவகன் அய்யநாதன், பகுதிக் கழக நிர்வாகிகள் பா.பிரபு, வி.சாய் செல்வம், கே.பி. சுரேந்தர், எப். மரியா பிரான்ஸிஸ், வட்டச் செயலாளர்கள் கு.பாபு, க.கோவிந்தராஜ், சி.பி.திருமலை, பி.சந்திரசேகர், எம்.ஜி.ரவிக்குமார், பி.ஜெய்சங்கர், அருள்கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் மெடில்டா கோவிந்தராஜ், புஷ்பலதா ஜெய்சங்கர், பா.வேளாங்கன்னி.

வட்டக் கழக நிர்வாகிகள் எஸ்.ஜெயகாந்த், ஆ. ஐயப்பன், பி.கி.கைலாசம், ஜி.மணிவண்ணன், பா.உதயகுமார், கி.ஏழுமலை, பி.பாண்டியன், எஸ்.வெங்கடேசன், எல்.பாஸ்கர், என். வீரமணி, ஆர்.பொன்முடி.

மாவட்டப் பிரதிநிதிகள் இரா.வேல்முருகன், பி.விஞ்சா ஸ்டாலின், வி.ராஜேந்திரன், கே.பாலாஜி, ம.மோகன், த.குணசேகர், எம்.வாசு, எஸ்.செல்வம்.

ஏ.வி.ஆர்.சங்கர், ஓ.கே. குட்டி, ஆர்.ஜி.ராகவநாயகம், டி.சம்மந்தா, வி.எம்.நாகராஜ், பால் ஜெயகர், எல். காஞ்சனா, சி.விக்னேஷ், வி.வெங்கடேசன், எஸ். ரமேஷ், எஸ்.சரவணன்.

எஸ்.தங்கராஜ், டி.விஜயன், கே.பெருமாள், மு.க.விஜி, ஜி.அம்மு, ஏ. ஜானகி, ஆர்.ராதிகா, ஜெ.ரோசி, எஸ்.ஷாலினி, எஸ்.சூர்யகலா, எஸ். சத்யா, ஏ.மீனா அரிஹரன், எம்.சுகுணா, ஏ.மித்ரா, மாலதி, தாராதேவி, கோமதி என்.அமுதா, ஏ. பூவை அரசி, கஸ்தூரி, ரோஸ்மேரி, ரமணி, ஹாயிசா, பி.லட்சுமி, டி. காந்திமதி, ஜோதிலட்சுமி, வைஷ்ணவி, லதா, பா.விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

விழா முடிவில் அண்ணா நகர் வடக்கு பகுதி பொருளாளர் இரா.இளங்கோவன் நன்றி உரையாற்றுகிறார்.

## ஜி20 மாநாடு: ஒதுக்கியது ரூ.990 கோடி; செலவிட்டதோ ரூ.4,100 கோடி!

### மிகப் பெரும் ஊழல்: எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப். 13 - ஜி20 மாநாட்டை நடத்த ஒன்றிய பட்ஜெட்டில் ஒதுக்கிய நிதியை விட 300 சதவிகிதம் அதிகமாக செலவிட்டு ஊதாரித்தனத்தில் ஈடுபட்டுள்ளதாக குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன.

ஜி20 மாநாட்டை நடத்த பட்ஜெட்டில் ரூ. 990 கோடி ஒதுக்கிய நிலையில், தற்போது ரூ. 4 ஆயிரத்து 100 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒதுக்கப்பட்ட நிதியைக் காட்டிலும் கூடுதலாக ரூ. 3 ஆயிரத்து 110 கோடி அதிகமாக செலவிட்டுள்ளது. இந்த கூடுதல் நிதி ரூ. 3 ஆயிரத்து 110 கோடியும், மோடி அரசின் விளம்பரம் உள்ளிட்ட தேவையில்லாத செலவுகளுக்காகவே அள்ளி இறைக்கப் பட்டு உள்ளதாக எதிர்க் கட்சிகளின் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

முன்னதாக ஜி20 மாநாட்டிற்காக, ரூ. 2 ஆயிரத்து 700 கோடி செலவிட்டு, டெல்லி பிரகதி மைதானத்தில் ‘பாரத் மண்டபம்’ கட்டப்பட்டதாக பா.ஜ.க. ஜம்பம் அடித்திருந்தது. ஆனால், அந்த ‘பாரத் மண்டபம்’, மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்ததே, மழைத் தண்ணீரால் சூழப்பட்டது.

மழைத் தண்ணீர் வெளியேறுவதற்குக் கூட வசதிகள் செய்யப்படாத லட்சணத்தில்தான் மோடி அரசு பாரத் மண்டபத்தை கட்டியிருந்தது, பின்னர் வெளிச்சத்திற்கு வந்தது. ஏற்கெனவே பல்வேறு துறைகளில், நிர்ணயிக் கப்பட்ட செலவைக் காட்டிலும் கூடுதலாக செலவிட்ட வகைகளில், அரசுக்கு ரூ. 7 லட்சத்து 50 ஆயிரம் கோடி அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஒன்றிய அரசின் தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரி குற்றம் சாட்டியிருந்தார்.

இதில், மிகப்பெரும் ஊழல் அரங்கேறியிருப்பதாக எதிர்க்கட்சிகள் இப்போதுவரை குற்றம் சாட்டி வருகின்றன.

ஆனால், இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு எந்தப் பதிலும் கூறாத மோடி அரசு, மாறாக ஊழல்களை மறைக்கும் விதமாக, ஒரே நாடு, ஒரே தேர்தல் விவகாரத்தை யும், சனாதனம் குறித்த பொய்ப்பிரச்சாரத்தையும் கட்டவிழ்த்து விட்டது.

இந்நிலையில்தான், ஜி20 மாநாடு பெயரிலும் மோடி அரசு ரூ. 3 ஆயிரத்து 110 கோடியை சூறையாடியிருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இதனைக் குறிப்பிட்டு கண்டனம் தெரிவித்துள்ள திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. சாஹேத் கோகலே, “இந்த தேவையில்லாத செலவு ரூ. 3 ஆயிரத்து 110 கோடியை, ஏன் பா.ஜ.க. வழங்கக்கூடாது?” என கேள்வி எழுப்பியுள்ளார்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; “சனாதன தர்மத்திற்கு எதிராக யார் பேசினாலும், அவர்களுடைய நாக்கு பிடுங்கி எறியப்படும் ( Tongue will be pulled out ); அவர்களுடைய கண்கள் பறிக்கப்படும் ( Eyes will be plucked out ) ;" என்று ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் பேசியிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம்; அப்படித்தான் கடும் வன்முறையைக் கக்கியிருக்கிறார்.**

**ராஜஸ்தான் மாநிலத் தேர்தலையொட்டி நடந்த யாத்திரையில் அவர் அப்படி ஆவேசப்பட்டு வெடித்திருக்கிறார்.**

**ஒன்றிய அமைச்சரே வன்முறையைத் தூண்டிவிடும் வகையில்,நாக்கைப் பிடுங்க வேண்டும், கண்ணைப் பறிக்க வேண்டும் என்று பேசியிருப்பது தண்டனைக்குரிய கொடுங் குற்றமாகும்.**

**எதைஎதையோ வன்முறையைத் தூண்டுதல் என்று சொல்லும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, கஜேந்திர சிங் ஷெகாவத் மீது வழக்குப் பதிவு செய்து, சட்டப்படி உரிய குற்ற இயல் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிந்து கொள்ள மனித உரிமை ஆர்வலர்கள் ஆவலுடன் இருக்கிறார்கள் !**

## தொ.மு.ச.வின் தலைமையிடம் நெய்வேலி!

# தி.மு.கழகம் தொடங்கப்பட்டதே சமூக நீதியை வளர்க்கத்தான்!

## நெய்வேலி சபா. இராசேந்திரன் எம்.எல்.ஏ. இல்ல மண விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

நெய்வேலி, செப். 13

**கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெய்வேலி சபா. இராசேந்திரன் எம்.எல்.ஏ. இல்ல மண விழாவை தலைமை ஏற்று நடத்திவைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. என்ற குப்பையை அகற்றிவிட வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் விஷப் பாம்பான பா.ஜ.க. வை ஒழிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டதுடன், தி.மு. கழகம் தொடங்கப்பட்டதே சமூக நீதியை வளர்க்கத்தான் என்றும் குறிப்பிட்டார்.**

**இதுகுறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–**

தொழிலாளர்களும், விவசாயிகளும் நிறைந்த இந்த நெய்வேலி பகுதிக்கு வருகை தந்து அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்களின் அன்பு மகன் தம்பி சுமந்த் திருமணத்தை நடத்தி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்னொன்று குறிப்பிட்டது போல, இது சுயமரியாதைத் திருமணம். அதைவிட மிக்க மகிழ்ச்சி எனக்கு என்னவென்றால், இது காதல் திருமணம். இந்தக் காதல் திருமண நிகழ்ச்சி, கிட்டத்தட்ட ஒரு மாநாடு போல மிகச் சிறப்பாக இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

காலை ஒன்பதரை மணியிலிருந்து மூன்று மணி நேரம் கிட்டத்தட்ட இப்போது மணி 12.30 ஆகபோகிறது. அனைவரும் இருந்து இந்த மணமக்களை வாழ்த்த நீங்கள் அத்தனை பேரும் வந்திருக்கிறீர்கள். இங்கு கூடியிருக்கின்ற கூட்டமே அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள் இந்தப் பகுதியில் எவ்வளவு முக்கியமானவர், எந்தளவுக்கு மக்கள் பணியாற்றியிருக்கிறார் என்று மிகத் தெளிவாகத் தெரிவிக்கும் கூட்டமாக இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் ஒட்டு மொத்த தமிழ்நாடே தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய பெரும்பான்மையான அமைச்சர்கள், பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள், நேற்றும் இன்றும் வந்து இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தியிருக்கிறார்கள்.

என்னிடத்திலே இந்தத் திருமணத்திற்கு நான்கு மாதங்களுக்கு முன்பு அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள் தேதி கேட்டார்கள். அப்பொழுதே சொன்னார். தலைவரிடம் தேதி வாங்கி விட்டேன். தலைவரும் வருகிறார். நீங்களும் வரவேண்டும் என்று சொன்னார். நான் கண்டிப்பாக வருகிறேன் என்று சொன்னேன்.

### மணமக்களுக்கு தலைவரின் வாழ்த்து!

இன்னும் சொல்லப்போனால் ஒரு வாரத்திற்கு முன்புதான் இதே கடலூர் மாவட்டத்திற்கு வந்து பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், இளைஞர் அணி நிகழ்ச்சிகளிலெல்லாம் நான் கலந்து கொண்டிருந்தேன். அப்பொழுது கூட அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. `இப்போதுதான் வந்துவிட்டுப் போகிறீர்கள். ஒரு வாரத்தில் திருமணம்... வருவீங்களா' என்று கேட்டார்.

நான் கண்டிப்பாக வருவேன் அண்ணன் என்று சொன்னேன். ஏற்கனவே தலைவர் இடத்திலேயே தேதி கேட்டு தலைவர் தலைமையில் திருமணம் நடந்திருக்க வேண்டிய திருமணம். தலைவர் அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் டெல்லி சென்றிருக்கிறார். இன்று காலைதான் தமிழ்நாடு வந்திருக்கிறார். ஆனால், தலைவர் அவர்களுக்கு முழு எண்ணமும், முழு மனமும் இந்தத் திருமணம் சிறப்பாக நடைபெற்றதா, அவருடைய முழு வாழ்த்தும் இந்த மணமக்களுக்கு அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்களுக்குக் கண்டிப்பாக இருக்கும்.

தலைவர் அவர்கள் என்னிடத்திலே தொலைபேசியில் அழைத்து என்னிடத்தில் சொன்னார். `இது மாதிரி நான் டெல்லிக்கு போறேன் நமது சபா ராஜேந்திரன் அவர்களின் இல்லத் திருமண விழா இருக்கிறது. அதற்கு நீ போய்விட்டு வந்துவிடு' என்று சொன்னார்.

தலைவர் அவர்களே... நீங்கள் வருவதாக இருந்தாலும், நான் அந்தத் திருமணத்திற்கு வருவதாகத் தான் இருந்தேன். பரவாயில்லை நான் சென்று உங்களின் சார்பாக, கழகத்தின் சார்பாகக் கலைஞருடைய குடும்பத்தின் சார்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி சார்பாக அந்தத் திருமணத்தை நடத்தி வைக்கின்றேன்.

அவர் பேசும்போது சொன்னார், எங்கள் குடும்பத் திருமணத்திற்கு வந்திருக்கீங்க எங்கள் குடும்பத் திருமணத்திற்கு வந்திருக்கீங்க என்று.

அதிலே ஒரு சின்னத் திருத்தம் . இது எங்கள் வீட்டுத் திருமணம், உங்கள் வீட்டுத் திருமணம் என்று பிரித்துப் பேசாதீர்கள்.

### இது கலைஞருடைய இல்லத் திருமணம்!

இது நம்ம வீட்டுத் திருமணம். இது நம் கலைஞருடைய குடும்பத் திருமணம். வாழ்த்துரை என்று எனக்கு வாய்ப்பளித்தாலும் உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் வரவேற்புரையும் நான் தான் சொல்லி இருக்க வேண்டும் நன்றியுரையும் நான்தான் சொல்லி இருக்க வேண்டும்.

ஏனென்றால், இது எங்களுடைய இல்ல திருமணம்.

மணமக்கள் இருவரும் பொறியாளர்கள். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து நடக்க வேண்டும். பகுத்தறிவோடும் சுயமரியாதையோடும் நடக்க வேண்டும். இந்த இல்வாழ்வில் அடி எடுத்து வைக்க வேண்டும் என்று நான் கேட்டு கொள்கின்றேன்.




அ.தி.மு.கவில் இ.பி.எஸ் அணி, ஓ.பி.எஸ். அணி, சசிகலா அணி, தீபா அணி, தீபாவுடைய டிரைவர் அணி இப்படிப் பல அணிகள் இருக்கின்றன. அதேபோல் குடும்ப வாழ்க்கை என்று வந்துவிட்டால், எல்லாருடைய குடும்பத்திலும் நடப்பதுதான். மாமியார் அணி, நாத்தனார் அணி எனப் பல அணிகள் பிரிந்து இருக்கக்கூடும். அந்த வாய்ப்பு வரும்.

ஆனால், அதையெல்லாம் சமாளித்து நமது மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அணியைப் போல வர இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற இருக்கின்ற இந்தியா கூட்டணி போல மணமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு சுயமரியாதை உணர்வோடு இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

> **வ**ர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைத் தூக்கி எறிய வேண்டும். அதற்கு, நீங்கள் அத்தனை பேரும் உங்களுடைய பங்களிப்பு எப்படி கடந்த சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் அத்தனைபேரும் ஒரே முடிவெடுத்து அ.தி.மு.க அடிமைகளை வீட்டுக்கு அனுப்பினீர்கள். 2024 தேர்தல் நமக்கு இன்னொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஒன்றிய அரசை இந்த அடிமைகளுடைய எஜமானர்களையும் விரட்டி அடிக்க வேண்டும். அதற்கு நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்புதான் நாடாளுமன்றத் தேர்தல். அதற்கு நீங்கள் தயாராக வேண்டும். ஒன்றிய அரசு தன்னுடைய சாதனை என்று சொல்ல ஒன்றுகூட இல்லை. நான் பேசியதைத் திரித்து நான் இனப்படுகொலைக்குக் குரல் கொடுத்தேன் என்று தப்பாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

### மூன்று முறை சட்டமன்ற உறுப்பினர்

அண்ணன் ராஜேந்திரன் அவர்கள் கழகத்திலேயே ஒரு மிகச் சிறந்த சீனியர் அனுபவசாலி. முத்தமிழறிஞர் கலைஞருடைய அன்பைப் பெற்றவர். கழகத் தலைவருடைய அன்பையும், பாசத்தையும் பெற்றவர். எந்த எதிர்பார்ப்பும் இன்றி கழகத்திற்காக உழைத்து வருகின்றார். இயக்கப் பணி, மக்கள் பணி என இரண்டு பணிகளிலும் அண்ணன் ராஜேந்திரன் அவர்கள் சிறந்து விளங்குவதால்தான் தொடர்ச்சியாக இப்பகுதியில் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்.

மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றால், அதற்கு அவருடைய மக்கள் பணியே அதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

2001 ஆம் ஆண்டிலேயே ஒன்றிய கழகச் செயலாளராக, 2006 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகத் தொகுதிக்கு புதிய பேருந்து நிலையம், புதிய காவல் நிலைய கட்டடம் நெல்லிப்குப்பம் முதல் புதுச்சேரி வரை இணைப்பு மேம்பாலங்கள் உள்ளிட்ட அனைத்து திட்டங்களையும் இந்தப் பகுதிக்குக் கொண்டு வந்தவர்தான் அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள்தான்.

தொடர்ந்து மூன்று முறை நெய்வேலி தொகுதியில் தொடர் சட்டமன்ற உறுப்பினராகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

எங்களுக்கெல்லாம் நான் முதல்முறை சட்டமன்ற உறுப்பினர் எனக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக ஒரு வழிகாட்டியாக இருக்கிறார் அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள்.

அதேபோல் என்.எல்.சி நிறுவனத்தின் சி.எஸ்.ஆர். நிதி மற்றும் தன் சொந்த செலவில் 40க்கும் மேற்பட்ட ஏரிகளை அண்ணன் ராஜேந்திரன் அவர்கள் தூர்வாரி இருக்கிறார்கள். என்.எல்.சி நிறுவனத்திற்கு இடம் வழங்கியவர்களுக்கு இழப்பீடு கொடுக்கவும், மாற்று இடம் பெற்றவர்களுக்கு பட்டா கிடைக்கவும் அண்ணன் ராஜேந்திரன் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

நம்முடைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 20,000 பேர் கலந்து கொண்ட ஒரு மிகப்பெரிய பிரம்மாண்ட வேலைவாய்ப்பு முகாமை நடத்தி, இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய இளைஞர்கள் 15,000 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கியிருக்கிறார், நம்முடைய அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள்.

இந்த நெய்வேலிப் பகுதி நம் கழகத்தினுடைய கோட்டையாக இருக்கிறது என்றால், அதற்கு முக்கிய காரணம் நம்முடைய அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள்தான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இயக்கத்தினுடைய தலைமையிடம் அண்ணா அறிவாலயம் என்றால், தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் தலைமை இடமாக இருப்பது நம்முடைய நெய்வேலிதான்.

கடலூர் மாவட்டத்திலேயே முதல்முறையாக நெய்வேலியில்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் உருவச்சிலை திறக்கப் பட்டது.

இங்கே நிறைய பெண்கள், தாய்மார்கள், கழகத்தினுடைய மூத்த முன்னோடிகள், மணமக்களுடைய உற்றார் உறவினர்கள் எல்லாம் வந்து இருக்கிறீர்கள். நீங்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும்.

### பெண்களுக்கு சுயமரியாதை கொடுத்தது திராவிட இயக்கம்

ஆணுக்குப் பெண் சமம் என்று சொன்னது நம்முடைய திராவிட இயக்கம்தான். 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற செங்கல்பட்டு சுயமரியாதை மாநாடுதான் பெண்களுக்கு கல்வி முக்கியம், பெண்களுக்குக் குடும்பத்தில் சம உரிமை வேண்டும், சொத்தில் சம உரிமை வேண்டும், பெண்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்ற தீர்மானங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டது, இந்தச் செங்கல்பட்டு மாவட்டத்தில்தான்.

செங்கல்பட்டு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு செயல் வடிவம் கொடுத்தது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகமும் கலைஞர் அவர்களின் ஆட்சியும்தான்.

பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சம உரிமை, பெண்களுக்குக் கல்வி உதவித் தொகை, உள்ளாட்சித் தேர்தல்களில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு என ஏராளமான திட்டங்களைக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

முத்துலட்சுமி அம்மையார் மகப்பேறு உதவித் திட்டம், அன்னை நாகம்மையார் கட்டணமில்லா கல்வித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் கைப்பெண் மறுமலர்ச்சித் திட்டம் என அரசின் திட்டங்களுக்கு சாதனை புரிந்த பெண்களின் பெயர்களைச் சூட்டி அழகு பார்த்தது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு.

அதனுடைய பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டமாகத்தான் இன்று கழக அரசு அமைந்து ஒவ்வொரு திட்டமும் பெண்களுக்காக கழக அரசு அமைந்து நம்முடைய முதலமைச்சர் இட்ட முக்கியமான கையெழுத்தில், முதல் கையெழுத்துப் பெண்களுக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம்.

அதேபோல் இப்போது வரஇருக்கக்கூடிய செப்டம்பர் 15ஆம் தேதி தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதி, பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் பெயரிலேயே செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணாவினுடைய பிறந்த நாளில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் மாதம் ஆயிரம் ரூபாய் தலைவர் அவர்கள் வழங்க இருக்கிறார்.

### சாமியாரிடம் ரூ.10 கோடி ஏது?

இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள், கடந்த ஒரு ஏழு எட்டு நாட்களாக நான் ஒரு மாநாட்டில் போய் கலந்து கொண்டேன். மாநாட்டின் பெயர் சனாதன ஒழிப்பு மாநாடு. ஒரு உள்ளரங்கத்தில் நடந்தது. நான் பேசிவிட்டுப் போய்விட்டேன்.

ஒரு நாள் பேசியிருந்தால் போயிருக்கும். அதை விட்டுவிட்டு நான் சொல்லாததையெல்லாம் சொன்னதாகச் சொல்லி இன்றைக்குத் தமிழ்நாடு மட்டுமல்ல இந்தியா முழுக்க ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பேசுகிறார் ஒன்றிய பிரதமர் பேசுகிறார்.

அதனால் சமீபகாலமாக என்னுடைய தலையை அவர்கள் ஏலம் விடுகிறார்கள். 10 லட்சத்தில் ஆரம்பித்து, இன்று 10 கோடி ரூபாய் அளவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

என் தலையைச் சீவினால் பத்து கோடி ரூபாய் பரிசு. சொன்னது யாரு சாமியார். நான் கேட்டேன் அந்தச் சாமியார் பத்து கோடி ரூபாய்த் தருகிறேன் என்கிறாரே, அவரிடம் எப்படி இவ்வளவு காசு அவர் சாமியார்தானே என்று சொன்னேன்.

பத்திரிக்கையாளர்கள் அந்தச் சாமியார் கிட்ட கேட்கிறார்கள், சாமியார் சொல்கிறார் என்னிடம் சொத்து மதிப்பு 500 கோடி. 500 கோடி வைத்திருப்பவன் உண்மையான சாமியாராக இருக்க முடியுமா? என்று நீங்கள் நினைத்துப் பாருங்கள்.

அது மட்டுமல்ல என் தலைக்கு எதுக்கு 10 கோடி. பத்து ரூபா சீப்பு கொடுத்தால் நானே சீவிகிட்டு போயிடுவேன்.

கலைஞர் அவர்களுக்கும் இதே மாதிரி ஒரு மிரட்டல் வந்திருக்கிறது. தாய்மார்களெல்லாம் வந்திருக்கிறீர்கள். நீங்கள் எல்லாம் யோசித்துப் பாருங்கள்.

நூறு வருடங்களுக்கு முன்பு பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடிய நிலைமை கிடையாது, மருத்துவப் படிப்பு படிக்க முடியாது, மருத்துவம் படிக்க வேண்டும் என்றால், சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

கணவன் இறந்தால் நீங்களும் உடனே உடன்கட்டை ஏற வேண்டும் என்று சொன்னார்கள். இதையெல்லாம் ஒழித்ததுதான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். இதையெல்லாம் எதிர்த்து குரல் கொடுத்தவர்கள்தான் நம்முடைய அம்பேத்கர் அவர்கள், நம்முடைய பெரியார் அவர்கள், நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நம்முடைய தலைவர் அவர்களும். அவர்கள் பேசாததையெல்லாம் நான் எதுவும் பேசவில்லை. என்னைவிட அதிகமாக அவர்கள்தான் பேசி இருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் உணர வேண்டும்.

எல்லோரும் கேள்வி கேளுங்கள் திரு. நரேந்திர மோடி அவர்களே, என்ன பண்ணி இருக்கீங்க என்று கேள்வி கேளுங்கள்.

ஒன்பது வருடம் நம் நாட்டை ஆட்சி செய்து கொண்டு இருக்கிறீர்களே என்ன செய்து கிழித்தீர்கள் என்று கேட்டோம். அவர் என்ன சொன்னார் நான் மாற்றிக் காட்டுகிறேன் என்று சொன்னார்.

### ஒன்பது ஆண்டு ஆட்சியில் இந்தியாவின் பெயரைத்தான் மாற்றினார்கள்!

இந்தியாவை மாற்றிக் காட்டுகிறேன் என்றார். மாத்திட்டாரு பெயரை மாற்றி விட்டார். இப்போது யாரும் இந்தியா என்று கூப்பிடக் கூடாது ஏன்? நம்முடைய கூட்டணி இந்தியா கூட்டணி என்ற நம்முடைய கூட்டணிக்கு பெயர் வைத்தோம் என்று, யாரும் அந்தப் பெயரை சொல்லக்கூடாது என்று மாற்றி விட்டார்.

இப்படிப்பட்ட ஒரு கேலி கூத்தான ஆட்சி ஒன்றிய ஆட்சி.

எல்லோரும் பேசினார்கள் சனாதனத்தைப் பற்றி உதயநிதி இப்ப பேசவில்லை.

100 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே நாம் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப் பட்டதே இந்த சனாதனத்தை ஒழிக்கத்தான். சமூக நீதியை வளர்க்கத்தான். ஆனால், அதையெல்லாம்விட இன்னும் ஒன்று முக்கியம்.

தொடர்ந்து குரல் கொடுப்போம் இன்னும் 100 ஆண்டுகளானாலும் குரல் கொடுப்போம். ஆனால், அதைவிட மிக மிக முக்கியம்.

### ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசைத் தூக்கி எறிய வேண்டும்

வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைத் தூக்கி எறிய வேண்டும். அதற்கு, நீங்கள் அத்தனை பேரும் உங்களுடைய பங்களிப்பு எப்படி கடந்த சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் அத்தனைபேரும் ஒரே முடிவெடுத்து அ.தி.மு.க அடிமைகளை வீட்டுக்கு அனுப்பினீர்கள்.

2024 தேர்தல் நமக்கு இன்னொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஒன்றிய அரசை இந்த அடிமைகளுடைய எஜமானர்களையும் விரட்டி அடிக்க வேண்டும். அதற்கு நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்புதான் நாடாளுமன்றத் தேர்தல். அதற்கு நீங்கள் தயாராக வேண்டும்.

### மணிப்பூர் மாநிலம் பற்றி எரிகிறது

ஒன்றிய அரசு தன்னுடைய சாதனை என்று சொல்ல ஒன்றுகூட இல்லை. நான் பேசியதைத் திரித்து நான் இனப்படுகொலைக்குக் குரல் கொடுத்தேன் என்று தப்பாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையாகவே இனப்படுகொலை எங்கு நடந்து கொண்டிருக்கிறது. மணிப்பூர் என்ற ஒரு மாநிலம் கிட்டத்தட்ட ஐந்து மாதங்களாக பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இதுவரை 300க்கும் மேற்பட்டோர் இனப்படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த மாநிலத்தை ஆண்டுக் கொண்டிருப்பது யாரு?

பாசிச பா.ஜ.க. அரசு. யாருக்கும் அனுமதி இல்லை. அந்த மாநிலத்திற்குள் செல்வதற்கு. தொலைக்காட்சிகளுக்கெல்லாம்கூட அனுமதி கிடையாது. செய்தி எல்லாம் கிடையாது.

இன்டர்நெட் வசதி கிடையாது. இதைப் பற்றி ஏதாவது ஒரு வார்த்தை பேசினாரா? பாராளுமன்றத்தை கூட்டி நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்த பிறகுதான் ஒன்றிய பிரதமர் மோடி அவர்களே பாராளுமன்றத்திற்கு வருகிறார்.

ஒரு பிரதமர் பாராளுமன்றத்திற்கு வருவதற்கே ஒரு போராட்டம் பண்ண வேண்டியதாக இருக்கிறது. இதுவரை 300க்கும் மேற்பட்டவர்கள் இறந்து இருக்கிறார்கள். தேவாலயங்கள், சர்ச்சுகள் எல்லாம் இடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதைப் பற்றி எல்லாம் நம்முடைய பிரதமர் அவர்கள் வாயை திறக்கவில்லை.

### ஜி-20 மாநாட்டிற்காக குடிசைகளை திரையிட்டு மறைத்தார்கள்

இன்று ஜி20 மாநாடு டெல்லியில் நடந்து கொண்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய தலைவர்கள் எல்லாம் வந்திருக்கிறார்கள். அங்கு வந்து ஒரு காமெடி பண்ணி இருக்கிறார் நம்முடைய பிரதமர் அவர்கள். அங்கு இருக்கக்கூடிய குடிசைப் பகுதிகளையெல்லாம் யாரும் பார்த்து விடக்கூடாது என்று பெரிய பெரிய தட்டியைப் பச்சை நிறத்தில் பெரிய, பெரிய தட்டியை வைத்து அனைத்துக் குடிசைகளையும் மறைத்துள்ளார். இதுதான் ஒன்றிய அரசினுடைய சாதனை.

இன்னொரு சாதனை ஒன்றிய அரசின் ஒன்பது ஆண்டுகால ஊழலை சி.ஏ.ஜி அறிக்கை வெளி வந்திருகிறது. ஒரு கிலோ மீட்டர் ரோடு போடுவதற்கு 250 கோடி ரூபாய் செலவு செய்து இருக்கிறார்கள் என்று யார் சொன்னது சி.ஏ.ஜி. அறிக்கை. அது மட்டு மல்ல,

மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் சில வருடங்களுக்கு முன்பு `ரமணா; என்று ஒரு படம் வந்தது. நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். அதில் செத்துப்போன ஒருத்தரை ஹாஸ்பிடலுக்கு உள்ளே அனுப்பி அவர் உயிரோடு இருக்கிறார் என்று சொல்லி அவரை எப்படியாவது காப்பாற்றி விடுவோம் என்று சொல்லி உறவினர்களிடம் காசை கொள்ளையடிப்பார்கள்.

படத்தில் பார்த்ததை நிஜத்தில் செய்து காட்டி இருக்கிறது இந்த ஒன்றிய பாஜக அரசு. கிட்டத்தட்ட இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு மருத்துவக் காப்பீடு திட்டம் அளித்து இருக்கிறார்கள்.

### சனாதன ஒழிப்பு பொய்ப்புகார்!

இப்படி ஒவ்வொரு ஊழலாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் மூடி மறைக்கத்தான் திசை திருப்பத்தான் என் மீது இந்த சனாதன ஒழிப்புப் பொய் புகாரை கூறிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் உணர வேண்டும்.

நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பல வருடங்களுக்கு முன்பு ஒரு கதை சொல்லி இருக்கிறார்.

அதை நான் இங்கே நினைவு படுத்த விரும்புகின்றேன்.

நம்முடைய வீட்டை நாம் சுத்தம் செய்து வைத்திருக்கிறோம். அந்த வீட்டில் ஒரு நாள் திடீரென்று பார்த்தால் ஒரு விஷப் பாம்பு உள்ளே வந்துவிட்டது. நாம் ஒரு தடியை எடுத்து நாம் அந்த விஷபாம்பை அடித்து விட்டோம். அடித்தவுடன் அந்த விஷப் பாம்பு வெளியே ஓடிவிட்டது. நிம்மதியாக இருக்கிறோம். வீட்டை சுத்தம் செய்து விட்டோம். இனிமேல் அந்தப் பாம்பு வராது என்று. மறுபடியும் பார்த்தீர்களென்றால், இரண்டு நாட்களில் அந்த விஷப்பாம்பு வீட்டுக்குள் வருகிறது.

### விஷப் பாம்பு ஒன்றிய பா.ஜ.க.!

எப்படி வருகிறது என்று வீட்டிற்கு வெளியே போய்ப் பார்த்தால், அழுக்குப் புதர் மண்டி குப்பை கிடக்கிறது. அந்தக் குப்பையிலிருந்து ஒளிந்துக்கொண்டுதான் அந்த விஷப்பாம்பு வெளியே வருகிறது.

இந்த நேரத்தில் இந்தக் கதையை ஒன்றிய அரசியலுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். நான் வீடு என்று சொன்னது நம்முடைய மாநிலம் தமிழ்நாடு. நான் விஷப் பாம்பு என்று சொன்னது ஒன்றிய பா.ஜ.க.

### அ.தி.மு.க. - குப்பை!

வெளியில் இருக்கக்கூடிய அந்தக் குப்பை என்று சொன்னது அடிமை அ.தி.மு.க. நீங்கள் விஷப் பாம்பை ஒழிக்க வேண்டும் என்றால், அடித்து விரட்ட வேண்டும் என்றால், முதலில் வெளியே இருக்கக்கூடிய அந்தக் குப்பையை அகற்ற வேண்டும். சுத்தம் செய்ய வேண்டும். பா.ஜ.க.வை ஒழிக்க வேண்டும் என்றால், அவர்களின் அடிமைகள் அதிமுகவைவையும் சேர்த்து ஒழித்தால்தான் பா.ஜ.க.வை ஒழிக்க முடியும்.

இந்த மணமக்கள் இருவரும் காதல் திருமணம். அதனால் அவர்களுக்கு நிறைய அட்வைஸ் பண்ண தேவையில்லை. அவர்களிடம் ஒரே ஒரு கோரிக்கை.

பிறக்கின்ற குழந்தை ஆண் குழந்தையோ, பெண் குழந்தையோ அழகான தமிழ் பெயர் வைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அத்தனை பேர் சார்பாக, தலைவரின் சார்பாக நான் கேட்டுக் கொண்டு மணமக்கள் இருவரும் வாழ்க வாழ்க வாழ்க என்று வாழ்த்தி வாய்ப்பளித்த அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்திற்கும் எனது நன்றியைக் கூறி விடை பெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் அருகே உள்ள உசிலம்பட்டி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் சமையலராக பணியாற்றி வரும் திருமதி முனியசெல்வி என்ற பெண்மணியின் கணவருக்கும், அக்கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக அப்பெண்மணி சமையல் செய்து மாணவ, மாணவிகளுக்கு வழங்கும் உணவை, மாணவ, மாணவிகள் பெற்றோர்களின் வற்புறுத்தலால் சாப்பிடாமல் தவிர்த்து வந்ததாக கூறப்பட்ட நிலையில் அப்பள்ளிக்கு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, மாணவ – மாணவிகளுக்கு உணவு பரிமாறி அவர்களுடன் அமர்ந்து உணவு உட்கொண்டார். அதனைத் தொடர்ந்து, எப்போதும் வென்றான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு திடீர் விசிட்டாகச் சென்று மருத்துவ பணியாளர்கள் வருகை பதிவேடு, கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார் கனிமொழி கருணாநிதி எம்.பி. உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!... முதல் பக்கத் தொடர்ச்சி

இருக்கிறது. பணம் கிடைத்தவர்கள் மகிழ்ச்சியாக வருவார்கள். பணம் கிடைக்காத மகளிர் யாராவது அந்த இடத்துக்கு வந்து கேட்டால், பதில் சொல்வதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

தனியாக இதற்கென அலுவலர்களை உட்கார வைத்து, இப்படி கேட்க வரும் மகளிரிடம் கோரிக்கை மனுக்களை வாங்கி, 'நாங்கள் பரிசீலிக்கிறோம்' என்பதைச் சொல்லி அனுப்பி வைக்க வேண்டும். இது மிகமிக முக்கியமாகும்.

**திட்டத்திற்கு தனி கவனம் செலுத்த வேண்டும்!**

இதைச் செய்யாவிட்டால், ஏதாவது ஒரு இடத்தில் பிரச்சினை என்றாலும், அது மாநிலம் முழுவதும் பெரிய செய்தியாக மாறிவிடும். அதனால் கவனமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சியர்கள் அனைவருக்கும், இந்த திட்டத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன். அரசுக்கும் வங்கிகளுக்கும் – வங்கிகளுக்கும் பொதுமக்களுக்குமான தொடர்பு சீராக அமைந்து வருகிறதா என்பதை மாதம் தோறும் கண்காணிக்க வேண்டும்.

மாதத்தில் முதல் ஒருவார காலம் இந்த திட்டத்துக்காக தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும் மாபெரும் திட்டம் இது. ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிர் மாதம் தோறும் பயனடையும் திட்டம் இது. எனவே, இத்திட்டம் குறித்து தொடர்ந்து நாம் மக்களிடம் எடுத்துச்சொல்லி வர வேண்டும்.

* மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணம்
* முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

**மாவட்ட ஆட்சியர்கள் அனைவருக்கும், இந்த திட்டத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன். அரசுக்கும் வங்கிகளுக்கும் – வங்கிகளுக்கும் பொதுமக்களுக்குமான தொடர்பு சீராக அமைந்து வருகிறதா என்பதை மாதம் தோறும் கண்காணிக்க வேண்டும்.**

* புதுமைப் பெண் திட்டம் மூலம் மாணவியருக்கு 1000 ரூபாய்
* இளைஞர்களுக்கு நான் முதல்வன் திட்டம்
* மகளிருக்கு மாதம் தோறும் 1000 ரூபாய் கலைஞர் உரிமைத் திட்டம்

– ஆகிய 5 திட்டங்களைப் பற்றியும் திரும்பத் திரும்ப மக்களிடம் எடுத்துச் சென்று கொண்டே இருக்க வேண்டும்.

**மக்கள் பாராட்டைப் பெறுகிற திட்டமாக அமைய வேண்டும்!**

எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், அதனை முறையாகச் செயல்படுத்தினாலே, அதனால் பயனடைந்தவர்கள் மிகப்பெரிய அளவுக்கு நம்மைப் பாராட்டி பேசுவார்கள்.

அத்தகைய பாராட்டுகளை மட்டுமே பெற்றுத்தரும் திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வளர்ச்சி ஆணையர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ.சு. திருவேங்கடம்

### செப்டம்பர் 12 (2022)



1954ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கி கிளாம்பாடி கிளைச் செயலாளராகி, அதனைத் தொடர்ந்து ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், சட்டதிட்டக்குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், சொத்துப் பாதுகாப்புக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் செயலாளர், தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றியக்குழு துணைத் தலைவர், ஒன்றியக்குழு தலைவர், நான்கு முறை கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2017ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் அவர்கள் திருக்கரங்களால் "அண்ணா விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## மணிப்பூரில் மீண்டும் வன்முறை

இம்பால், செப். 13-

மணிப்பூரில், மெய்தி இன மக்களுக்கு பழங்குடியின அந்தஸ்து அளிக்க எதிர்ப்பு தெரிவித்து மே 3 ஆம் தேதி குக்கி, நாகாஸ் உள்ளிட்ட பழங்குடியின மக்கள் நடத்திய பிரம்மாண்ட பேரணியில் ஏற்பட்ட கலவரம், மாநிலம் முழுவதும் பற்றி எரிந்தது. இதனை அடுத்து அங்கு கலவரத்தை கட்டுப்படுத்த துணை ராணுவம் மற்றும் போலிசார் குவிக்கப்பட்டு, கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வன்முறையால் இதுவரை அங்கு160க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், 4 மாதங்களுக்கு மேலாக மணிப்பூரில் வன்முறை சம்பவங்கள் நீடிக்கின்றன. காங்போக்பி மாவட்டத்தில் மீண்டும் ஏற்பட்ட வன்முறையில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. இதில், 3 பேர் உயிரிழந்ததால் அங்கு பதற்றம் நிலவி வருகிறது

## பாரதியார் நினைவு தினம்:

# விவரம் தெரியாமல் ஆளுநர் தமிழிசை பேசுவதா?

## அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அறிக்கை

**சென்னை, செப். 13 -**

**பாரதியார் நினைவு தினத்தையொட்டி தமிழ்நாடு முதல்வர் மீது விவரம் தெரியாமல் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் அறிக்கை வெளியிட்டுள்ளார் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.**



கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களின் அறிக்கை வருமாறு:-

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மீது தெலங்கானா மாநில ஆளுநர் அருமை சகோதரி தமிழிசை சவுந்திரராஜன் அவர்களுக்கு என்ன கோபம் என்று தெரியவில்லை!? தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் தளபதி அவர்களை வம்புக்கு இழுத்து, "பாரதியாருக்கு மரியாதை செலுத்தத் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நேரமில்லையா" என்று கேட்டிருக்கிறார்.

அத்தோடு நிற்கவில்லை அவர். "அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் கைகுலுக்கத் தெரிந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு" என்று கூறியிருக்கிறார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கைகுலுக்கிய இடம், ஒன்றியத்தில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க.வும், அந்த ஆட்சியின் பிரதமராக இருக்கும் நரேந்திர மோடி அவர்களும், ஏன், ஒன்றிய அமைச்சர்களும், "சாதனை" என்று பக்கத்திற்குப் பக்கம் தொலைக்காட்சிக்குத் தொலைக்காட்சி விளம்பரம், பேட்டிகள் வாயிலாகப் பெருமைப்படுத்திக் கொண்ட ஜி20 மாநாட்டு நிகழ்ச்சியில்தான்!

சகோதரி தமிழிசை அவர்களுக்கு ஆளுநர் என்ற முறையில் தன்னை அழைக்காமல் பிரதமரை விட்டு விட்டாரே என கோபமா? அல்லது ஜி20 மாநாட்டிற்கு இப்படியொரு விளம்பரத்தைச் செய்தது வருத்தமா? பாரதியாரையும் வம்புக்கு இழுத்து, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களையும் வசைபாடியிருக்கிறார்.

பாரதியாருக்குப் பெருமை சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் வழியில் நின்று, பாரதியாரைப் பெருமைப்படுத்தும் பல்வேறு பணிகளைத் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எங்கள் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்து வருகிறார்.

பாரதியின் நினைவுநாள், "மகாகவி நாள்"; பாரதி இளங்கவிஞர் விருது வழங்கப்படும் என்று அறிவிப்பு; வாரணாசியில் அவர் வாழ்ந்த வீடு 18 லட்சம் ரூபாய் செலவில் புனரமைப்பு; அதில் மகாகவி பாரதியாரின் மார்பளவு சிலை வைப்பு; சிறு நூலகம், வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் புகைப்படங்கள்; வரலாற்றுப் படைப்புகள் வைப்பு" என எல்லாவற்றையும் நிறைவேற்றி, மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டைச் சிறப்பாகக் கொண்டாடி, அதற்குச் சிறப்பு நூற்றாண்டு மலர் வெளியிட்டதும் முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை சகோதரி தமிழிசை அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

ஆனால் இவை எதுவுமே தெரியாதது போல், ஒருவேளை அண்டை மாநில ஆளுநராகச் சென்று விட்டதால், தமிழ்நாட்டு அரசியல் விவரங்களுடன் தொடர்பு விட்டுப் போனவர் போல் சகோதரி பேசியிருப்பது வேதனைக்குரியது.

அவர் குறிப்பிட்ட பாரதியாரின் நினைவு நாளன்று, தமிழ்நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் மரியாதை செலுத்தியிருக்கிறார்கள். அவரது பிறந்தநாளன்று முதலமைச்சர் அவர்களே மரியாதை செலுத்தி, நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.

ஆகவே தெலங்கானா மாநில ஆளுநராக இருக்கும் சகோதரி, தமிழ்நாட்டிற்கு வரும்போதெல்லாம் ஏதாவது ஒரு பேட்டி கொடுக்க வேண்டும் என்பதற்காக, தன் அரசியல் நிலைப்பாட்டைத் தமிழ்நாட்டில் தக்க வைத்து, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஆசையை டெல்லி மேலிடத்திற்கு வெளிப்படுத்தும் விதமாக, தவறான பேட்டிகளைக் கொடுத்து, பாரதியாரின் பெருமையை மட்டுமல்ல அனைத்துக் கவிஞர்களின் புகழையும் பரப்பி வரும் திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தெலங்கானாவிலிருந்து தமிழ்நாடு வந்தவுடன், குறைந்தபட்சம் கடந்தகால பத்திரிக்கைச் செய்திகளைப் படித்து விட்டு தி.மு.க. அரசைக் குறைகூறுங்கள். அப்படியும் படிக்க இயலவில்லை என்றால், ஒரு மாநிலத்திற்கு இரு மாநிலம் என்ற நிலையில், ஆளுநர் பொறுப்பை வகிக்கும் சகோதரி தன் அதிகாரிகளிடமாவது, "அவ்வப்போது தமிழ்நாடு அரசியல் நிலவரங்களைச் சொல்லுங்கள்" என்று கேட்டுத் தெரிந்து கொண்டு, தி.மு.க. மீது ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வையுங்கள் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# பா.ஜ. மாநாடாக மாறிய ஜி20 உச்சி மாநாடு!

## அரசியல் விமர்சகர்கள் கருத்து!

புதுடெல்லி, செப்.13-

டெல்லியில் நடந்த ஜி 20 உச்சி மாநாட்டை பா.ஜ.வின் பிரச்சார மாநாடாகவே பிரதமர் மோடி மாற்றி விட்டதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஜி20 அமைப்பின் தலைவர் பதவி சுழற்சி முறையில் உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்படும். இதன்படி 2023ம் ஆண்டுக்கான தலைவர் பதவி இந்தியாவுக்கு கிடைத்தது. ஆனால், இந்த பதவி பிரதமர் மோடிக்கு உலக நாடுகள் அளித்த அங்கீகாரம் என்று பா.ஜ. பிரச்சாரம் செய்யத் துவங்கியது. ஜி 20 இந்திய தலைமைக்காக வடிவமைக்கப்பட்ட சின்னத்தில் பா.ஜ.வின் தேர்தல் சின்னமான தாமரை இடம் பெற்றிருந்தது சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. ஆனால், அதை பற்றியெல்லாம் கவலைப்படாமல் தாமரை சின்னத்தை தொடர்ந்து பயன்படுத்தினர். நாடு முழுவதும் கடந்த பல மாதங்களில் ஜி20 அமைப்பின் பல்வேறு கூட்டங்கள் நடத்தப்பட்டது. இதையும் மோடி அரசின் சாதனையாகவே திட்டமிட்டு பிரச்சாரம் செய்து வந்தனர்.

இந்த நிலையில் இந்தியாவின் தலைமையின் கீழ் டெல்லியில் கடந்த 9 மற்றும் 10ம் தேதி உச்சி மாநாடு நடந்தது. இதில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் உள்ளிட்ட உலக தலைவர்கள் பங்கேற்றனர். இந்த உச்சி மாநாடு பா.ஜ.வின் மாநாடு போலவே நடத்தப்பட்டதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். உச்சி மாநாட்டையொட்டி 9ம் தேதி இரவு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஜி20 தலைவர்களுக்கு விருந்தளித்தார். இந்த விருந்தில் பங்கேற்க அனைத்து மாநில முதல்வர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அதே நேரத்தில், காங்கிரஸ் தலைவ ரும் மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட

**காங்கிரஸ் முதல்வர்கள் புறக்கணிக்கப்பட்டனர்**

ஜி20 விருந்தில் மு.க. ஸ்டாலின்(தமிழ்நாடு), நிதிஷ்குமார்(பீகார்), மம்தா பானர்ஜி(மேற்கு வங்கம்), ஹேமந்த் சோரன் (ஜார்க்கண்ட்), உள்ளிட்ட பல மாநில முதல்வர்கள் பங்கேற்றனர். ஆனால், சுக்விந்தர் சிங் சுக்கு(இமாச்சல்) தவிர மற்ற காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் அசோக் கெலாட்(ராஜஸ்தான்), பூபேஷ் பாகல்(சட்டீஸ்கர்), சித்தராமையா (கர்நாடகா) பங்கேற்கவில்லை. கேரள முதல்வர் பினராயி விஜயன், தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவும் வரவில்லை.

எதிர்க்கட்சி தலைவர்கள் யாருக்கும் அழைப்பு அனுப்பப்படவில்லை. இது மோடியின் மனநிலையை காட்டியதாக காங்கிரஸ் விமர்சித்தது. இந்த உச்சி மாநாட்டை பா,ஜ,வின் சொந்த மாநாடு போல் நடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கார்கே போன்ற மூத்த தலைவர்கள் பைடன், ரிஷி சுனக் போன்ற உலகத் தலைவர்களை சந்திப்பதை தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் அழைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஜி 20 உச்சி மாநாட்டின் வெற்றி நாயகனாக பிரதமர் மோடியை சித்தரித்து பிரசாரம் செய்ய பா.ஜ. யுக்தி வகுத்துள்ள தாக அரசியல் பார்வையாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### லேணா (எ) இரா. இலக்குமணன்

### செப்டம்பர் 13 (1998)



கழகம் தொடங்கிய காலந்தொட்டு உறுப்பினராகி, சுமார் நாற்பது ஆண்டு காலமாக தனது பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்டவர்.

திருத்துறைப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக ஒரு முறையும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதோடு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று ஆறு மாத சிறைவாசம் அனுபவித்தார். மொழிப்போர் தியாகி என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சனாதனம் பற்றிய அமைச்சர் உதயநிதியின் பேச்சு

# மகாத்மா காந்தியின் கருத்துக்களை எதிரொலிக்கின்றது!

### "நியூஸ் கிளிக்" இணைய இதழில் எஸ்.என்.சாஹூ சிறப்புக் கட்டுரை

**சனாதனம் தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் அண்ணல் காந்தி அடிகளின் கருத்துக்களை எதிரொலிப்பதாக இருக்கின்றன என்று 'NEWS CLICK' இணையதள இதழில் எஸ்.என். சாஹூ எழுதியுள்ளார்.**

சனாதன தர்மத்தில் தி.மு.க.வினருக்கு எதிரான பா.ஜ.க.வின் நிலைப்பாடு விவேகானந்தர், காந்தி மற்றும் அம்பேத்கரின் பார்வையை ஏற்க மறுக்கிறது என்று 'நியூஸ் கிளிக்' இணைய இதழில் எஸ்.என். சாஹூ தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு:-

செப்டம்பர் 2 அன்று, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கம் நடத்திய சனாதன ஒழிப்பு மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழக முன்னணித் தலைவரும், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், சனாதன தர்மத்தை எதிர்க்கும் முந்தைய அணுகுமுறையில் இருந்து முற்றிலும் விலகி, 'சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும்' என்ற துணிச்சலான நிலை ப்பாட்டிற்காக ஏற்பாட்டாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

"சில விஷயங்கள் உள்ளன, அவற்றை நாம் ஒழிக்க வேண்டும், எதிர்க்க முடியாது" என்றார் உதயநிதி. இந்தச் சூழலில், "கொசுக்கள், டெங்கு, கொரோனா [வைரஸ்] மற்றும் மலேரியா ஆகியவை நம்மால் எதிர்க்க முடியாத விஷயங்கள் அவற்றை நாம் ஒழிக்க வேண்டும். சனாதனமும் இப்படித்தான். எதிர்க்காமல் இருக்க அல்ல சனாதனத்தை ஒழிப்பதே நமது முதல் பணியாக இருக்க வேண்டும்," என்று அவர் வலியுறுத்தினார்.

கூர்மையான வார்த்தைகள் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது, ஆனால் அவை ஒவ்வொரு ஆண்டும் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டின் கருப்பொருளுடன் ஒத்திசைந்தன. சங்கம் சனாதன தர்மத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக, இந்த ஆண்டு,பெண்களின் நிலையை இழிவுபடுத்துதல் மற்றும் சாதியின் கீழ்மட்டத்தில் பிறந்தவர்களின் கொடூரமான பாகுபாட்டை மன்னித்தல் போன்ற பல நூற்றாண்டுகளாக அது உருவாக்கிய தொடர்ச்சியான பிரச்சினைகளுக்குதீர்வு காண வலியுறுத்துவது என்று முடிவு செய்தது.

கடுமையான சனாதன தர்மம் பெண்கள் மற்றும் உயர்சாதி அல்லாத சாதிகளை குறிவைக்கிறது.

சனாதன தர்மம் "நித்தியமானது" மற்றும் மாறாதது என்பதால், இந்து மதத்தின் மையமாக, அது ஒரு உயர்ந்த நிலையை அடைந்துள்ளது, அதை யாராலும் விசாரிக்கவோ மாற்றவோ முடியாது என்று உதயநிதி கூறினார். இத்தகைய கடினத்தன்மை மக்களை சாதியின் எல்லைக்குள் அடக்கி, சமத்துவமின்மை மற்றும் ஒடுக்குமுறையை நிலைநிறுத்தி, தாராளமயத்தை நசுக்கியது.

சனாதன தர்மம், "...கணவனை இழந்த பெண்களை நெருப்பில் தள்ளியது [முந்தைய சதி பழக்கம்]... விதவைகளை வருத்தி, அவர்களை வெள்ளைப் புடவை அணியச் செய்தது" மற்றும் குழந்தைத் திருமணங்களை நிலைநிறுத்தியது என்று அவர் விவரித்தார்.

**உதயநிதி அரசியலுக்கு எதிராக பா.ஜ.க.**

சனாதன தர்மத்திற்கும் "கொசுக்கள், டெங்கு, கொரோனா மற்றும் மலேரியாவிற்கும்" இணையாக உதயநிதியை விமர்சித்து அதை ஒழிக்கக் கோரியதற்காக பா.ஜ.கவும் அதன் தலைவர்களும் விமர்சித்தனர். பா.ஜ.க.வின் தகவல் தொழில் நுட்பப் பிரிவு தலைவர் அமித் மாளவியா தனது கருத்துகளுக்கு ஒரு வினோதமான திருப்பத்தை அளித்தார், இது சனாதனிகளின் "இனப்படுகொலைக்கான" அழைப்பு என்று கூறினார், அவரைப் பொறுத்தவரை, "பாரதத்தின் 80% மக்கள்" சனாதானிகளாக உள்ளதாக குறிப்பிடுகிறார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ராஜஸ்தானில் நடைபெற்ற பேரணியில் பேசியபோது, சனாதன தர்மம் குறித்து உதயநிதியின் வார்த்தைகள், தி.மு.க.வில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி கூட்டணியான இந்தியாவின் கருத்தை பிரதிபலிக்கிறது என்று கூறினார். "ஓட்டு வங்கி மற்றும் திருப்தி அரசியலுக்காக, இந்த மக்கள் சனாதன தர்மத்தை ஒழிக்க அழைப்பு விடுத்துள்ளனர்" என்று அமித் ஷா கூறினார். இது நமது கலாச்சாரம், வரலாற்றை அவமதிக்கும் செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



பிரதமர் நரேந்திர மோடி கூட, சனாதன தர்ம "விவாதத்திற்கு" உரிய முறையில் பதிலளிக்குமாறு தனது அமைச்சர்களை வற்புறுத்தினார், மேலும் உத்தரபிரதேசத்தில் உதயநிதிக்கு எதிராக எஃப்ஐஆர் பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பி.ஜே.பி.யின் ஆக்ரோஷமான பதிலடி, இந்து மதத்தில் சேருபவர்களின் அன்றாட வாழ்வில் சனாதன தர்மத்தின் பெயரில் உள்ள வேறுபாடுகளையும் பாகுபாடுகளையும் நிலைநிறுத்திக் கொண்டே, தேர்தல் நோக்கங்களுக்காக ஹிந்து ஏகத்துவத்தை உருவாக்க, மதப் பிரச்சினைகளில் மக்களைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சாதியத் தடைகள் இந்து மதத்திற்குள் ஆழமான தவறுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதில் சந்தேகமில்லை, ஆனால் சாதிப் படிநிலையில் உள்ளார்ந்த பாகுபாடு அகற்றப்படும் வரை இவற்றை நிரப்ப முடியாது.

தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, உதயநிதி கோயில்களை இடிப்பதாகவும், சனாதன தர்மத்தைப் பின்பற்றுபவர்களைக் கொல்வதற்கும் சமமான அறிக்கைகளை வெளியிடுகிறார் என்று குற்றம் சாட்டினார்.

திராவிட இயக்கம் சமத்துவம் மற்றும் சமூக நீதி, தமிழ்நாட்டின் ஆட்சியின் மையக் கருத்துக்கள் மற்றும் சனாதன தர்மத்தின் அடிப்படையில் இந்துத்துவாவை கடுமையாக வேறுபடுத்துவது ஆகியவற்றின் அடிப்படையிலானது என்று உதயநிதி தெளிவுபடுத்தியுள்ளார்.

**தி.மு.க. எப்போதும் சனாதன தர்மத்தை எதிர்த்தது**

பா.ஜ.க., தி.மு.க. மற்றும் 'இந்திய'க் கூட்டணியைக் குறிவைத்து, நன்கு அறியப்பட்ட மற்றும் புதிய கருத்துகளை வெளிப்படுத்துவது மிகவும் விசித்திரமானது. அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது தென்னிந்தியக் கட்சியை தேசிய ஜனநாயகக் கூட்டணியில் (NDA) கொண்டு வந்து தி.மு.க.வுடன் 1999ம் ஆண்டு கூட்டணி வைத்ததன் மூலம் பாஜக தேர்ந்தெடுக்கப்பட்ட மறதியை உருவாக்கியுள்ளது போல் தெரிகிறது. சனாதன தர்மத்திற்கு எதிரான தி.மு.க.வின் நிலைப்பாடு 1920களின் தொடக்கத்தில் தொடங்கிய திராவிட இயக்கத்தில் இருந்து அறியலாம். சாதி, பாலினம், மத வேறுபாடுகள் இன்றி அனைவருக்கும் சமத்துவம், சம வாய்ப்புகள், சமூக நீதி ஆகியவற்றை நிலைநாட்ட தி.மு.க. தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

எனவே, சனாதன தர்மத்திற்கு எதிரான அவரது கருத்துக்கள் தொடர்பாக உதயநிதியையும் அவரது கட்சியையும் குறிவைக்கும் பா.ஜ.க. தலைமை அதன் பக்கச்சார்பற்ற மற்றும் ஆழமற்ற அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது.

**சுவாமி விவேகானந்தரின் நிலைப்பாடு**

சனாதன தர்மத்தைப் பற்றிய உதயநிதியின் கருத்துக்கள் சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆகியோரை நினைவூட்டுகின்றன. சாஸ்திரங்கள் அல்லது வேதங்கள், சனாதன தர்மத்தின் அடித்தளமாக அமைகின்றன. அவற்றுள் ஒன்று மனுஸ்மிருதி ஆகும், அம்பேத்கர் மேல்தட்டு அல்லாத சாதிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை அதன் ஒப்புதலை நிராகரித்தார்.

ஒருவேளை, இந்து மதத்தின் பல பண்புகளை (பெரும்பாலும் சனாதன தர்மத்துடன் இணைத்து) போற்றிய புகழ்பெற்ற இந்து துறவி விவேகானந்தரை பி.ஜே.பி. தவிர்த்திருக்காது, ஆனால் அது தன்னைப் பின்பற்றுபவர் களில் ஒரு பிரிவினரை எப்படி சீரழித்தது என்பதை விமர்சிக்கும் வாய்ப்பை இழக்கவே இல்லை.

1893 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதி அமெரிக்காவில் இருந்து தனது சீடர் அளசிங்கப் பெருமாளுக்கு எழுதிய கடிதத்தில், "இந்துமதம் போன்ற உயர்ந்த விகாரத்தில் மனிதகுலத்தின் மாண்பை உலகில் எந்த மதமும் போதிக்கவில்லை" என்று எழுதினார். ஆனால், "இந்து மதத்தைப் போல பூமியில் எந்த மதமும் ஏழைகள் மற்றும் தாழ்த்தப் பட்டவர்களின் கழுத்தில் மிதிக்கவில்லை" என்று அவர் அப்பட்டமாகப் பார்த்தார்.

2023-ல் விவேகானந்தர் இது பற்றி இந்தியாவில் இருந்து எழுதிக் கொண்டிருந்தால், உதயநிதியைப் கண்டித்தது போலவே பா.ஜ.க.வின் தகவல் தொழில் நுட்பப் பிரிவு விவேகானந்தரையும் கண்டித்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கும்.



**எஸ்.என்.சாஹூ**
முன்னாள் குடியரசுத் தலைவர்
கே.ஆர்.நாராயணன் அவர்களின்
சிறப்புப் பணி அதிகாரி

**காந்தி சனாதன தர்மம்**

காந்தியின் தேசத்தைச் சேர்ந்தவன் நான் என்று வெளிநாட்டில் இருக்கும்போது பிரதமர் பெருமிதம் கொள்கிறார், ஆனால் அவரது இந்த வார்த்தைகளுக்காக காந்தியை கடுமையாக விமர்சிக்கு மாறு அவர் தனது மந்திரிகளைக் கேட்டுக் கொண்டிருப்பார்: "சனாதனவாதிகளின் கோட்டையை டைனமைட் மூலம் தரைமட்டமாக்குவேன். தீண்டத்தகாத வர்கள் அனைவரும் ஒன்றாகி ஒன்றுபட்டு இருந்தால் என்று மகாத்மா காந்தி குறிப்பிட்டிருந்ததை பிரதமர் தெரிவித்துள்ளார்.

காந்தி மேலும் கூறினார், "ஒட்டுமொத்த தீண்டத்தகாத சமூகமும் ஒன்றுபட்டு சனாதனவாதிகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்." 1932 செப்டம்பர் 22 அன்று, டாக்டர் பி.ஆர். அம்பேத்கருடன், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான தனித் தொகுதிகள் குறித்த விவாதத்தின் போது, காந்தி அதை எதிர்த்தார். ஆயினும்கூட, காந்தி 2023 இல் அதுபற்றி பேசியிருந்தால், இந்துத்துவா கும்பல் மற்றும் பாஜக தலைவர்கள் பல எஃப்ஐஆர்களை வீசியிருப்பார்கள் மற்றும் அவரது உயிருக்கு பல்வேறு அச்சுறுத்தல்களை வீசியிருப்பார்கள்.

சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்ற உதயநிதியின் நம்பிக்கையில் காந்தியின் கருத்துகள் எதிரொலிக்கின்றன.

உண்மையில், காந்தி அந்தத் தளத்தில் தீண்டாமைக்கு எதிராக இடைவிடாமல் பிரச்சாரம் செய்யும் போது தன்னை ஒரு சனாதானி இந்து என்று அழைத்துக் கொண்டார். கோவில்களில் தலித் நுழைவு மற்றும் அனைத்து மதங்களையும் மதிக்க வேண்டும் என்று போராடினார். தீண்டாமை நீடித்தால், சனாதன தர்மம் அழிந்துவிடும் என்று அடிக்கடி கூறி வந்தார்.

பல சந்தர்ப்பங்களில், காந்தி தனது இலட்சியங்களைப் பின்பற்றியதற்காக உடல் ரீதியாக தாக்கப்பட்டார். அம்ரித்லால் தக்கருக்கு எழுதிய கடிதத்தில், "சனாதனிஸ்டுகள் என்று அழைக்கப்படுபவர்கள் விழித்துக் கொள்ளத் தவறி, தங்கள் வீண்பெருமையால், வெகுஜனங்களின் உதவியுடன் குண்டடித்தனத்தை நாடினால், இந்துத்துவம் அழியட்டும்" என்று எழுதினார்.

தலையை துண்டிப்பதற்காக ரூ.10 கோடி வழங்கப்படும் என்ற அறிவிப்பு உட்பட உதயநிதிக்கு அச்சுறுத்தல் வந்த சூழலில் காந்தியின் வார்த்தைகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

**சனாதன தர்மம் பற்றி பி.ஆர்.அம்பேத்கர்**

1937 ஆம் ஆண்டில், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் தனது வரலாற்று உரையை எழுதினார், "சாதி ஒழிப்பு", ஒரு வருடம் கழித்து வெளியிடப்பட்டது, "டைனமைட்" சனாதன தர்மத்தின் அடித்தளமாக இருக்கும் வேதங்களை தகர்க்க வேண்டும் என்ற அறிக்கையுடன். சமுதாயத்தை முற்போக்கான பாதையில் மாற்றுவதற்கு பகுத்தறிவு மற்றும் ஒழுக்கத்தைப் பயன்படுத்திய சீர்திருத்தவாதிகள், ஜாதியின் பாதுகாவலர்களால் அது பகுத்தறிவுக்கும் ஒழுக்கத்திற்கும் பொருந்துமா என்பதை விளக்க முடியாது என்று அவர் கூறினார்.

எனவே, "நீங்கள் அமைப்பில் ஒரு மீறலைக் கொண்டு வர விரும்பினால், நீங்கள் எந்தப் பகுதியையும் பகுத்தறிவுக்கு மறுக்கும் வேதங்கள் மற்றும் சாஸ்திரங்களுக்கு டைனமைட்டைப் பயன்படுத்த வேண்டும்; அறநெறிக்கு எந்தப் பகுதியையும் மறுக்கும் வேதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும்" "சுருதிகள் மற்றும் ஸ்மிருதிகளின் மதத்தை நீங்கள் அழிக்க வேண்டும்" என்று அம்பேத்கர் எழுதினார்.

அம்பேத்கர் இன்று உயிருடன் இருந்திருந்தால், கடுமையான விதிகளின் கீழ் நீதிமன்ற வழக்குகளை எதிர்கொள்வதைத் தவிர, அவரது உயிருக்கும் அச்சுறுத்தல் வந்திருக்கும்.

'சாதி ஒழிப்பு குறிப்பாக சனாதன தர்மத்தைத் தவிர்த்து, சமூக மாற்றம் மற்றும் முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்து சமுதாயத்தின் முன்னேற்றம் அதன் மரபுகளின் பரிணாம வளர்ச்சியில் இணைக்கப்பட வேண்டும்' என்று அவர் நம்பினார்.

அவர் கூறினார், "நிலையானது, நிலையானது எதுவுமில்லை, சனாதனமானது எதுவுமில்லை என்பதை இந்துக்கள் அங்கீகரிக்கும் காலம் வரவில்லையா என்பதை சிந்திக்க வேண்டும்; எல்லாமே மாறிக் கொண்டே இருக்கிறது, அந்த மாற்றம் என்பது தனிமனிதர்களுக்கும் சமூகத்திற்கும் வாழ்க்கைச் சட்டம்.

"மாறிவரும் சமுதாயத்தில், பழைய விழுமியங்களின் ஒரு நிலையான புரட்சி இருக்க வேண்டும், மேலும் ஆண்களின் செயல்களை அளவிடுவதற்கான தரநிலைகள் இருக்க வேண்டும் என்றால், அந்தத் தரங்களைத் திருத்துவதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதை இந்துக்கள் உணர வேண்டும்" என்றார் அம்பேத்கர். "

1930 களின் நடுப்பகுதியில் இருந்து இந்த வலிமை வாய்ந்த கவனிப்புகள் உதயநிதியின் கூற்றுகளில் எதிரொலித்தது, சனாதன தர்மம், அதன் மாறாத பண்புகளுடன், இந்து சமூக அமைப்பை இறுக்கமாக்கியது மற்றும் சாதியத்தின் மூலம் சமத்துவமின்மை மற்றும் ஒடுக்குமுறையை நிலைநிறுத்தியது, அது சனாதனமாக கருதப்படுகிறது.

சமீபகாலமாக, பிரதமர் மோடி உட்பட பாஜக தலைவர்கள் அம்பேத்கரை அரவணைத்து, காங்கிரஸ் அவரை ஓரங்கட்டப்பட்டாலும், சமகால வரலாற்றில் அவருக்குப் பெருமை சேர்த்திருப்பதாகக் கூறுகிறார்கள். சனாதன தர்மத்தின் ஏற்றத்தாழ்வு மற்றும் அநீதியை விமர்சித்த சுவாமி விவேகானந்தர், காந்தி மற்றும் அம்பேத்கர் ஆகியோருக்கு மோடி செவிசாய்க்க முடியுமா ?

சனாதன தர்மத்தில் மாற்றங்களை எதிர்த்தவர்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ராஜா ராம்மோகன் ராய், சுவாமி தயானந்த சரஸ்வதி, நாராயண குரு மற்றும் பலர் மேற்கொண்ட சீர்திருத்தங்களையும் எதிர்த்தனர். சனாதன தர்மம் குறித்த உதயநிதியின் அறிக்கைகளை எதிர்ப்பதன் மூலம், பிரதமர் இந்தியாவின் அரசியலமைப்பு பார்வைக்கும், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி மற்றும் பி.ஆர்.அம்பேத்கர் உள்ளிட்ட மாபெரும் சீர்திருத்தவாதிகளின் உலகப் பார்வைக்கும் எதிரான நிலைப்பாட்டை எடுக்கிறார்.

இவ்வாறு எஸ்.என்.சாஹூ தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். ●



மதுரை மாநகராட்சி மேலவைத்தியநாதபுரம் நான்குமுனை சந்திப்பு அருகில் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர மின்விளக்கை மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன்,மாநகராட்சி ஆணையாளர் கே.ஜே.பிரவீன்குமார் ஆகியோர் நேற்று முன்தினம் (11.09.2023) பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். உடன் துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர் திருமதி.சரவணபுவனேஸ்வரி, மாமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு அரசின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் இராணிப்பேட்டை நகராட்சி பகுதியில் கழிவறைகள் கட்ட ரோகா பாத்ரூம் ப்ராடக்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பங்களிப்புத் தொகையாக ரூ.19.50 இலட்சம் இராணிப்பேட்டை நகராட்சிக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தியிடம் ரவி ராஜகோபாலன்,பத்மகுமார் ,சதீஷ் பார்த்திபன் ஆகியோர் வழங்கினார்கள். இதில் இராணிப்பேட்டை நகரமன்ற தலைவர் திருமதி. சுஜாதா வினோத், நகராட்சி ஆணையர் விநாயகம் உடனிருந்தனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (12.9.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில், மேக்சிவிஷன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஐ ஹாஸ்பிடல்ஸ் பிரைவேட் லிமிடெட் (Maxivision Super Speciality Eye Hospitals Private Limited), 400 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாட்டில் நிலை 2 மற்றும் நிலை 3 நகரங்களில் 100 கண் சிகிச்சை மையங்கள் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசிற்கும், மேக்சிவிஷன் குழுமத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைச் செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, மேக்ஸிவிஷன் நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் ஜி.எஸ்.கே.வேலு, தலைமை செயல் அலுவலர் வி.எஸ்.சுதீர், தலைமை மருத்துவ இயக்குநர் மருத்துவர் ஷிபு வர்க்கீ, இயக்குநர் எஸ்.பெர்னாட்டு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதிக்கான வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் பேசினார். முன்னாள் ஒன்றிய இணை அமைச்சரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகத்ரட்சகன். மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி ,மாவட்ட கழக செயலாளரும்அணைக்கட்டு தொகுதி எம்.எல். ஏவுமான ஏ.பி. நந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் டி .எம் .கதிர் ஆனந்த், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார், மாநகர அவை தலைவர் சூரி என்ற கோவிந்தன், ஒன்றிய குழு தலைவர் வேல் முருகன், பகுதி செயலாளர்கள் வன்னிய ராஜா காந்திநகர் பரமசிவம், மாவட்ட உதயநிதி ஸ்டாலின் ரசிகர்மன்ற தலைவர் டீட்டாசரவணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சரவணன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் முரளி பாஸ்கர், உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஒட்டன்சத்திரம் ஒன்றிய பகுதிகளில்

# ரூ.292.72 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்து அடிக்கல் நாட்டினார்!

ஒட்டன்சத்திரம், செப். 13 -

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட சிந்தல வாடம்பட்டி, சத்திரப்பட்டி, வேலூர்அன்னப்பட்டி, வீரலப்பட்டி, காவேரியம்மாபட்டி, அம்பிளிக்கை, குள்ளவீரன்பட்டி, லெக்கையன்கோட்டை, சாலைப்புதூர், புதுஅத்திக்கோம்பை, பெயில்நாயக்கன்பட்டி, காளாஞ்சிபட்டி உள்ளிட்ட ஊராட்சிகளில் தார்சாலை, கலையரங்கம், பயணியர் நிழற்குடை, நியாயவிலைக்கடை உள்ளிட்டவைகளுக்கு அடிக்கல்நாட்டியும், கலையரங்கம், நியாயவிலைக்கடை, அங்கன்வாடி மையம் உள்ளிட்ட ரூ.292.72 கோடி மதிப்பிலான திட்டப்பணிகளை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கோட்டாட்சியர் சரவணன், மாவட்ட அவைத்தலைவர் மோகன், நகர செயலாளர் வெள்ளைச்சாமி, நகர் மன்ற தலைவர் திருமலைசாமி, செயற்குழு உறுப்பினர் கண்ணன், ஒன்றிய பெருந்தலைவர் அய்யம்மாள், துணைப் பெருந்தலைவர் காயத்திரிதேவி, ஒன்றிய செயலாளர் தர்மராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமராஜ், வேதா, மாவட்ட கவுன்சிலர் சங்கீதாபழனிச்சாமி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம்,

சிவக்குமார், சிவ பாக்கியம், ராமசாமி, அவைத்தலைவர் செல்வராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி, ஊராட்சி மன்ற தலைவர்கள் சாரதா சிவராஜ், பன்னீர்செல்வம், வேலுச்சாமி, செல்லம்மாள்தண்டபாணி, சிவராமகிருஷணன், அமுதா உள்ளிட்ட நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசின் அனைத்து திட்டங்களையும் ஆதரிப்பதென்பது

# அ.தி.மு.க. தனது சுயத்தை இழந்து விட்டதையே காட்டுகிறது!

## "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, செப். 13 -

மாநில உரிமைகள் ஒன்றிய பா.ஜ.க. அரசினால் காலில் போட்டு மிதிக்கப்படுவதை கண்டிக்காதது மட்டுமல்ல; அனைத்தையும் ஆதரிப்பது என்பது அ.தி.மு.க. தனது சுயத்தை இழந்து விட்டது என்பதையே காட்டுகிறது என "தீக்கதிர்" நாளேடு 12.09.2023 தேதியிட்ட இதழில் "சுயத்தை இழந்ததால் பல்லிளிக்கும் சுயநலம்" என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது–



தீக்கதிர்

2023 செப்டம்பர் 12 செவ்வாய்க்கிழமை

சுயத்தை இழந்ததால் பல்லிளிக்கும் சுயநலம்

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மக்களவைத் தேர்தலுக்கு தயாராகுமாறு தமது கட்சி நிர்வாகிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார். மக்களவைத் தேர்தலுக்கு அனைத்துக் கட்சிகளும் தயாராகி வரும் நிலையில் இது புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றே.

ஆனால் சந்தடி சாக்கில் நாடு முழுவதும் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டம் அமல்படுத்தப் பட்டால் அடுத்தாண்டு மக்களவைத் தேர்தலுடன் தமிழக சட்டப் பேரவைக்கும் தேர்தல் நடத்தப்படலாம். அதற்கும் சேர்த்து தயாராக வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்பதை பரிசீலிக்க

அது வருமாறு:

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மக்களவைத் தேர்தலுக்கு தயாராகுமாறு தமது கட்சி நிர்வாகிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார். மக்களவைத் தேர்தலுக்கு அனைத்துக் கட்சிகளும் தயாராகி வரும் நிலையில் இது புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றே.

ஆனால் சந்தடி சாக்கில் நாடு முழுவதும் ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டம் அமல்படுத்தப் பட்டால் அடுத்தாண்டு மக்களவைத் தேர்தலுடன் தமிழக சட்டப் பேரவைக்கும் தேர்தல் நடத்தப்படலாம், அதற்கும் சேர்த்து தயாராக வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்பதை பரிசீலிக்க முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படும் என ஒன்றிய அரசு அறிவித்தவுடன் பா.ஜ.க.வை விட வேகமாக இந்த அறிவிப்பை எடப்பாடி பழனிசாமி ஆதரித்து அறிக்கை வெளியிட்டார்.

கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க.- பா.ஜ.க. கூட்டணி தோற்கடிக்கப்பட்டு தி.மு.க. தலைமையிலான அணி வெற்றி பெற்றது. மக்களால் ஜனநாயகப்பூர்வமாக தேர்வு செய்யப்பட்டு தி.மு.க. மாநில ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ளது. ஒரு ஆக்கப்பூர்வ எதிர்க்கட்சியாக செயல்படுவதற்குப் பதிலாக பதவிக் காலத்தை நிறைவு செய்வதற்கு முன்னாலேயே தி.மு.க. தலைமையிலான மாநில அரசு கலைக்கப்பட வேண்டும் என்ற சுயநலத்தின் காரணமாகவே எடப்பாடி பழனிசாமி ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற அறிவிப்பை வரவேற்றுள்ளார்.

2018ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும் இதே ஆலோசனை மோடி அரசால் முன் வைக்கப்பட்டது. அப்போது அதை எதிர்த்த அ.தி.மு.க., இப்போது ஆதரிப்பதன் நோக்கம் நாடு எக்கேடு கெட்டாலும் பரவா யில்லை; தி.மு.க. அரசு நீடிக்கக் கூடாது என்பதுதான். எப்போது தேர்தல் நடந்தாலும் பா.ஜ.க.வுடன் கூடிக் குலாவும் அ.தி.மு.க. மண்ணைக் கவ்வும் என்பது உறுதி.

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்று பா.ஜ.க. கூறுவ தன் பின்னணியில் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பையே சீர்குலைத்து எதேச்சதிகா ரத்தை நோக்கி நாட்டை நடத்திச் செல்லும் ஆர்.எஸ்.எஸ். திட்டம் தான் அடங்கியுள்ளது. மாநிலக் கட்சியான அ.தி.மு.க. இந்தத் திட்டத்தை எதிர்த்திருக்க வேண்டும்.

ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசினால் கொண்டு வரப்படும் எந்தத் திட்டத்தையும் சட்டத்தையும் அ.தி.மு.க. எதிர்ப்பதில்லை. வேளாண் திருத்தச் சட்டம் துவங்கி குடியுரிமை திருத்தச் சட்டம் வரை அனைத்தையும் ஆதரிக்கிறது அ.தி.மு.க. மாநில உரிமைகள் ஒன்றிய அரசினால் காலில் போட்டு மிதிக்கப்படுவதை கண்டிக்காதது மட்டுமல்ல; அனைத்தையும் ஆதரிப்பது என்பது அந்தக் கட்சி தனது சுயத்தை இழந்து விட்டது என்பதையே காட்டுகிறது. அ.தி.மு.க.வின் குறுகிய 'அரசியல் கண்ணோட்டம் அந்தக் கட்சிக்கும் நல்லதல்ல.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அயோத்தியில் ராமர் கோயில் திறப்பின் போது

# கோத்ரா போன்ற சம்பவம் நிகழலாம்!

## உத்தவ் தாக்கரே எச்சரிக்கை!

மும்பை, செப். 13 -

அயோத்தியில் புதிதாக கட்டப்படும் ராமர் கோயில் திறக்கப்படும் போது கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் போன்ற சம்பவம் நிகழலாம் என்றும் உத்தவ் பாலாசாகேப் தாக்கரே சிவசேனா கட்சி தலைவர் உத்தவ் தாக்கரே எச்சரித்துள்ளார். அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டு வருகிறது. இந்த



கோயில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் திறக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

இந்த விழாவிற்கு அரசு நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான மக்கள் ரயில்களிலும் பஸ்களிலும் இதர வாகனங்களிலும் அயோத்திக்கு வரவழைக்கலாம் என்றும் உத்தவ் தாக்கரே தெரிவித்தார்.

அவர்கள் திரும்பி வரும் போது கோத்ரா போன்ற சம்பவம் நிகழக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார். 2002ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ம் தேதி கரசேவகர்கள் அயோத்தியில் இருந்து சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயிலில் திரும்பிக் கொண்டிருந்தனர். குஜராத் மாநிலம் கோத்ராவில் இந்த ரயில் எரிக்கப்பட்டு கரசேவகர்கள் பலர் உயிர் இழந்தனர். இதனை தொடர்ந்து குஜராத் முழுவதும் பயங்கர கலவரம் வெடித்தது. இதைத்தான் உத்தவ் தாக்கரே சுட்டிக்காட்டுகிறார்.

### திருமங்கலம் முத்தப்பன்பட்டிக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை!

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, செப். 13 -

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செப். 21ந்தேதி கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, சேலம் மாநாட்டில் பங்கேற்பது குறித்த மதுரை தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டம் இன்று (13ஆம் தேதி ) காலை 10 மணிக்கு திருமங்கலம் தொகுதி டி. கல்லுப்பட்டி அருகில் உள்ள முத்தப்பன்பட்டி சேடபட்டியார் திடலில் நடைபெற உள்ளதாக தெற்கு மாவட் டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கு இணங்க கலைஞர் நூற்றாண்டு விழா மாவட்டம் முழுவதும் அனைத்து கிளைகள் சார்பாக தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது, இதனை மேலும் அதிகப்படுத்தும் வகையிலும், டிசம்பர் மாதம் சேலத்தில் நடைபெறும் கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில் இளைஞர் அணியினர், கழகத்தினர் என 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பெரும் திரளாக பங்கேற்பது மற்றும் 21ம் தேதி திருமங்கலம் தொகுதி கல்லுப்பட்டி அருகில் உள்ள முத்தப்பன்பட்டி கலைஞர் திடலில் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் விழாவை சிறப்புற நடத்துவது உள்ளிட்டவை தொடர்பாக மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. கழகம் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (13.09.2023 -புதன் கிழமை) காலை 10 மணியளவில் திருமங்கலம் தொகுதி டி.கல்லுப்பட்டி அருகிலுள்ள முத்தப்ப ன்பட்டி சேடபட்டியார் திடலில் வைத்து நடைபெற உள்ளது.

இந்த நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தனது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியப் பகுதியில் ரூ. 292.72 கோடி மதிப்பிலான திட்டப்பணிகளை உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்து அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் கழகத்தினர், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மிசா. வே. குருநாதன்

16.08.1939 - 13.09.2018



உங்கள் நினைவில் வாழும்

மனைவி: கு. சரோஜா

மகன்கள்: குருசெல்வம், கு. பாண்டியன், கு. தென்னவன்

மருமகன்கள்: திரு.சு. இராஜேந்திரன், திரு.சு. கோவிந்தராஜன்

மகள்கள்: திருமதி விஜயா இராஜேந்திரன், திருமதி கலையரசி கோவிந்தராஜன்

மருமகள்கள்: மீனா குருசெல்வம், லலிதா பாண்டியன், கீதா தென்னவன்

பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

கு. பாண்டியன், ( 98840 74344 )

112 (அ) வது வட்ட அவைத் தலைவர்

ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி - தி.மு.க, சென்னை மேற்கு மாவட்டம்.

### எண்ணற்ற சாதனைகளைப் படைத்துவரும் 'செஸ்' கிராண்ட் மாஸ்டர்கள் பிரக்ஞானந்தா – குகேஷ்க்கு வாழ்த்துகள்!

# விளையாட்டு வீரர்களை முன்னேற்ற தமிழ்நாடு அரசு துணை நிற்கும்!

## வேலம்மாள் பள்ளியில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை, செப். 13 -

**'செஸ்' விளையாட்டில் சிறுவயதிலேயே எண்ணற்ற சாதனைகளைப் படைத்து வரும் கிராண்ட் மாஸ்டர்கள் பிரக்ஞானந்தா, குகேஷ் ஆகியோருக்கு பாராட்டுகள் - வாழ்த்துகள். விளையாட்டு வீரர்களை முன்னேற்ற தமிழ்நாடு என்றும் துணை நிற்கும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வேலம்மாள் பள்ளியில் நடைபெற்ற விழாவில் பங்கேற்று உரையாற்றிய போது குறிப்பிட்டார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

வேலம்மாள் பள்ளியில் பயின்ற இரண்டு செஸ்கிராண்ட்மாஸ்டர்கள்தம்பிபிரக்ஞானந்தா, தம்பி குகேஷ் மற்றும் உலக செஸ் சாம்பியன் ஸ்கூல் போட்டியில் பதக்கங்களை வென்ற வீரர்கள் வீராங்கனைகளைப் பாராட்டி அறுபது இலட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கும் இந்த நிகழ்ச்சியில் என்னுடன் பங்கேற்றுள்ள இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு அவர்களே.

மதிப்பிற்குரிய சகோதரர் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் அவர்களே, சென்னை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் சகோதரி பிரியா அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்யா மிஸ்ரா அவர்களே, வேலம்மாள் பள்ளி குழுமத் தலைவர் சகோதரர் வேல்முருகன் அவர்களே, தம்பி பிரக்ஞானந்தா, தம்பி குகேஷ் உள்பட பரிசு பெறும் செஸ் வீரர்களே வீராங்கனைகளே.

சென்னை மாநகராட்சியின் மண்டலத் தலைவர் பி.கே.மூர்த்தி அவர்களே, சென்னை கிழக்கு மாவட்டத்தினுடைய கழக நிர்வாகிகளே, பள்ளி மாணவத் தலைவர் சகோதரி கிரண் தேஜா அவர்களே, இந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிக் கொண்டிருக்க கூடிய சகோதரி நித்திகா அவர்களே, செஸ் பயிற்சியாளர் வேலவன் அவர்களே, வீரர் வீராங்கனைகளை பெற்றோர்களே, குடும்பத்தினர்களே, ஆசிரியர் பெருமக்களே மாணவ மாணவிகளே உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு நேரு ஸ்டேடியத்தில் செஸ் ஒலிம்பியாட் போட்டி அதன் துவக்க விழாவும் அதன் நிறைவு விழாவும் இந்தியா மட்டுமல்ல, ஒட்டு மொத்த உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில் மிகவும் சிறப்பாக நாம் நடத்திக் காட்டினோம்.

அதற்கு ஈடுகட்டும் வகையில், அதைவிட சிறப்பாக இன்று அதே செஸ் விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் எழுச்சியுடன் இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இது ஒரு மிக மிக முக்கியமான ஒரு தருணம். எல்லோருக்குமே ஒரு முக்கியமான தருணம். ஏனென்றால் நாம் எந்த பள்ளிக் கூடத்தில் படிக்கிறோமோ அதே பள்ளிக்கூடத்தில் நம்முடைய சாதனைக்காக பாராட்டு விழா நடைபெறுவது என்பது சாதாரண விஷயம் அல்ல.

உலகக் கோப்பை செஸ் போட்டியில் இறுதி வரை போராடி, தம்பி பிரக்ஞானந்தா இரண்டாவது இடத்தைப் பெற்று, தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் பெருமை தேடி தந்து இருக்கின்றார். நாளிதழ்களின் விளையாட்டுப் பக்கத்தை எடுத்துப் பார்த்தால், உலகின் ஏதாவது ஒரு மூலையில் நடைபெறும் செஸ் போட்டியில் தம்பி பிரக்ஞானந்தாவும் தம்பி குகேஷும் வெற்றி பெறும் செய்தியைப் பார்க்கிறேன்.

தம்பி பிரக்ஞானந்தாவும் தம்பி குகேஷும் ரொம்ப நாட்களுக்கு பிறகு பள்ளிக்கூடம் வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். எனக்கு தெரிந்து இவர்கள் இருவரும் வெளிநாடுகளிலேயே பல்வேறு சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்டு சாதனைகளைப் படைத்து வருகிறார்கள்.

### சாதனையைப் போற்றும் வகையில் முதல்வர் ஊக்கத் தொகை!

உலக செஸ் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்த பிரக்ஞானந்தாவின் சாதனையைப் போற்றும் விதமாக முதலமைச்சர் அவர்கள் 30 லட்சம் ரூபாயை அவருக்கு ஊக்க தொகையாக வழங்கினார்கள்.

யார் வேண்டுமானாலும் வெற்றி பெறலாம். ஆனால் நம்ம குடும்பத்துப் பிள்ளைகள் பிரக்ஞானந்தா, குகேஷின் வெற்றி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. எளிய குடும்பத்தில் பிறந்த குழந்தைகள் வாழ்க்கையில் முன்னேறி, வெற்றி பெற வேண்டும் என்பதுதான் திராவிட இயக்கத்தின் கொள்கை, லட்சியம், வெற்றியாகும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய மூவரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் இதற்காகத்தான் பெரிதும் உழைத்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அந்தப் பணியை மிகவும் சிறப்பாக செய்து வருகிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றி ஒரு நிகழ்ச்சியை நான் இந்த இடத்தில் கூற விரும்புகிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த சாந்தி என்ற ஒரு பெண். 2006 ஆம் ஆண்டு கத்தாரில் நடைபெற்ற ஏசியன் விளையாட்டுப் போட்டிகளில் 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றார்கள். அதற்காக பரிசுத் தொகையாக அவருக்கு 15 லட்சம் ரூபாய் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

ஆனால், அடுத்த இரண்டு நாட்களில் பாலினம் சார்ந்த சோதனை நடைபெற்று, சாந்திக்கு வழங்கப்பட்ட பதக்கத்தைப் பறித்து விட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட பரிசுத்தொகை திரும்ப பெறப்படுமா என்று முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நிருபர்கள் கேட்டார்கள். 'ஓடியது அந்த கால்கள்தானே' என்று பதில் அளித்தார். பரிசுத் தொகையையும் திரும்பப் பெறவில்லை. இது தான் திராவிட முன்னேற்றக் கழகம். இதுதான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயல்பாடு.

தம்பி பிரக்ஞானந்தாவின் வெற்றியை அவருடைய தனிப்பட்ட வெற்றியாக நான் பார்க்கவில்லை. அவருக்கு உறுதுணையாக இருந்த அவரின் தாயார் மற்றும் தந்தையார், பயிற்சியாளர் ஆகியோருக்குக் கிடைத்த வெற்றி.

உலகக் கோப்பைப் போட்டி பைனலுக்குப் போய் விட்டோம் என்று எந்தவித பெருமிதமோ கொண்டாட்டமோ இல்லாமல் தம்பி பிரக்ஞானந்தா இங்கே அமைதியான முறையில் அமர்ந்திருக்கிறார். இதே போல்தான் அங்கேயும் உட்கார்ந்து இருந்தார். தம்பி குகேஷும் இப்போது அமைதியாக அமர்ந்திருக்கிறார்.

### மற்றவர்களுக்கு ரோல் மாடலாக விளங்குகின்றனர்!

அவர்கள் வேண்டுமானால், தன்னடக்கத்தோடும் அமைதியோடும் இருக்கலாம். ஆனால் நாம் அவர்களை, அவர்களின் வெற்றியை கொண்டாடியேதான் தீர வேண்டும். நம் அனைவரின் இன்ஸ்பிரேஷனாகவும் தம்பி குகேஷ் அவர்களும், தம்பி பிரக்ஞானந்தா அவர்களும் ரோல் மாடலாக மற்றவர்களுக்கு சாதனை படைத்துக்கொண்டு வருகிறார்கள்.



உன்னுடைய நண்பன் யார் என்று சொல், நீ யார் என்று சொல்கிறேன் என்று சொல்வார்கள். அது போல வெற்றியாளர்கள் யாரை எதிர்த்து வெற்றி பெறுகிறார்கள் என்பதை வைத்துத்தான் அந்த வெற்றியாளரின் தன்மை, முக்கியத்துவம், திறமை ஆகியவை நமக்குத் தெரியவரும்.

### சாதனை படைத்துள்ளார் தம்பி பிரக்ஞானந்தா!

அப்படிப் பார்த்தால், தம்பி பிரக்ஞானந்தாவின் வெற்றி சாதாரணமானது அல்ல. உலக செஸ் சாம்பியன் மேக்னஸ் கார்ல்ஸனுடன் மோதி சாதனை படைத்துள்ளார். தம்பிக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

உலக செஸ் போட்டிகளில் தொடங்கியிருக்கும் பிரக்ஞானந்தாவின் பயணம் நான்கு வயதில் தொடங்கியது. ஏழு வயதில் தேசிய அளவில் வெற்றி பெற்றிருக்கிறார். 10 வயதில் சர்வதேச மாஸ்டர் பட்டம். அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்திய அளவில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் என பிரக்ஞானந்தா சாதனைகள் படைத்துள்ளார். தம்பிக்கு எனது வாழ்த்துக்கள்.

மேக்னஸ் கார்ல்ஸனை உலக கோப்பை இறுதிப்போட்டியில் வீழ்த்த முடியாமல் போயிருந்தாலும், கடந்த ஆண்டு நடைபெற்ற ரேபிட் போட்டியில் பிரக்ஞானந்தா மேக்னஸ் கார்ல்ஸனை வீழ்த்தி வென்றிருக்கிறார்.

பிரக்ஞானந்தாவைப் போல தம்பி குகேஷ் அவர்களும் உலக அளவில் நமக்குப் பெருமையைத் தேடித் தந்து கொண்டிருக்கிறார்கள்.

### உலகத் தர வரிசையில் 8வது இடத்தில் தம்பி குகேஷ்!

செஸ் போட்டியில் 37 வருடங்கள் இந்தியாவின் நம்பர் ஒன் வீரராக இருந்த சகோதரர் விஸ்வநாத் ஆனந்த் அவர்களுக்குப் பிறகு குகேஷ் அவர்கள் தேர்வுபெற்று இந்திய அளவில் நம்பர் ஒன் செஸ் விளையாட்டு வீரராக தேர்வு பெற்று, இந்திய அளவில் சாதனை படைத்துள்ளார். அது மட்டுமல்ல, உலக தர வரிசைப் பட்டியலில் எட்டாவது இடத்தில் இருக்கிறார் தம்பி குகேஷ். உலக சாம்பியனாக உள்ள மேக்னஸ் கார்ல்ஸனை தோற்கடித்த பெருமைக்குரியவர் தம்பி குகேஷ் அவர்கள்.

உலக தரவரிசை பட்டியலில் 2017 பாயிண்டுகளைப் பெற்று உலகின் இளம் சதுரங்க வீரர் எனும் பட்டத்தை பெற்றிருக்கும் தம்பி குகேஷ் அவர்களுக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவருடைய குடும்பத்துக்கும் என்னுடைய பாராட்டுகள், வாழ்த்துகள். தம்பி குகேஷ் அவர்கள் மேலும் பல சாதனைகளைப் படைத்து தமிழ்நாட்டை உலக அளவில் பெருமைப்படுத்துவார் என்று நான் நம்புகிறேன்.

சிறுவயதிலேயே எண்ணற்ற சாதனைகளைப் படைத்த தம்பி பிரக்ஞானந்தா, தம்பி குகேஷ் இருவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக் குவதுதான் நம்முடைய அரசினுடைய நோக்கம். அதை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டை இந்தியாவின் 'ஸ்போர்ட்ஸ் ஹப்' என மாற்ற வேண்டும் என்கிற வகையில் தான் நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

### செஸ் விளையாட்டின் தலைநகரம் - சென்னை!

ஆனால், இவர்கள் இருவரும் இன்று செஸ் விளையாட்டைப் பொறுத்தவரை தமிழ்நாடு தான் குறிப்பாக சென்னைதான் இந்திய அளவில், 'செஸ் விளையாட்டின் தலைநகரம்' என்பதை நிரூபித்து விட்டார்கள். TAMILNADU IS THE CAPITAL OF CHESS.

பிரக்ஞானந்தாவையும் குகேஷையும் வாழ்த்தும் இந்த நேரத்தில், இவர்களுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள், அவர்களுக்கு உதவிகளைச் செய்த நிறுவனங்கள், ஸ்பான்சர்ஸ், ஊக்கப்படுத்திய நண்பர்கள் என அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் வேர்ல்ட் ஸ்கூல் செஸ் சாம்பியன்ஸ் போட்டியில் பதக்கங்களை வென்றுள்ள வேலம்மாள் பள்ளி மாணவர்கள் பூஜாஸ்ரீ, ஷன்மதிஸ்ரீ, மிதுன் பிரணவ், ஆரவ், தனுஷ் ராகவன், ஹர்ஷ் சுரேஷ், தீபிகா, ரோஹிதீ, மிருத்தியன் ஜெய் மகாதேவன், சந்தோஷ் ஹரிஹரஸ்ரீ ஆகிய மாணவ செல்வங்களுக்கும் என் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வேலம்மாள் பள்ளியின் செஸ் பயிற்சியாளர் வேலன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் செஸ் போட்டியை சர்வதேச அளவிலும் தமிழ்நாடு அளவிலும் இந்திய அளவிலும் பல ஆண்டுகளாக பெருமைப்படுத்திய விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள் அடுத்த தலைமுறை வீரர்களை உருவாக்கி வருகிறார். அவருக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு படிக்கக்கூடிய மாணவர்களாகிய நீங்களெல்லாம் பெருமையாக, 'பிரக்ஞானந்தாவும், குகேஷும் எங்களுடைய சீனியர் மாணவர்கள்' என்று நீங்கள் பெருமையாக வெளியில் சொல்லிக் கொள்ளலாம். ஏனென்றால், அவர்கள் இருவரும் உலக அளவில் பிரபலமான விளையாட்டு வீரர்களாக ஆகிவிட்டார்கள்.

நான் பெருமையாக எப்போதும் சொல்லிக் கொள்வது என்னுடைய ஸ்கூல் சீனியர் விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள். நாங்கள் இரண்டு பேரும் ஒரே பள்ளியில்தான் படித்தோம். அது டான் பாஸ்கோ மேல்நிலைப்பள்ளி.

அவர் எங்களுக்கெல்லாம் முன் உதாரணமாக இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வாழ்த்துவதற்கு என்னுடைய நன்றியை அவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

### விளையாட்டுத் துறைக்காக எண்ணற்ற பணிகள்!

விளையாட்டுத் துறைக்காக எண்ணற்ற பணிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருவதை அறிகிறோம். தொடர்சியாக ஏராளமான விளையாட்டு போட்டிகளை நடத்தி வருகின்றோம்.

மிகக் குறுகிய காலத்தில் கடந்த ஆண்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, 'செஸ் ஒலிம்பியாட் போட்டி' உலக அளவில் நடத்தப்பட்டது. அதன் பிறகு, தொடர்சியாக 'வேர்ல்ட் கப் ஸ்குவாஸ்', 'ஏசியன் கப் ஹாக்கி' 'வேர்ல்ட் சர்பிங் லீக்' என ஏராளமான போட்டிகளை நாம் நடத்தி வருகின்றோம்.

மூன்று மாதங்களுக்கு முன்பு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்து, சுமார் 25 கோடி ரூபாய் பரிசுத் தொகை, தமிழ்நாடு அரசு நடத்திய முதலமைச்சர் கோப்பைப் போட்டியில் 3 லட்சத்து 57 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டுக்கு முதன்முறையாக அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 'கேலோ இந்தியா யூத் கேம்ஸ்' விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட இருக்கின்றது. ஹெச்.சி.எல் நிறுவனத்துடன் இணைந்து சைக்கிளத்தான் போட்டிகள் நடைபெற உள்ளன. சென்னையில் முதன் முறையாக ஃபார்முலா 4 போட்டிகள் நடத்த உள்ளோம்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு போட்டிகளில் சாதித்த 134 விளையாட்டு வீரர்களை வீரர்களுக்கு 7 கோடியே 24 லட்சம் ரூபாயை ஹை கேஷ் இன்சென்டிவாக கடந்த வாரம் அளித்தார்கள்.

மேலும் வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் தங்களுடைய பயிற்சியை மேற்கொள்வதில் அங்கு தடை ஏற்பட்டது.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு அழைப்பு விடுத்து, அவர்கள் தமிழ்நாட்டில் வந்து தங்கி இருந்து பயிற்சி மேற்கொள்ள வழிவகை செய்துள்ளார்கள்.

மணிப்பூரில் இருந்து 17 பென்சிங் வாள் வீச்சு வீரர்கள் அங்கிருந்து விமானத்தில் வந்து, அவர்கள் தங்குவதற்கு உணவு வசதி, போக்குவரத்து வசதி மற்றும் பயிற்சி மேற்கொள்ளும் வசதிகளை நமது முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி தந்தார்கள்.

மணிப்பூரிலிருந்து வந்த விளையாட்டு வீரர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஏராளமான பணிகள் விளையாட்டுத் துறையின் முன்னேற்றத்திற்காகவும் வீரர்களுடைய முன்னேற்றத்திற்காகவும் நம்முடைய தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

### உயரங்களைத் தொட முதல்வர் துணை நிற்பார்!

அந்த வகையில் தம்பி பிரக்ஞானந்தா அவர்களும் குகேஷ் அவர்களும் பல உயரங்களைத் தொட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்றும் துணை நிற்பார்கள்.

அதுமட்டுமல்லாமல் பிரக்ஞானந்தா மற்றும் குகேஷ் ஆகியோரை வழிநடத்த விஸ்வநாதன் ஆனந்த், ரமேஷ் போன்ற தலைசிறந்த விளையாட்டு வீரர்களும் பயிற்சியாளராக இவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறார்கள்.

பிரக்ஞானந்தாவையும், குகேஷையும் உருவாக்க அரசும் விளையாட்டு மேம்பாட்டு துறையும் செயல்படும் எனக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## புதுச்சேரி பா.ஜ.க. கூட்டணி அரசு மருந்து கொள்முதலில் ஊழல்!

### அனைவரையும் கைது செய்ய புதுச்சேரி மார்க்சிஸ்ட் கட்சி வலியுறுத்தல்!

புதுச்சேரி,செப். 13 -

தரமற்ற மருந்து கொள்முதல் செய்துள்ள வழக்கில் அனைவரையும் கைது செய்து விசாரிக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி புதுச்சேரி அரசை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து கட்சியின் புதுச்சேரி மாநில செயலாளர் ஆர்.ராஜாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: புதுச்சேரி அரசு சுகாதாரத்துறை சார்பில் கர்ப்பிணி பெண்கள், பள்ளி மாணவர்களுக்கு வழங்கப் படும் சத்து மருந்துகள் தொடர்ந்து தரமற்றதாகவும், காலாவதியான தாகவும் இருப்பது தெரியவந்துள்ளது. சில மாதங்களுக்கு முன்பு வில்லியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தரமற்ற காலாவதியான மருந்துகள் வழங்கப்பட்டது அம்பலமானது. இதை துணை நிலை ஆளுநர் ஆய்வு என்ற பேர்வை யில் உண்மை நிலையை மூடி மறைத்தார். இந்நிலையில் 2019ம் ஆண்டு புதுச்சேரி சுகாதாரத் துறையில் இயங்கும் தேசிய சுகாதார இயக்கம் மூலம் வழங்கப்பட்ட சத்து மாத்திரை களை சாப்பிட்ட கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்ட தால் அனைத்து மருந்துகளும் திரும்ப பெறப்பட்டது. விசார ணையில் தரமற்ற மருந்துகள் கொள் முதல் செய்யப்பட்டது தெரிய வந்தது. தேசிய கிராமப்புற சுகாதார திட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் மருந்தாளுனராக பணியாற்றிய நடராஜன் அவரது மனைவி பத்மா பெயரில் பத்மஜோதி எண்டர் பிரை சஸ், நண்பர் பெயரில் சாய்ராம் ஏஜென்சி என்ற கம்பெனிகளை உருவாக்கி உள்ளனர். இந்த நிறுவனத்திலிருந்து மருந்து கொள்முதல் செய்யப்பட்டு ரூ. 44 லட்சம் முறைகேடு நடந்தது தொடர் பாக என்.ஆர். காங்கிரஸ், பாஜக அரசும், சுகாதார த்துறையும் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் தரமற்ற மருந்துகளை கொள்முதல் செய்துள்ளது என்ற குற்றச்சாட்டின் படி வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளது. இந்த வழக்கினை காலம் தாழ்த்தி பதிவு செய்யப் பட்டிருப்பது, கடைநிலை ஊழியரை மட்டும் வழக்கில் சேர்க்கப்பட்டிருப்பதும் உயர்மட்ட ஊழலை மூடி மறைக் கும் செயலாகும்.

மருந்து கொள்முதலில் பல கோடி பெற்று வரும் ஊழலும், லஞ்சமும் அதன் காரணமாக புதுச்சேரி மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளும் அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது. அரசின் இந்த செயல் தனியார் மருத்துவமனைகள், மற்றும் கிளினிக்குகளை மக்கள் நாடி செல்ல வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியுள்ளது. அரசு மருத்துவமனைக்கு மருத்து உபகரணங்கள், மருந்து கள் கொள்முதல் செய்யப்படுவது வெளிப்படைத் தன்மையோடு நடை பெறுவதில்லை என்றும், கொள் முதல் செய்யப்பட்ட மருந்து களின் தரச் சான்று பெறாமலேயே நோயாளிகளுக்கு வழங்கப்படுவ தும், நிறுவனங்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதும், இதில் ஊழல், முறைகேடுகள் நடைபெற்று வருவதாக புகார்கள் எழுந்துள்ளன. மேலும் சுகாதாரத் துறையில் 15 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பந்த முறையில் பணியாற்ற கூடிய டாக்டர்களுக்கு மாத ஊதியம் 50 ஆயிரமும், அதிகாரிகளுக்கு உடந்தையாக உள்ள சில ஒப்பந்த டாக்டர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை ஊதியம் வழங்கப்படுகிறது என்ற புகார் எழுந்துள்ளது. அரசு மருத்துவமனைகளில் கடைநிலை ஊழியர் முதல் சிறப்பு மருத்துவர் வரை ஏராளமான காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு எந்த அக்கறையும் ஆளும் அரசுக்கு இல்லை. தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்படாமல் கட்டிடங் கள், ஆய்வகங்கள், மருத்துவக் கருவிகள் பழுதாகியும், வேலை செய்யாமலும் முடங்கி கிடக்கின்றன. மருத்துவமனைக்கு பல்வேறு விதங்களில் கொள்முதல் செய்யப் படும் மருந்து முதல் அனைத்து பொருட்களிலும் ஊழலும் முறைகேடுகளும் அதிகரித்துள்ளது. எனவே புதுச்சேரி என்.ஆர். காங்கிரஸ், பா.ஜ.க. கூட்டணி அரசு இனிமேலாவது மக்கள் நலனை பாதுகாக்க முன்வர வேண்டும். போலியான மருந்து கொள்முதல் வழக்கில் தொடர்புடைய அனை வரையும் கைது செய்ய வேண்டும். பொது மக்களுக்கு தரமான சிகிச்சை, மருந்துகள் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். காலி பணி இடங்களை உடனடியாக பூர்த்தி செய்ய வேண் டும், ஒப்பந்த முறை டாக்டர்களை நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

### மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அழகர் கோவிலில்

## பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா - திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, செப். 13 -

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வரும் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த தினத்தை முன்னிட்டு அழகர் கோவிலில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கப்படும் என மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார், அதன் விவரம் வருமாறு:

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை எடுத்துரைத்து அதன்படி வாழ்ந்து மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த தினம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பின் வெகு சிறப்பாக கொண்டாடும் வகையில் வரும் 15.09.2023 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அழகர் கோவிலில் அமைந்துள்ள அன்னாரின் திரு உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கப்பட உள்ளது. சிறப்பு மிக்க இந்நிகழ்ச்சியில் மதுரை வடக்கு மாவட்டத்தின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத் தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் விழாவை சிறப்பிக்க வேண்டும் என மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



---

## மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம் இன்று (13.09.2023 – புதன்கிழமை) மாலை 6.00மணி அளவில் பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில், மண்டல பொறுப்பாளர் இன்பா ரகு முன்னிலையில் நடைபெற இருப்பதால் மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள், பகுதி, ஒன்றியம், பேரூர், வட்ட இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.



**பொருள்:** கழக இளைஞர் அணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை வருகை குறித்து. சேலம் இளைஞர் அணி மாநாடு

**கோ.தளபதி எம்.எல்.ஏ.,**
செயலாளர்
மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.

மஞ்சள் அழுகல் நோய் பாதிப்பில் இருந்து

# கரும்பு விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது!

## எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி விவரம் தெரியாமல் அறிக்கை வெளியிட்டுள்ளார்

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பதிலடி!



சென்னை, செப்.13-

மஞ்சள் அழுகல் நோய் பாதிப்பில் இருந்து கரும்பு பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் இதன் மூலம் விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்திருப்பதுடன் உண்மை தெரியாமல் விவரம் தெரியாமல் எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை வெளியிட்டுள்ளார் என்றும் அவர் பதிலடி கொடுத்துள்ளார்.

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அளித்த மறுப்பு அறிக்கை வருமாறு : -

கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் மஞ்சள் அழுகல் நோய், வேர்ப்புழு தாக்குதல் மற்றும் காட்டுப்பன்றி தொல்லையால் கரும்பு பயிர்கள் பாதிப்படைந்து விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளதாகவும் பல சர்க்கரை ஆலைகள் கோடிக்கணக்கான ரூபாய் நிலுவையில் வைத்துள்ளதால் கரும்பு பயிரிட்டு விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளானதாக எதிர்க்கட்சித் தலைவர் விவரம் தெரியாமல் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

2011 வரை நடைபெற்ற கலைஞர் தலைமையிலான அரசில் தமிழ்நாட்டின் கரும்பு பயிரிடும் பரப்பின் அளவு 2.24 லட்சம் எக்டேராக இருந்தது. ஆனால், பின்னர் வந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் கரும்பு பரப்பளவு கிட்டத்தட்ட 1.29 லட்சம் எக்டேர் குறைந்து, வெறும் 95 ஆயிரமாக மட்டுமே இருந்தது. மேலும், கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளின் எண்ணிக்கையும் 1.50 லட்சமாக இருந்ததை 91 ஆயிரமாக குறைக்கப்பட்டதே நிர்வாகத் திறனற்ற எதிர்கட்சி தலைவர் ஆட்சியில்தான் என்பதை சுலபமாக மறந்து அறிக்கை விடுகிறார். ஆனால் 2021ல் தி.மு.க. ஆட்சி ஏற்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் கிட்டத்தட்ட கரும்பு பரப்பளவு 1.50 லட்சம் எக்டேராக உயர்த்தியது தற்போதைய தி.மு.க. ஆட்சியில் தான் என்பதை ஏனோ அறிக்கை திலகத்திற்கு புரியவில்லை.

கரும்பு விவசாயிகளுக்கு 2015-2016 அரவை பருவம் முதல் 20192020 அரவைப் பருவம் வரை, கரும்பு விலை உயர்த்தப்படாமல் ஒரே விலையாக டன் ஒன்றுக்கு ரூபாய் 2,750 மட்டுமே அதிமுக ஆட்சியில் வழங்கப்பட்டு வந்தது. தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் கரும்பு விலை படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது விவசாயிகள் டன் ஒன்றுக்கு ரூபாய் 3,016.25 பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் கரும்பு விவசாயிகளின் உற்பத்திக்கான ஊக்கத்தொகை, சிறப்பு ஊக்கத்தொகை மற்றும் வழிவகை கடனாக சுமார் ரூபாய் 800 கோடி அளவிற்கு தமிழக அரசு நேரடியாக கரும்பு விவசாயிகளுக்கு வழங்கிட சர்க்கரை ஆலைகளுக்கு நிதி உதவியும் வழங்கி உள்ளது.

### ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதை!

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2021 வரை ரூ.419 கோடி அளவில் கரும்பு விவசாயிகளின் நிலுவைப் பணம் பட்டுவாடா செய்யாமல் கரும்பு விவசாயிகளை தவிக்க விட்டவர் தான் தற்போது ஆடு நனைகிறதே என ஓநாய் அழுத கதையாக கரும்பு விவசாயிகளின் நிலுவைத் தொகை பற்றி குறிப்பிட்டுள்ளார். தற்போது நிலுவைத் தொகை முழுவதையும் 2021-22 பருவம் வரை அனைத்து கூட்டுறவு, பொது மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு விட்டது என்பது ஆட்சியிலிருந்து இறங்கும் போது கஜானாவையே சுரண்டிவிட்டுச் சென்ற கல்லா பெட்டி எடப்பாடி பழனிச்சாமிக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

நடப்புப் பருவத்தில் தனியார் சர்க்கரை ஆலைகள் மட்டுமே கரும்பு விவசாயிகளுக்கு ரூ.17 கோடி அளவிற்கு நிலுவைத் தொகை வழங்க வேண்டும். இது குறித்தும் இத்துறையினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கலைஞர் அவர்களின் ஆட்சியில் 2010ஆம் ஆண்டு சுமார் ரூ.1,240 கோடி மதிப்பீட்டில் 12 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு அறிவிக் கப்பட்ட இணை மின் திட்டம் மற்றும் ஆலை நவீனமயமாக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. முந்தைய அ.தி.மு.க. அரசின் திறனற்ற ஆட்சியின் காரணமாக திட்டம் முடியாமலேயே 90 சதவீதம் ஒப்பந்த தாரர்களுக்கு பணம் வழங்கி, 2021வரை இத்திட்டத்தில் எந்தவித முன்னேற்றமும் இன்றி, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.1,400 கோடி அளவில் கூடுதல் வட்டி சுமையை விட்டு விட்டு சென்றதுதான் எடப்பாடி ஆட்சியின் மற்றும் ஒரு சாதனை.

2021ல் சர்க்கரை ஆலைகளின் 8.97 சதவீதமாக இருந்த கரும்பு பிழிதிறன் 9.33 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இதன் மூலம் ரூ.100 கோடி அளவிற்கு கூடுதல் வருவாய் கிடைத்திட இத்துறை மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

கரும்பு பயிரிடும் விவசாயிகள் மண்வளம் குன்றிய நிலையில் போதிய சத்து இல்லாததன் காரணமாக மஞ்சள் அழுகல் நோய் (Pokkah Boeng) வேர்புழு நோய் போன்ற நோய்கள் தாக்குவது இயற்கையானது ஆகும். பொதுவாக மஞ்சள் அழுகல் நோயினால் பாதிக்கப்பட்ட கரும்பு பயிர் சாகுபடி செய்யப்பட்ட வயல்களை கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் மற்றும் கோயம்புத்தூர் கரும்பு இனப்பெருக்க நிறுவன விஞ்ஞானிகள் மூலம் வயல் ஆய்வு செய்யப்பட்டு, கடைபிடிக்கப்பட வேண்டிய நோய் கட்டுப்பாட்டு முறைகள் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. மிகவும் அதிகமாக மஞ்சள் அழுகல் நோயால் பாதிக்கப்பட்ட கரும்பு வயல்கள் கண்டறியப்பட்டு, அங்குள்ள கரும்பினை அவசர கால ஏற்பாடாக அருகில் உள்ள சர்க்கரை ஆலைக்கு அனுப்ப உத்தரவு வழங்கப்பட்டு விவசாயிகள் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகளின் நலன் பாதுகாப்பு!

மேலும், கரும்பு விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன், பூச்சி தாக்குதல் மற்றும் மஞ்சள் அழுகல் நோய் தாக்குதல் ஏற்படாமல் இருக்க எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், கரும்பு இனப்பெருக்க நிறுவனம், கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மூலம் கருத்தரங்குகள், பயிற்சிகள், வயல் விழாக்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் கரும்புப் பயிர் காட்டுப்பன்றிகளால் பாதிப்புக்குள்ளாவதைத் தவிர்க்கும் பொருட்டு கரும்பு விவசாயிகளுக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் தயார் செய்யப்படும் காட்டுப்பன்றி விரட்டும் திரவம் கரும்பு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

நிர்வாகத் திறனற்ற எடப்பாடி ஆட்சியில் சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு எந்த வித நன்மையும் கிடைக்கவில்லை. புதிய நியமனங்கள் ஏதுமில்லை. 2018க்குப் பிறகு ஊதியப் பிரச்சினையும் கண்டுகொள்ளப்படவில்லை. கருணை அடிப்படையில் நியமனம் நடைபெறாமல் இருந்து, இதனால் கரும்பு சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள் குறைந்து போனது இவர் கண்ணில் 2021 வரை படவில்லை. சர்க்கரை ஆலைகளில் காலியாக உள்ள பொதுத் தொகுப்பு அலுவலர்கள் மற்றும் ஊதியக் குழுவின் கீழ் உள்ள பணியாளர்களின் காலிப்பணியிடங்கள் ஆலைகள் தேவைகளைக் கருத்தில் கொண்டு விரைந்து நிரப்பிட நடவடிக்கைகளையும் துரிதப் படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய அரசு கருணை அடிப்படையில் பணி நியமனமும், சுமார் 170 பேருக்கு பதவி உயர்வும் வெவ்வேறு நிலைகளில் அளிக்கப்பட்டது. கோரிக்கை வைக்காமலேயே ஊதிய உயர்விற்காக மறுசீரமைப்பு குழு அமைக்கப்பட்டு, வெகுவிரைவில் ஊதிய உயர்வும் வழங்கப்பட உள்ளது. இவ்வாறு கரும்பு விவசாயிகள், தொழிலாளர்கள் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகள் நலன் பாதுகாக்கப்பட்டது.

### கேட்காமலேயே கொடுக்கும் அரசு!

இவ்வாறு கேட்காமலேயே கொடுக்கும் இவ்வரசின் செயல்பாட்டால், தற்போது கரும்பு பிழிதிறன் உயர்வும், சர்க்கரை கரும்பு பரப்பளவு உயர்வு, கரும்பு விவசாயிகளின் எண்ணிக்கை உயர்வு இவ்வரசின் சாதனையாகும்.

கரும்பு விவசாயிகளைக் கண்போலக் காத்து, அவர்களுக்கு ஏற்படும் துயரங்களைத் துடைத்திட இவ்வரசு எப்பொழுதும் நேசக்கரம் நீட்டிக் கொண்டே இருந்ததன் விளைவாக கரும்பு உற்பத்தி பரப்பு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் கல்லாப்பெட்டி எடப்பாடி அவர்கள் சுட்டிக்காட்டுவதற்கு முன்பே, பூச்சி, நோய் வருமுன் காப்போம் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் கரும்பு பயிர் நல்ல முறையில் வளர்ந்திடவும், கரும்பு விவசாயிகளுக்கு அவ்வப்போது நிவாரணம் வழங்கிடவும், இவ்வரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. எந்த ஒரு கரும்பு விவசாயியும் பாதிக்கப்படாத வகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல் படி, எல்லா நடவடிக்கைகளும் சிறப்பாக இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், முந்தைய அ.தி.மு.க. அரசால் கைவிடப்பட்ட சர்க்கரைத் துறையினை செம்மைத் துறையாக்கிட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் சிறப்பாக செயல்படும் அரசாகத் திகழ்ந்து வருகிறது. விவசாயிகள் கோரிக்கை வைக்காமலேயே அவர்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத்தொகை மற்றும் ஊக்கத்தொகை ஆகிய பணப்பயன்கள் யாவும் உடனுக்குடன் வழங்கப்படுகிறது. அ.தி.மு.க. ஆட்சியில் விடியாமல் இருந்த விவசாயிகளின் வாழ்க்கைத் தரம், வேளாண்மைக்கு என்று தனி நிதி நிலை அறிக்கையின் மூலம், தமிழ்நாடு விவசாயிகள் விடியலை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை. இந்த உண்மையை கூடிய விரைவில் விளங்காத அரசின் முன்னாள் முதல்வரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருக்குப் புரிந்துவிடும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

செப்.15 மாவட்டம் முழுவதும் அண்ணா படத்திற்கு மாலை

# வேலூர் முப்பெரும் விழாவில் திரளாகப் பங்கேற்போம்!

## திருப்பத்தூர் மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பத்தூர், செப்.13-

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் அண்ணாசிலை மற்றும் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவது என்றும், வேலூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில் திரளாகப் பங்கேற்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்ட கழக ஆலோசனை கூட்டம் ஜோலார்பேட்டை நந்தினி மஹாலில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக ஆலோசனை கூட்டத்தில் பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை ஆற்றினார்.மாவட்ட கழக செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி, திருவண்ணா மலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், சாந்திசீனிவாசன், மாவட்டப் பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன், மு.மாவட்ட பொறுப்பாளர் ம.முத்தமிழ்ச்செல்வி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், மாவட்ட ஆவின் தலைவர் எஸ்.ராஜேந்திரன், மாநில தொண்டரணி துணை அமைப்பாளர் பி.எம்.முனிவேல், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் எம்.ஆர்.ஆறுமுகம், வி.எஸ்.சாரதிகுமார், ம.அன்பழகன், ப.ச.சுரேஷ்குமார், க.உமாகன்ரங்கம், கே.சதிஷ்குமார், கே.ஆர்.திருப்பதி, எஸ்.தாமோதிரன், வி.எஸ்.ஞானவேலன், கே.ஏ.குணசேகரன், கவிதாதண்டபாணி, டி.சாமுடி, டி.அசோக்குமார், அ.மோகன்ராஜ், ம.ஸ்ரீதர், அ.செல்வராஜ், சி.உமாசந்திரன்,மற்றும் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், நகர மன்ற தலைவர்கள், ஒன்றிய குழுத் தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய தலைவர், தமிழ்நாட்டின் திராவிட முன்னேற்ற கழகம் தேர்தலில்நிற்கவேண்டும், தேர்தலில் களம் கண்டு ஆட்சி அமைத்தால் தான் தமிழக மக்களுக்கு பல நன்மைகளை செய்ய முடியும் என்ற எண்ணத்தில் தேர்தலில் நின்று ஆட்சி அமைத்து தந்தவர் காஞ்சிதந்த தலைவர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை வருகின்ற செப்டம்பர் 15 ஆம் தேதி ஒன்றிய, நகர பேரூர் கழக, வார்டு கிளைக் கழகங்கள் தோறும் அண்ணாவின் திருவுருவச் சிலை மற்றும் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து கொண்டாட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

செப்டம்பர் 17 அன்று வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டாவில் நடைபெறுகின்ற கழக முப்பெரும் விழாவில் நம்முடைய மாவட்டக் கழகத்திலிருந்து ஒன்றிய, நகர, பேரூர் வார்டு, கிளைக் கழகத்தில் உள்ள உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகளும் பெருந்திரளாக கலந்து கொண்டு முப்பெரும் விழாவினை சிறப்பித்து கழகத் தலைவருக்கு சிறப்பு சேர்க்குமாறு நம்முடைய மாவட்டம் திகழ வேண்டும் என இக்கூட்டம் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க ஆலோசனைக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், திருவண்ணாமலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சி .என். அண்ணாதுரை, மாவட்ட அவைத்தலைவர் ஆர் .எஸ். ஆனந்தன் எம்.எல்.ஏக்கள் திருப்பத்தூர் ஏ. நல்ல தம்பி, ஆம்பூர் அ.செ. வில்வநாதன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் என்.கே.ஆர். சூரியகுமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் சாந்தி சீனிவாசன், ஆ. சம்பத்குமார், டி .கே .மோகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


# நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பி.எல்.ஏ.2 கூட்டம்!



மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு!

நாள் :13 - 09 - 2023 -புதன்கிழமை

| ஒன்றிய/நகர/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| பள்ளிபாளையம் மத்திய ஒன்றியம், வடக்கு ஒன்றியம், படைவீடு பேரூர். | 9.00 AM | செல்லம்மாள் திருமண மண்டபம், இ.காட்டூர். |
| குமாரபாளையம் வடக்கு நகரம் , குமாரபாளையம் தெற்கு நகரம் | 10.00 AM | நகர கழக அலுவலகம், குமாரபாளையம். |
| பள்ளிபாளையம் நகரம் | 11.00 AM | நகர கழக அலுவலகம், பள்ளிபாளையம். |
| பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம், ஆலாம்பாளையம் பேரூர். | 12.00 PM | ஈஸ்வரன் கோவில் மண்டபம், கொக்கராயன்பேட்டை. |
| மோகனூர் மேற்கு ஒன்றியம் | 4.00 PM | புகழி திருமண மண்டபம், பாலப்பட்டி. |
| பரமத்தி பேரூர், வேலூர் பேரூர், வெங்கரை பேரூர், பொத்தனூர் பேரூர், பாண்டமங்கலம் பேரூர், | 5.00 PM | சமுதாய கூடம், பரமத்தி. |
| பரமத்தி ஒன்றியம் | 6.00 PM | சமுதாயக்கூடம், ஆவாரங்காட்டு மேடு, மேல்சாத்தம்புதூர். |

நாள் : 14.09.2023 (வியாழக்கிழமை)

| ஒன்றிய/நகர/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| மல்லசமுத்திரம் ஒன்றியம், மல்லசமுத்திரம் பேரூர் | 9.00 AM | சந்தை பாவடி திருமண மண்டபம், மல்லசமுத்திரம். |
| எலச்சிபாளையம் மேற்கு ஒன்றியம் | 10.00 AM | முத்துமஹால் மண்டபம், குமரமங்கலம். |
| திருச்செங்கோடு ஒன்றியம் | 11.00 AM | மாவட்ட கழக அலுவலகம், தளபதியார் அரங்கம், திருச்செங்கோடு. |
| திருச்செங்கோடு நகரம் | 12.00 AM | நகர கழக அலுவலகம், திருச்செங்கோடு. |
| எலச்சிபாளையம் கிழக்கு ஒன்றியம் | 4.00 PM | ரஞ்சனாஸ் மஹால், பெரியமணலி. |
| கபிலர்மலை ஒன்றியம் | 5.00 PM | சோழிய வேளாளர் திருமண மண்டபம், கபிலர்மலை. |

**எஸ்.எம்.மதுரா செந்தில்**

செயலாளர் - நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.

## சனாதனம் பற்றிய அமைச்சர் உதயநிதியின் பேச்சு

# மகாத்மா காந்தியின் கருத்துக்களை எதிரொலிக்கின்றது!

### “நியூஸ் கிளிக்” இணைய இதழில் எஸ்.என்.சாஹு சிறப்புக் கட்டுரை

**சனாதனம் தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் அண்ணல் காந்தி அடிகளின் கருத்துக்களை எதிரொலிப்பதாக இருக்கின்றன என்று ‘NEWS CLICK’ இணையதள இதழில் எஸ்.என். சாஹு எழுதியுள்ளார்.**



சனாதன தர்மத்தில் தி.மு.க.வினருக்கு எதிரான பா.ஜ.க.வின் நிலைப்பாடு விவேகானந்தர், காந்தி மற்றும் அம்பேத்கரின் பார்வையை ஏற்க மறுக்கிறது என்று ‘நியூஸ் கிளிக்’ இணைய இதழில் எஸ்.என். சாஹு தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு:-

செப்டம்பர் 2 அன்று, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கம் நடத்திய சனாதன ஒழிப்பு மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழக முன்னணித் தலைவரும், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், சனாதன தர்மத்தை எதிர்க்கும் முந்தைய அணுகுமுறையில் இருந்து முற்றிலும் விலகி, ‘சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும்’ என்ற துணிச்சலான நிலை ப்பாட்டிற்காக ஏற்பாட்டாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

“சில விஷயங்கள் உள்ளன, அவற்றை நாம் ஒழிக்க வேண்டும், எதிர்க்க முடியாது” என்றார் உதயநிதி. இந்தச் சூழலில், “கொசுக்கள், டெங்கு, கொரோனா [வைரஸ்] மற்றும் மலேரியா ஆகியவை நம்மால் எதிர்க்க முடியாத விஷயங்கள் அவற்றை நாம் ஒழிக்க வேண்டும். சனாதனமும் இப்படித்தான். எதிர்க்காமல் இருக்க அல்ல சனாதனத்தை ஒழிப்பதே நமது முதல் பணியாக இருக்க வேண்டும்,” என்று அவர் வலியுறுத்தினார்.

கூர்மையான வார்த்தைகள் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது, ஆனால் அவை ஒவ்வொரு ஆண்டும் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டின் கருப்பொருளுடன் ஒத்திசைந்தன. சங்கம் சனாதன தர்மத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக, இந்த ஆண்டு,பெண்களின் நிலையை இழிவுபடுத்துதல் மற்றும் சாதியின் கீழ்மட்டத்தில் பிறந்தவர்களின் கொடூரமான பாகுபாட்டை மன்னித்தல் போன்ற பல நூற்றாண்டுகளாக அது உருவாக்கிய தொடர்ச்சியான பிரச்சினைகளுக்குதீர்வு காண வலியுறுத்துவது என்று முடிவு செய்தது.

கடுமையான சனாதன தர்மம் பெண்கள் மற்றும் உயர்சாதி அல்லாத சாதிகளை குறிவைக்கிறது.

சனாதன தர்மம் “நித்தியமானது” மற்றும் மாறாதது என்பதால், இந்து மதத்தின் மையமாக, அது ஒரு உயர்ந்த நிலையை அடைந்துள்ளது, அதை யாராலும் விசாரிக்கவோ மாற்றவோ முடியாது என்று உதயநிதி கூறினார். இத்தகைய கடினத்தன்மை மக்களை சாதியின் எல்லைக்குள் அடக்கி, சமத்துவமின்மை மற்றும் ஒடுக்குமுறையை நிலைநிறுத்தி, தாராளமயத்தை நசுக்கியது.

சனாதன தர்மம், “…கணவனை இழந்த பெண்களை நெருப்பில் தள்ளியது [முந்தைய சதி பழக்கம்]… விதவைகளை வருத்தி, அவர்களை வெள்ளைப் புடவை அணியச் செய்தது” மற்றும் குழந்தைத் திருமணங்களை நிலைநிறுத்தியது என்று அவர் விவரித்தார்.

**உதயநிதி அரசியலுக்கு எதிராக பா.ஜ.க.**

சனாதன தர்மத்திற்கும் “கொசுக்கள், டெங்கு, கொரோனா மற்றும் மலேரியாவிற்கும்” இணையாக உதயநிதியை விமர்சித்து அதை ஒழிக்கக் கோரியதற்காக பா.ஜ.கவும் அதன் தலைவர்களும் விமர்சித்தனர். பா.ஜ.க.வின் தகவல் தொழில் நுட்பப் பிரிவு தலைவர் அமித் மாளவியா தனது கருத்துகளுக்கு ஒரு வினோதமான திருப்பத்தை அளித்தார், இது சனாதனிகளின் “இனப்படுகொலைக்கான” அழைப்பு என்று கூறினார், அவரைப் பொறுத்தவரை, “பாரதத்தின் 80% மக்கள்” சனாதானிகளாக உள்ளதாக குறிப்பிடுகிறார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ராஜஸ்தானில் நடைபெற்ற பேரணியில் பேசியபோது, சனாதன தர்மம் குறித்து உதயநிதியின் வார்த்தைகள், தி.மு.க.வில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி கூட்டணியான இந்தியாவின் கருத்தை பிரதிபலிக்கிறது என்று கூறினார். “ஓட்டு வங்கி மற்றும் திருப்தி அரசியலுக்காக, இந்த மக்கள் சனாதன தர்மத்தை ஒழிக்க அழைப்பு விடுத்துள்ளனர்” என்று அமித் ஷா கூறினார். இது நமது கலாச்சாரம், வரலாற்றை அவமதிக்கும் செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி கூட, சனாதன தர்ம “விவாதத்திற்கு” உரிய முறையில் பதிலளிக்குமாறு தனது அமைச்சர்களை வற்புறுத்தினார், மேலும் உத்தரபிரதேசத்தில் உதயநிதிக்கு எதிராக எஃப்ஐஆர் பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பி.ஜே.பி.யின் ஆக்ரோஷமான பதிலடி, இந்து மதத்தில் சேருபவர்களின் அன்றாட வாழ்வில் சனாதன தர்மத்தின் பெயரில் உள்ள வேறுபாடுகளையும் பாகுபாடுகளையும் நிலைநிறுத்திக் கொண்டே, தேர்தல் நோக்கங்களுக்காக ஹிந்து ஏகத்துவத்தை உருவாக்க, மதப் பிரச்சினைகளில் மக்களைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சாதியத் தடைகள் இந்து மதத்திற்குள் ஆழமான தவறுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதில் சந்தேகமில்லை, ஆனால் சாதிப் படிநிலையில் உள்ளார்ந்த பாகுபாடு அகற்றப்படும் வரை இவற்றை நிரப்ப முடியாது.

தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, உதயநிதி கோயில்களை இடிப்பதாகவும், சனாதன தர்மத்தைப் பின்பற்றுபவர்களைக் கொல்வதற்கும் சமமான அறிக்கைகளை வெளியிடுகிறார் என்று குற்றம் சாட்டினார்.

திராவிட இயக்கம் சமத்துவம் மற்றும் சமூக நீதி, தமிழ்நாட்டின் ஆட்சியின் மையக் கருத்துக்கள் மற்றும் சனாதன தர்மத்தின் அடிப்படையில் இந்துத்துவாவை கடுமையாக வேறுபடுத்துவது ஆகியவற்றின் அடிப்படையிலானது என்று உதயநிதி தெளிவுபடுத்தியுள்ளார்.

**தி.மு.க. எப்போதும் சனாதன தர்மத்தை எதிர்த்தது**

பா.ஜ.க., தி.மு.க. மற்றும் ‘இந்திய’க் கூட்டணியைக் குறிவைத்து, நன்கு அறியப்பட்ட மற்றும் புதிய கருத்துகளை வெளிப்படுத்துவது மிகவும் விசித்திரமானது. அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது தென்னிந்தியக் கட்சியை தேசிய ஜனநாயகக் கூட்டணியில் (NDA) கொண்டு வந்து தி.மு.க.வுடன் 1999ம் ஆண்டு கூட்டணி வைத்ததன் மூலம் பாஜக தேர்ந்தெடுக்கப்பட்ட மறதியை உருவாக்கியுள்ளது போல் தெரிகிறது. சனாதன தர்மத்திற்கு எதிரான தி.மு.க.வின் நிலைப்பாடு 1920களின் தொடக்கத்தில் தொடங்கிய திராவிட இயக்கத்தில் இருந்து அறியலாம். சாதி, பாலினம், மத வேறுபாடுகள் இன்றி அனைவருக்கும் சமத்துவம், சம வாய்ப்புகள், சமூக நீதி ஆகியவற்றை நிலைநாட்ட தி.மு.க. தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

எனவே, சனாதன தர்மத்திற்கு எதிரான அவரது கருத்துக்கள் தொடர்பாக உதயநிதியையும் அவரது கட்சியையும் குறிவைக்கும் பா.ஜ.க. தலைமை அதன் பக்கச்சார்பற்ற மற்றும் ஆழமற்ற அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது.

**சுவாமி விவேகானந்தரின் நிலைப்பாடு**

சனாதன தர்மத்தைப் பற்றிய உதயநிதியின் கருத்துக்கள் சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆகியோரை நினைவூட்டுகின்றன. சாஸ்திரங்கள் அல்லது வேதங்கள், சனாதன தர்மத்தின் அடித்தளமாக அமைகின்றன. அவற்றுள் ஒன்று மனுஸ்மிருதி ஆகும், அம்பேத்கர் மேல்தட்டு அல்லாத சாதிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை அதன் ஒப்புதலை நிராகரித்தார்.

ஒருவேளை, இந்து மதத்தின் பல பண்புகளை (பெரும்பாலும் சனாதன தர்மத்துடன் இணைத்து) போற்றிய புகழ்பெற்ற இந்து துறவி விவேகானந்தரை பி.ஜே.பி. தவிர்த்திருக்காது, ஆனால் அது தன்னைப் பின்பற்றுபவர் களில் ஒரு பிரிவினரை எப்படி சீரழித்தது என்பதை விமர்சிக்கும் வாய்ப்பை இழக்கவே இல்லை.

1893 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதி அமெரிக்காவில் இருந்து தனது சீடர் அளசிங்கப் பெருமாளுக்கு எழுதிய கடிதத்தில், “இந்துமதம் போன்ற உயர்ந்த விகாரத்தில் மனிதகுலத்தின் மாண்பை உலகில் எந்த மதமும் போதிக்கவில்லை” என்று எழுதினார். ஆனால், “இந்து மதத்தைப் போல பூமியில் எந்த மதமும் ஏழைகள் மற்றும் தாழ்த்தப் பட்டவர்களின் கழுத்தில் மிதிக்கவில்லை” என்று அவர் அப்பட்டமாகப் பார்த்தார்.

2023-ல் விவேகானந்தர் இது பற்றி இந்தியாவில் இருந்து எழுதிக் கொண்டிருந்தால், உதயநிதியைப் கண்டித்தது போலவே பா.ஜ.க.வின் தகவல் தொழில் நுட்பப் பிரிவு விவேகானந்தரையும் கண்டித்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கும்.

**எஸ்.என்.சாஹு**
முன்னாள் குடியரசுத் தலைவர்
கே.ஆர்.நாராயணன் அவர்களின்
சிறப்புப் பணி அதிகாரி



**காந்தி சனாதன தர்மம்**

காந்தியின் தேசத்தைச் சேர்ந்தவன் நான் என்று வெளிநாட்டில் இருக்கும்போது பிரதமர் பெருமிதம் கொள்கிறார், ஆனால் அவரது இந்த வார்த்தைகளுக்காக காந்தியை கடுமையாக விமர்சிக்கு மாறு அவர் தனது மந்திரிகளைக் கேட்டுக் கொண்டிருப்பார்: “சனாதனவாதிகளின் கோட்டையை டைனமைட் மூலம் தரைமட்டமாக்குவேன். தீண்டத்தகாத வர்கள் அனைவரும் ஒன்றாகி ஒன்றுபட்டு இருந்தால் என்று மகாத்மா காந்தி குறிப்பிட்டிருந்ததை பிரதமர் தெரிவித்துள்ளார்.

காந்தி மேலும் கூறினார், “ஒட்டுமொத்த தீண்டத்தகாத சமூகமும் ஒன்றுபட்டு சனாதனவாதிகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.” 1932 செப்டம்பர் 22 அன்று, டாக்டர் பி.ஆர். அம்பேத்கருடன், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான தனித் தொகுதிகள் குறித்த விவாதத்தின் போது, காந்தி அதை எதிர்த்தார். ஆயினும்கூட, காந்தி 2023 இல் அதுபற்றி பேசியிருந்தால், இந்துத்துவா கும்பல் மற்றும் பாஜக தலைவர்கள் பல எஃப்ஐஆர்களை வீசியிருப்பார்கள் மற்றும் அவரது உயிருக்கு பல்வேறு அச்சுறுத்தல்களை வீசியிருப்பார்கள்.

சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்ற உதயநிதியின் நம்பிக்கையில் காந்தியின் கருத்துகள் எதிரொலிக்கின்றன.

உண்மையில், காந்தி அந்தத் தளத்தில் தீண்டாமைக்கு எதிராக இடைவிடாமல் பிரச்சாரம் செய்யும் போது தன்னை ஒரு சனாதானி இந்து என்று அழைத்துக் கொண்டார். கோவில்களில் தலித் நுழைவு மற்றும் அனைத்து மதங்களையும் மதிக்க வேண்டும் என்று போராடினார். தீண்டாமை நீடித்தால், சனாதன தர்மம் அழிந்துவிடும் என்று அடிக்கடி கூறி வந்தார்.

பல சந்தர்ப்பங்களில், காந்தி தனது இலட்சியங்களைப் பின்பற்றியதற்காக உடல் ரீதியாக தாக்கப்பட்டார். அம்ரித்லால் தக்கருக்கு எழுதிய கடிதத்தில், “சனாதனிஸ்டுகள் என்று அழைக்கப்படுபவர்கள் விழித்துக் கொள்ளத் தவறி, தங்கள் வீண்பெருமையால், வெகுஜனங்களின் உதவியுடன் குண்டடித்தனத்தை நாடினால், இந்துத்துவம் அழியட்டும்” என்று எழுதினார்.

தலையை துண்டிப்பதற்காக ரூ.10 கோடி வழங்கப் படும் என்ற அறிவிப்பு உட்பட உதயநிதிக்கு அச்சுறுத்தல் வந்த சூழலில் காந்தியின் வார்த்தைகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

**சனாதன தர்மம் பற்றி பி.ஆர்.அம்பேத்கர்**

1937 ஆம் ஆண்டில், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் தனது வரலாற்று உரையை எழுதினார், “சாதி ஒழிப்பு”, ஒரு வருடம் கழித்து வெளியிடப்பட்டது, “டைனமைட்” சனாதன தர்மத்தின் அடித்தளமாக இருக்கும் வேதங்களை தகர்க்க வேண்டும் என்ற அறிக்கையுடன். சமுதாயத்தை முற்போக்கான பாதையில் மாற்றுவதற்கு பகுத்தறிவு மற்றும் ஒழுக்கத்தைப் பயன்படுத்திய சீர்திருத்தவாதிகள், ஜாதியின் பாதுகாவலர்களால் அது பகுத்தறிவுக்கும் ஒழுக்கத்திற்கும் பொருந்துமா என்பதை விளக்க முடியாது என்று அவர் கூறினார்.

எனவே, “நீங்கள் அமைப்பில் ஒரு மீறலைக் கொண்டு வர விரும்பினால், நீங்கள் எந்தப் பகுதியையும் பகுத்தறிவுக்கு மறுக்கும் வேதங்கள் மற்றும் சாஸ்திரங்களுக்கு டைனமைட்டைப் பயன்படுத்த வேண்டும்; அறநெறிக்கு எந்தப் பகுதியையும் மறுக்கும் வேதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும்” “சுருதிகள் மற்றும் ஸ்மிருதிகளின் மதத்தை நீங்கள் அழிக்க வேண்டும்” என்று அம்பேத்கர் எழுதினார்.

அம்பேத்கர் இன்று உயிருடன் இருந்திருந்தால், கடுமையான விதிகளின் கீழ் நீதிமன்ற வழக்குகளை எதிர்கொள்வதைத் தவிர, அவரது உயிருக்கும் அச்சுறுத்தல் வந்திருக்கும்.

‘சாதி ஒழிப்பு குறிப்பாக சனாதன தர்மத்தைத் தவிர்த்து, சமூக மாற்றம் மற்றும் முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்து சமுதாயத்தின் முன்னேற்றம் அதன் மரபுகளின் பரிணாம வளர்ச்சியில் இணைக்கப்பட வேண்டும்’ என்று அவர் நம்பினார்.

அவர் கூறினார், “நிலையானது, நிலையானது எதுவுமில்லை, சனாதனமானது எதுவுமில்லை என்பதை இந்துக்கள் அங்கீகரிக்கும் காலம் வரவில்லையா என்பதை சிந்திக்க வேண்டும்; எல்லாமே மாறிக் கொண்டே இருக்கிறது, அந்த மாற்றம் என்பது தனிமனிதர்களுக்கும் சமூகத்திற்கும் வாழ்க்கைச் சட்டம்.

“மாறிவரும் சமுதாயத்தில், பழைய விழுமியங்களின் ஒரு நிலையான புரட்சி இருக்க வேண்டும், மேலும் ஆண்களின் செயல்களை அளவிடுவதற்கான தரநிலைகள் இருக்க வேண்டும் என்றால், அந்தத் தரங்களைத் திருத்துவதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதை இந்துக்கள் உணர வேண்டும்” என்றார் அம்பேத்கர். ”

1930 களின் நடுப்பகுதியில் இருந்து இந்த வலிமை வாய்ந்த கவனிப்புகள் உதயநிதியின் கூற்றுகளில் எதிரொலித்தது, சனாதன தர்மம், அதன் மாறாத பண்புகளுடன், இந்து சமூக அமைப்பை இறுக்கமாக்கியது மற்றும் சாதியத்தின் மூலம் சமத்துவமின்மை மற்றும் ஒடுக்குமுறையை நிலைநிறுத்தியது, அது சனாதனமாக கருதப்படுகிறது.


சமீபகாலமாக, பிரதமர் மோடி உட்பட பாஜக தலைவர்கள் அம்பேத்கரை அரவணைத்து, காங்கிரஸ் அவரை ஓரங்கட்டப்பட்டாலும், சமகால வரலாற்றில் அவருக்குப் பெருமை சேர்த்திருப்பதாகக் கூறுகிறார்கள். சனாதன தர்மத்தின் ஏற்றத்தாழ்வு மற்றும் அநீதியை விமர்சித்த சுவாமி விவேகானந்தர், காந்தி மற்றும் அம்பேத்கர் ஆகியோருக்கு மோடி செவிசாய்க்க முடியுமா ?

சனாதன தர்மத்தில் மாற்றங்களை எதிர்த்தவர்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ராஜா ராம்மோகன் ராய், சுவாமி தயானந்த சரஸ்வதி, நாராயண குரு மற்றும் பலர் மேற்கொண்ட சீர்திருத்தங்களையும் எதிர்த்தனர். சனாதன தர்மம் குறித்த உதயநிதியின் அறிக்கைகளை எதிர்ப்பதன் மூலம், பிரதமர் இந்தியாவின் அரசியலமைப்பு பார்வைக்கும், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி மற்றும் பி.ஆர்.அம்பேத்கர் உள்ளிட்ட மாபெரும் சீர்திருத்தவாதிகளின் உலகப் பார்வைக்கும் எதிரான நிலைப்பாட்டை எடுக்கிறார்.

இவ்வாறு எஸ்.என்.சாஹு தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். ●



மதுரை மாநகராட்சி மேலவைத்தியநாதபுரம் நான்குமுனை சந்திப்பு அருகில் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர மின்விளக்கை மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன்,மாநகராட்சி ஆணையாளர் கே.ஜே.பிரவீன்குமார் ஆகியோர் நேற்று முன்தினம் (11.09.2023) பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். உடன் துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர் திருமதி.சரவணபுவனேஸ்வரி, மாமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு அரசின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் இராணிப்பேட்டை நகராட்சி பகுதியில் கழிவறைகள் கட்ட ரோகா பாத்ரூம் ப்ராடக்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பங்களிப்புத் தொகையாக ரூ.19.50 இலட்சம் இராணிப்பேட்டை நகராட்சிக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தியிடம் ரவி ராஜகோபாலன்,பத்மகுமார் ,சதீஷ் பார்த்திபன் ஆகியோர் வழங்கினார்கள். இதில் இராணிப்பேட்டை நகர மன்ற தலைவர் திருமதி. சுஜாதா வினோத், நகராட்சி ஆணையர் விநாயகம் உடனிருந்தனர்.

### மருத்துவர்கள் - மருத்துவ மாணவர்கள் தாங்கள் சந்திக்கும் பொதுமக்களிடம்

# உடற்பயிற்சி - உடல் நலம் பேணுவது குறித்து அறிவுறுத்துவீர்!

## சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, செப். 13 -**

**சென்னை மருத்துவக் கல்லூரியில் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிக்கான விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி உரையாற்றுகையில் மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், செவிலியர்கள், சுகாதார அலுவலர்கள் தாங்கள் சந்திக்கும் பொது மக்களிடம் உடற்பயிற்சி உடல் நலம் பேணுவது குறித்து அறிவுறுத்துவீர் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**சென்னை மருத்துவக் கல்லூயில் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை வழங்கி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

இந்தியாவிலே மிகப் பெரியதும் மிகப் பழமையானதுமான மருத்துவக் கல்லூரியில் நடைபெறும் இந்த இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தக் கல்லூரியில்தான் என்னுடைய தாயாரின் தம்பி ராஜமூர்த்தி அவர்கள் படித்தார். அவரைப் பார்ப்பதற்காக இந்தக் கல்லூரிக்கு நான் சிறுவயதாக இருந்தபோது ஏற்கனவே இரண்டு ஒரு முறைகள் நான் வந்திருக்கின்றேன்.

அப்படிப்பட்ட இந்தக் கல்லூரிக்கு வந்து உங்களை எல்லாம் சந்தித்துப் பரிசு வழங்குவதில், நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். மெட்ராஸ் மெடிக்கல் காலேஜ் தமிழ்நாட்டுக்கு மட்டும் முக்கியமான அடையாளம் அல்ல, இந்தியாவுக்கே மிகவும் முக்கியமான ஒரு அடையாளமாகும்.

சுதந்திரத்துக்கு முன்பே நூற்றாண்டு கண்ட கல்லூரி இந்தக் கல்லூரி... தற்போது இருநூறாவது ஆண்டை நோக்கி இது பயணித்துக் கொண்டிருக்கிறது.

நாட்டின் முதல் பெண் மருத்துவர் (இந்தியாஸ் ஃபர்ஸ்ட் லேடி டாக்டர்) முத்துலட்சுமி ரெட்டி இந்தக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்தான். அவரது பெயரில்தான் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், `டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி' மகப்பேறு மருத்துவர் நலத்திட்டம் என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, மக்களுக்குப் பயன் அளித்து வருகின்றது.

உலகின் தலைசிறந்த மருத்துவர் களை உருவாக்கிய, இந்த மெட்ராஸ் மெடிக்கல் கல்லூரி இன்றளவும் தலைசிறந்த மருத்துவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

இப்படிப் பல பெருமைகளைக் கொண்ட இந்த மருத்துவக் கல்லூரியில் `இன்டர் காலேஜ் விளையாட்டுப் போட்டிகளை' நடத்தி விளையாட்டு வீரர்களுக்குப் பரிசளிப்பு வழங்கும் விழாவில் கலந்துகொண்டு பரிசுகள் வழங்குவதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

உடல் நலத்தைப் பாதுகாக்க, விளையாட்டு எவ்வளவு முக்கியமானது என்பதை, மற்றவர்களைவிட மருத்துவக் கல்லூரி மாணவர்களான நீங்கள் அதிகம் அறிவீர்கள்.

மருத்துவர்களும் சரி, மருத்துவ மாணவர்களும் சரி, உங்களைப் பார்க்க வருபவர்களிடம் நீங்கள் கூறும் முதல் அறிவுரை 'தினமும் நடைபயிற்சி மேற்கொள்ளுங்கள்' என்பதுதான்.

### இளம் வயதினர் நடைபயிற்சி!

முன்பெல்லாம் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் பார்க், பீச், என்று வாக்கிங் போவார்கள். ஆனால், இப்போது அப்படி அல்ல, இளம் வயதினர்கூட அதிகாலையிலேயே எழுந்து ஜாக்கிங், வாக்கிங், சைக்கிளிங் என்று செல்வதைப் பார்க்க முடிகிறது.

எல்லோருக்கும் உடற்பயிற்சி மீது அக்கறை வருவதற்கு மருத்துவர்களும் மருத்துவ மாணவர்களுமே முக்கியக் காரணம்.

தமிழ்நாட்டின் பல்வேறு மருத்துவமனைகளுக்கும் சுகாதார நிலையங்களுக்கும் சென்று நான் ஆய்வுகளை அவ்வப்போது மேற்கொண்டு வருகின்றேன்.

சில நாட்களில் இரவு நேரங்களில் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் போது, அங்குள்ள பயிற்சி மருத்துவ டாக்டர்களுடன் கலந்துரையாடுகின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன்.

மருத்துவர்கள் மருத்துவப் பயிற்சி மாணவர்கள் மற்றும் செவிலியர்கள், என்னை அன்பாக அழைத்துச் சென்று ஒவ்வொரு வார்டாக, ஒவ்வொரு பிரிவாகக் காண்பித்து அங்குள்ள நிலவரங்கள் நடைமுறைகளை விளக்கி கூறுவார்கள்.

### கோவிட் பணியில் மருத்துவர்களின் பங்களிப்பை மறக்க முடியாது!

நான் ஒரு மணி நேரம் ஆய்வு மேற்கொண்டு அங்கு இருந்து கிளம்பி விடுவேன். அதேபோல் அங்கே மருத்துவம் பார்த்துக் கொண்டிருப்பவர்களும், ஒரு வாரமும் இரண்டு வாரமோ இருந்து மருத்துவம் பார்த்துவிட்டு, அங்கிருந்து கிளம்பி சென்று விடுவார்கள். ஆனால், நீங்கள்தான் அங்கேயே தொடர்ந்து, இருந்து மக்கள் சேவையைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதற்காக உங்கள் அனைவரையும் எவ்வளவு பாராட்டினாலும் ஈடாகாது.

மற்ற அரசு ஊழியர்களைப் போல உங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை, பொங்கல், தீபாவளி போன்ற நாட்களில் கூட உங்களுக்கு



விடுமுறை கிடையாது.

குறிப்பாகக் கோவிட் காலத்தில் நீங்கள் ஆற்றிய சிறப்பான பணி என்றும் மறக்க முடியாதது. இந்தியாவிலேயே கோவிட்டிலிருந்து விடுபட்ட முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்ததற்கு மிக முக்கியக் காரணம் மருத்துவர்களும், மருத்துவப் பயிற்சி மாணவர்களும் செவிலியர்களுமான நீங்கள்தான் என்றால், அதை யாராலும் மறுக்கமுடியாது.

உங்கள் நண்பர்களுடன், குடும்பத்தினருடன் உங்களால் நேரத்தை மகிழ்ச்சியாக செலவிட முடியாது. அந்த அளவு கடும் நெருக்கடியான பணிச் சூழலில் நீங்கள் இருக்கிறீர்கள்.

இத்தனை பணிச் சுமைக்கும் பணிச் சூழலுக்கும் இடையில் நீங்களெல்லாம் இந்த விளையாட்டுப் போட்டியில், கலந்து கொண்டு விளையாடியதை எண்ணி நான் பெருமை அடைகிறேன். உங்களைப் பாராட்டுகின்றேன்.

விளையாட்டுப் போட்டிகளின் மீது உங்களுக்கு எந்த அளவு ஆர்வம் இருக்கிறதோ, அதே அளவு இந்த விளையாட்டு துறையின் மீது நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அதனால்தான் விளையாட்டுத்துறையில் நான் வைக்கும் அத்தனை கோரிக்கைகளையும் முன்னின்று நிறைவேற்றித் தந்துகொண்டிருக்கிறார்கள்.

### விளையாட்டுப் போட்டி : தொடர்ச்சியாக நடைபெறுகின்றன!

விளையாட்டுத்துறையில் இதுவரை நிகழ்த்தியுள்ள சாதனைகளையும் எடுத்து வைக்கும் ஒவ்வொரு முன்னெடுப்புகளையும் பற்றி இப்போது நான் குறிப்பிட விரும்புகின்றேன். கழக அரசு அமைந்த உடன் ஏராளமான போட்டிகளைத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றது.

சென்னையில் நடந்த `செஸ் ஒலிம்பியாட் போட்டி'யை உலகமே வியந்து பார்த்து மனம் திறந்து பாராட்டியது.

'உலக ஸ்குவாஸ் போட்டி' 'ஏசியன் சாம்பியன்ஷிப் போட்டி' 'உலக சர்பிங் போட்டி' என ஏராளமான போட்டிகளை இங்கு நாம் நடத்தி இருக்கின்றோம். பல சர்வதேசப் போட்டிகளை நமது கழக அரசு நடத்தியுள்ளது.

நாம் நடத்திய முதலமைச்சர் விளையாட்டுக் கோப்பை போட்டிகளில், மூன்று லட்சத்து 57 ஆயிரம் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் எனப் பலரும் பங்கேற்றார்கள்.

தமிழ்நாடு ஓரிசா ஆகிய இரண்டு மாநிலங்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு, இரு மாநில விளையாட்டு வீரர்களும் தங்களின் விளையாட்டுக் கட்டமைப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும், பயிற்சி மேற்கொள்ளவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிலிருந்து 25 விளையாட்டு வீரர்கள் ஓரிசாவுக்குச் சென்று, அங்குப் பயிற்சி மேற்கொள்ள இருக்கிறார்கள்.

### வீரர் - வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகை!

அதேபோல், தேசிய, சர்வதேசப் போட்டியில் சாதிக்கும் வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்குகின்றோம்.

2021ஆம் ஆண்டு முதல் இதுவரை ரூபாய் 65 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம். அதேபோல், மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கும் உயரிய ஊக்கத் தொகை வழங்க வேண்டும் என்னும் அவர்களுடைய இருபது வருட கோரிக்கையை ஏற்று, முதலமைச்சர் அவர்கள் அதற்கான அரசாணையையும் வழங்கி உள்ளார்கள். அவற்றையும் வழங்கியுள்ளோம்.

உங்கள் அனைவருக்கும் மணிப்பூரில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரியும். கடந்த நான்கு மாதங்களாக மணிப்பூரில் பல வன்முறை சம்பவங்கள் நடந்தேறி வருகின்றன. அந்த மாநிலத்தில் விளையாட்டு வீரர்கள் மிகவும் அதிகம்.

அந்த மாநிலத்தில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு உரிய பாதுகாப்பு அங்கு இல்லாததால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 'இங்குத் தமிழ்நாட்டுக்கு வந்து உங்களின் பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள்' என்று அழைப்பு விடுத்தார் அந்த அடிப்படையில், '20 பென்சிங் வாள் வீச்சு' விளையாட்டு வீரர்கள் இங்கு வந்து பயிற்சி மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்த மணிப்பூர் மாநில விளையாட்டு வீரர்கள் நம்முடைய தமிழ்நாட்டை, நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

விளையாட்டுத்துறைக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் தமிழ்நாடு அரசு எடுத்து வரும் முன்னெடுப்புகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

மருத்துவர்கள் மருத்துவ மாணவர்கள் செவிலியர்கள் சுகாதாரப் பணியாளர்கள் உங்கள் அனைவருக்கும் என்னுடைய கோரிக்கையை முன் வைக்கிறேன்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் அனைவரும் ஏராளமான பொதுமக்களை அன்றாடம் சந்திப்பீர்கள். அப்படி நீங்கள் சந்திக்கும்போது அவர்களிடம் உடற்பயிற்சியையும் உடல் நலத்தையும் பேணுவது பற்றி அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்

இந்த விழாவில், நான் அரசியல் பேச விரும்பவில்லை. இந்தியா முழுவதும் ஒரு விஷயத்தைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது என்ன விஷயம் என்று நான் உங்களுக்குச் சொல்ல தேவையில்லை. அதுவே உங்களுக்குப் புரியும் என்று நான் நினைக்கின்றேன்.

தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் கலைஞர் அவர்களும் இளைஞர்களிடம் எந்த ஒரு விஷயத்தையும் பகுத்தறிவு கொண்டு ஆய்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள் என அறிவுறுத்தி வந்தார்கள்.

எனவே, ஒரு விஷயத்தைத் தவிர்த்து, ஆய்ந்து ஆய்வுசெய்து அதில் உள்ள உண்மைத் தன்மையை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இத்தனை பெண்கள் இப்போது மருத்துவம் படிக்கிறீர்கள் என்றால், அதற்குக் காரணம் திராவிட இயக்கம்.

டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்றால், சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்று கூறினார்கள். அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து பெண்களை, இன்று கல்வியிலும் மருத்துவத்திலும் மேன்மேடையச் செய்திருக்கிறோம் என்றால், அது நம் திராவிட இயக்கத்தின் சாதனையாகும்.

இதைத்தான் ஆறு நாட்களுக்கு முன்பு, நான் ஒரு மேடையில் பேசினேன். இதை நான் பேசியது சரியா தப்பா என்பதை நீங்கள் யோசித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். நான் என்ன பேசினேன், என்ன அர்த்தத்தில் பேசினேன், என்பதை நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும். திராவிட இயக்கத்தால் உங்கள் குடும்பத்திற்கு என்ன பலன் கிடைத்திருக்கிறது, என்பதை நீங்கள் ஆராய்ந்துப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று, நான் கேட்டுக் கொள்கின்றேன். விளையாட்டுப் போட்டிகளில் பரிசு பெற்றுள்ளவர்களுக்கும் அனைத்து மாணவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைக் கூறி, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

# பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

### மாவட்டச் செயலாளர் தே. மதியழகன் அறிக்கை

*கிருஷ்ணகிரி, செப்.13 -*

*பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்தநாள் விழா, மாவட்ட செயற்குழு கூட்டம், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அணிகளின் நிர்வாகிகள் அறிமுகம் குறித்த மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-*

*தென்னாட்டு பெர்னாட்ஷா, திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்தவரும், நம்மை எல்லாம் வளர்த்து ஆளாக்கியவருமான பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த நாள் விழா வருகிற 15ம் தேதி வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.*

*அதேபோல கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திலும் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி 15 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும்,*

*பர்கூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினருமான தே.மதியழகன் எம்.எல்.ஏ. எனது தலைமையில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி கலந்து கொண்டு மாலை அணிவித்து, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்க உள்ளார்.*

*இதனைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக தலைவரும், தமிழக முதலமைச்சருமான தளபதியார் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்டு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத உன்னத திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை காஞ்சிபுரத்தில் கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் துவக்கி வைக்க உள்ளார்.*

*இதனை தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டம், ஜெகதேவி கிராமத்தில் தமிழக அரசின் சார்பாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழா நடைபெற உள்ளது. இந்த விழாவிலும் தமிழக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரும்,*

*கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி கலந்து கொண்டு மகளிருக்கு உரிமை தொகை வழங்க உள்ளார்கள்.*

*இதனை தொடர்ந்து கிருஷ்ணகிரி கிழக்கு*



*மாவட்டச் செயற்குழு கூட்டம் மற்றும் புதியதாக நியமிக்கப்பட்டுள்ள அணிகளின் நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் ஜெகதேவியில் நடைபெற உள்ளது.*

*இந்த விழாக்களில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத்தலைவர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், மகளிர் அணியினர், மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

*முன்னதாக ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளை கழக செயலாளர்கள் அவர்கள் சார்ந்த பகுதிகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் படம் வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி விட்டு வந்து இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.*

*மாவட்ட செயற்குழுக் கூட்ட பொருள்*

*1. திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளரும்,*

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 25.09.2023 திங்கட்கிழமை அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை குறித்து.*

*2. கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குவது தொடர்பாக.*

*3. அணிகளின் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து.*

*4. கழக ஆக்கப் பணிகள்.*

*இவ்வாறு அறிக்கை விடுத்துள்ளார்.*

---

### தமிழ்நாடு முழுவதும்

# நீர்நிலைகளை தூர்வாரும் பணி இம்மாத இறுதிக்குள் முடியும்!

### ஒரே நேரத்தில் 77 இடங்களில் பணிகள்; நீர்வளத்துறை அதிகாரிகள் தகவல்!

சென்னை, செப்.13-

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள நீர்நிலைகளை தூர்வாரும் பணிகள் இம்மாதம் இறுதிக்குள் முடிக்கப்படும் என்று நீர்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தமிழ்நாட்டில், ஜுன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை தென்மேற்கு பருவமழை காலம் இருக்கும். தென்மேற்கு பருவமழை காலம் நிறைவு பெற்றவுடன் வடகிழக்கு பருவமழையானது தொடங்கும். இந்த பருவமழை காலத்தில் தான் தமிழகம் உள்பட தென் இந்திய பகுதிகளில் சில இடங்களுக்கு அதிகளவு மழை கிடைக்கும்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மழைநீர் வடிகால்களில் உள்ள இயற்கை தாவரங்கள், மிதக்கும் குப்பைகள் மற்றும் கட்டிட கழிவுகள் ஆகியவற்றை பருவமழைக்கு முன்னர் அகற்றவும், அனைத்து நீர்நிலைகளும் உறுதியான நிலையில் உள்ளதாக உள்ளிட்ட பணிகளை நீர்வளத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். இந்நிலையில், சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள நீர்வழிகளை இம்மாதம் இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மற்றும் கடலூர் மாவட்டத்தில் உள்ள போரூர், நெற்குன்றம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை சுத்தம் செய்யும் பணிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து நீர்வளத் துறை அதிகாரிகள் கூறுகையில்: வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு சென்னை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை சுத்தம் செய்யும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. தற்போது 30% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணியை இம்மாத இறுதிக்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது. மேலும், சென்னை மற்றும் அதனை சுற்றி உள்ள மாவட்டங்களில், 184.45 கி.மீ., தூரம் செல்லும் வாய்க்கால்களில், ஒரே நேரத்தில் 77 இடங்களில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. பருவமழையை கருத்தில் கொண்டு, நீர்நிலைகளில் ஒரே சீரான ஓட்டத்திற்காக 137 இயந்திரங்களுடன் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அதன்படி விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் இடையிலான கால்வாயின் குறுகலான பகுதியில் நீர்வழிப் பாதைகள் உள்ளன.

இதில் உள்ள செடிகள் மற்றும் கழிவுகளை அகற்றுவதற்காக கிரேன்கள் போன்ற இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் அந்த கழிவுகளை கிரேன்கள் மூலமாக வேறுஇடத்திற்கு மாற்றப்படும் வகையில் கொடுங்கையூர் குப்பை கிடங்கிற்கு அனுப்பப்படுகிறது. இந்த பணிகளை கண்காணிப்பதற்காக பொறியாளர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் இடையேயான கால்வாய், பக்கிங்காம் கால்வாய் மற்றும் ஓட்டேரி பகுதியில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் சென்னை மாநகராட்சியின் உதவியுடன் 72 லாரிகளில் மரங்கள் மற்றும் செடிகள் அகற்றப்பட்டுள்ளன என தெரிவித்தனர்.

# திராவிடமும் சநாதனமும்!

உதயநிதியைப் பற்றி இந்தியாவெங்கும் பேச்சாக இருக்கிறது. காவல் நிலையங்களிலே புகார் கொடுக்கிறார்கள். 262 பேர் இந்திய தலைமை நீதிபதிக்கு அவரைப் பற்றி நடவடிக்கை எடுக்குமாறு எழுதுகிறார்கள். வழக்குத் தொடுக்கப் போகிறோம் என்று அறிவிப்பு செய்கிறார்கள். உதயநிதியின் தலைக்கு ரூ.10 கோடி விலை வைக்கிறார்கள். அப்படி என்ன செய்து விட்டார் உதயநிதி?

கடந்த செப்டம்பர் 2ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற சநாதன எதிர்ப்பு மாநாட்டில், சநாதனம் மக்களுக்கு சமத்துவம் வழங்கப்படாதபோது ‘சநாதனம் ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று’ என்கிற கருத்துப்பட பேசிவிட்டார். இவை குறித்துதான் இந்தியாவெங்கும் உதயநிதியின் பேச்சாகவும் ஒரு சாராரின் எதிர்ப்பாகவும் வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் உண்மை என்னவென்றால் மோகன் பகாவத் சொன்ன கருத்தைத்தான் உதயநிதி கூறியிருக்கிறார். அதை அவர் வேறு வார்த்தைகளில் தெரிவித்து இருக்கிறார். என்ன மோகன் பகாவத்தா?

ஆமாம்: ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகாவத் கூறிய ஒரு கருத்து ‘இந்து தமிழ் திசை’ 8.9.2023 இதழில் வெளியாகி இருக்கிறது. அது இதுதான்:

“சமூக அமைப்பில் 2 ஆயிரம் ஆண்டுகளாக நாம் நம் சொந்த மக்களையே பின்தங்கிய நிலையில் வைத்திருந்தோம். அவர்கள் மீது நாம் அக்கறை காட்டவில்லை. இதற்குத் தீர்வு காணும் வகையில் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. சமூகத்தில் பாகுபாடு இருக்கும்வரை இடஒதுக்கீடு வழங்குவது அவசியம். ஆர்.எஸ்.எஸ். இதற்கு முழு ஒத்துழைப்பை வழங்கும்”

பகாவத் கூறும் மேற்சொன்ன கருத்து நமக்கு ஆதரவாக இருக்கிறது. அதுவே சமத்துவத்துக்கு எதிராக இருந்தால் அதை சநாதனம் என்கிறோம். பழமைவாதம் என்கிறோம். அந்த சநாதனத்தை - பழமையைத் திராவிடம் எதிர்க்கிறது. உதயநிதி எதிர்க்கிறார். உதயநிதி வெளிப்படையாகச் சொல்கிறார். ராவ்ஜியோ அவர்களின் கொள்கையை மறைத்துக் கொண்டு இட ஒதுக்கீடு சாதனையை மட்டும் கூறுகிறார். சொந்த மக்களைப் பின்தங்கிய நிலையில் ஆக்கியது யார்? அக்கறைக் காட்டாதது யார்? சநாதன கருத்தியலைக் கையாண்டவர்கள்தானே! நடைமுறைப்படுத்தியவர்கள் தானே! ஆகவே அந்தக் கருத்தியலை உதயநிதி எதிர்க்கிறார். சமூகத்தில் பாகுபாடு இருப்பதை பகாவத் ஒப்புக் கொள்கிறார். அதைத்தானே உதயநிதியும் சொல்கிறார், ஏன் அவரை எதிர்க்கிறீர்கள்? அவர் கூறியது எப்படித் தவறானதாகும்.

பகாவத் இடஒதுக்கீடு பற்றி பேசுகிற அளவுக்கு சநாதனம் தன்னை மாற்றிக் கொண்டு இருக்கிறது. அதாவது எப்போதுமே மாறாதது மாறி இருக்கிறது. மாற்றத்தை வைதீக சநாதன மதம் இந்து மதமான போதே ஏற்றுக்கொண்டது. அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஒரு கட்டத்தில் வர்ணமும் சாதியும் இல்லாமல் ஆகிவிடும். கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் தொடரும். இது பொதுமக்களுக்கான நியதி - அவர்களின் மனத்தின் அறிவுறுத்தல் ஆகும். இதற்கு யாரும் தடை விதித்து விட முடியாது என்றே நாம் சொல்ல வருகின்றோம்.

எதைக் குறித்தும் உடனடியாக கருத்துச் சொல்லாத பிரதமர் நரேந்திர மோடி உதயநிதியின் பேச்சுக் குறித்து அவசர அவசரமாக ஓர் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார். எல்லா நாளேடுகளிலும் அந்த அறிக்கை வெளிவந்து இருக்கிறது. “சநாதனம் குறித்து யாரும் தவறாகப் பேசினால் ஒன்றிய அமைச்சர்கள் பதிலடி கொடுங்கள்” என்று தொடங்கி அந்த அறிக்கை முடிகிறபோது, “வரலாற்றை ஆராயாமல், அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள உண்மை தகவலைப் பேசுங்கள். சநாதன சர்ச்சைக்கு தற்கால சூழல் குறித்தும் பேசுங்கள்” என்று குறிப்பிட்டு இருக்கிறார். சநாதனம் பற்றி சர்ச்சை எழுகிறபோது வரலாற்றை ஆராயாமல் பிரதமர் சொல்வது போல மக்களுக்கு அதனை எப்படி விளக்கிச் சொல்ல முடியும்? ஆகவே ஆய்வு பூர்வமாகவே நான்கு செய்திகளை நாம் இக்கட்டுரையின் வாயிலாக சொல்ல விரும்புகின்றோம். இதனை ஒரு கருத்தியலின் மாறுதல் பற்றி நடந்த வரலாற்றுக் குறிப்புகளாகவே நாம் கூற விரும்புகிறோம்.

**(1) இக்கட்டுரையின் தலைப்பு ‘திராவிடமும் சநாதனமும்’ என்று வைத்து இருக்கின்றோம். மநுஸ்மிருதி எழுதிய மநுதான் நம்மை முதன் முதலில் திராவிடர் என்று அழைத்தவன். மநு எனும் பெயரில் பலர் இருக்கிறார்கள். மநுஸ்மிருதிதான் முதன்மையானது. சீரிய விளக்கம் தரக்கூடியது என்று ‘அவர்களால்’ சிறப்பித்துக் கூறப்படுகிறது. இந்த ஸ்மிருதிதான் ஆரிய இனத்தின் சட்டமாகும் என்றே ‘அவர்கள்’ இந்து மத பாடங்களில் கூறி வருகிறார்கள். அதோடு இந்த ஸ்மிருதி இப்போதைய இந்து சட்டத்தின் அடிப்படையுமாகும். (இப்படி இன்னும் ஏழு பேர் எழுதிய ஸ்மிருதிகள் இருக்கின்றன. அவற்றில் மநுவோடு சேர்த்து 4 ஸ்மிருதிகளே இப்போது பயன்பாட்டில் இருக்கின்றன என்று ‘அவர்கள்’ சொல்கிறார்கள்) நம் எதிரி நமக்கு வைத்தப் பெயர்தான் - திராவிடம். அது பல பொருள்களைத் தரும் சொல்லாகி இன்று நிற்கிறது. எல்லோரும் அறிந்த சொல்லாகவும் ஆகிவிட்டது. இதையும் விமர்சிப்பவர்கள் உண்டு. ஏளனமாகக் கூறுகிறவர்களும் இருக்கிறார்கள்.**

**ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த பின்தான் வேதங்களைப் பாடினார்கள். வர்ணாசிரம சநாதன கட்டமைப்பை உருவாக்கி னார்கள். சரியாகச் சொல்வதானால் இவை ‘அவர்களின்’ இனத்தை செறிவாக்கிக் கொள்ள உருவாக்கிக் கொண்டதாகும். ஆனால் இங்கு நாகரிகத்தோடு வாழ்ந்த பூர்வ குடிகளான தமிழர்களை - திராவிடர்களை அதே கட்டமைப்பைத் பயன்படுத்தி ஊடுவத் தொடங்கினார்கள். அந்த ஊடுருவல் இன்று இரண்டறக் கலந்துவிட்டது. நான்கு வர்ணங்களுக் குள்ளும் வர்ணத்திற்கு அப்பாலும் உள்ள சூத்திர, அவர்ணஸ்தர்களும் அதில் உள்ளடக்கம் ஆகிவிட்டார்கள். அதாவது நாமும் அதற்குள்ளே அடக்கம் ஆகி இருக்கிறோம்.**

**காசி இந்து பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ‘அவர்களின்’ பாலபாடத்தில் சநாதனம் பற்றி என்ன சொல்கிறார்கள்?**

“SANATANA DHARMA means the Eternal Religion, the Ancient Law, and it is based on the Vedas, Sacred books given to men many long ages ago. This Religion has also been called the Aryan Religion, because it is the Religion that was given to the first nation of the Aryan race; Arya means noble, and the name was given to a great race, much finer the character and appearance than the races which went before it in the world’s history”

**“சநாதன தர்மம் என்றால் எப்போதும் இருக்கிற அழிவில்லாத மதம்; பழைய சட்டங்கள் என்று பொருள். இவற்றின் அடிப்படை புனித வேதங்களாகும். நீண்ட நெடிய காலங்களுக்கு முன்பாகவே இவை ஆண்களுக்கு என்று ஏற்படுத்தப்பட்டவை. இந்த மதம் ஆரியமதம் என்றும் அழைக்கப்படுகிறது. ஏனென்றால் இந்த மதம்தான் ஆரிய இனத்திற்கு என்று முதன் முதலில் ஒரு நாட்டை வழங்கியது. ஆரியர்கள், சிறந்த பண்புகளும் நல்ல தோற்றம் உடையவர்கள். மகத்தான அந்த இனம் மிக உயர்ந்தது. ஆரியரின் உயர்வும் பண்பும் தோற்றமும் அந்த இனத்தை உலக வரலாற்றில் முன்னோக்கிச் செலுத்த செய்தது.”**

**காசி இந்துப் பல்கலைக்கழகம் 100 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டு இருக்கிற** ‘An Elementary Text Book of Hindu Religion and Ethics’ **எனும்** SANATANA DHARMA **புத்தகத்தின் அறிமுக உரையின் தொடக்கத்தையே நாம் மேலே தந்து இருக்கின்றோம். இதிலிருந்து நாம் பெறப்படுவது சநாதன தர்மம் என்பது ஆரிய தர்மம் - ஆரிய இனத்திற்கான மதம் என்றாகிறது. ஆரியரின் இந்திய வருகைக்கு முன்னரே தமிழர் இங்கே நாகரிக வாழ்வு வாழ்ந்தவர்கள். அவர்களின் மதம் வேறாக இருந்திருக்க வேண்டும். உறுதியாக அது சநாதன தர்மமாக இருக்க முடியாது. ஆனால் காலப்போக்கில் சநாதன தர்மம் - எப்போதும் இருக்கிற அழிவில்லாத மதம் மாறத் தொடங்கியது.**

**பிரதமர் மோடி சொல்வது போல் ஆராயமல் எப்படி சநாதன தர்மத்தை நம் மக்களுக்கு எடுத்துரைப்பது? ஆகவேதான் அவர்களின் பால பாடங்களின்படி சநாதன தர்மம் என்பது திராவிட மதமாகாது; அது ஆரிய மதமே ஆகும் என்று கூற வருகின்றோம். தமிழர், மதம், மறைந்து ‘அவர்களின்’ ஊடுருவல் நிலைத்து விட்டது. அதனைக் கீழ்க்காணும் ஒரு நிகழ்விலிருந்து நாம் மேலும் உறுதிப்படுத்த விரும்பு கின்றோம்.**

**(2) விவேகானந்தர் வேதங்களை முதன்மைப்படுத்துகிறவர்; வேதாந்தி. அவர் இந்தியா முழுமையும் சுற்றுப் பயணம் செய்தார். 1893 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தமிழ் நாட்டிற்கு வந்தார். அப்போது அவர் பேராசிரியர் ரங்காச்சாரியார், சுந்தரம் அய்யர், மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை போன்ற பெருமக்களைச் சந்தித்துப் பேசினார். சுந்தரம் பிள்ளைக்கு திருவனந்தபுரம் ‘கிளப்பில்’ சுந்தரம் அய்யர் விவேகானந்தரை அறிமுகம் செய்து வைத்தார். அப்போது மனோன்மணி சுந்தரம் பிள்ளை, ‘இந்து சமூக அமைப்பிற்கு முற்றிலும் வெளியே உள்ள திராவிடனாகத் தம்மைக் கருதுவதாக’ விவேகானந்தரிடம் அவர் கூறியதை சுந்தர அய்யர் நினைவுக் குறிப்பில் எழுதியிருக்கிறார். ஏன் சுந்தரம் பிள்ளை அப்படிக் கருதுகிறார்? சநாதன வைதீக மதம் வேறு, தமிழர் - திராவிடர் மதம் வேறு; அவர்களின் மதம் வழிபாடுகள் வேறு. தமிழர் - திராவிடர் மதம் மறைந்து கலந்துவிட்ட நிலை, ஆக, திராவிட - ஆரியரிடையே இன, சமய, பண்பாட்டு, கலாச்சார வேறுபாடுகள் இருக்கின்றன என்பதையே சுந்தரம் பிள்ளையின் பேச்சு தெரிவிக்கிறது. இதனால் திராவிடம், சநாதனம் இரண்டும் பொருத்தப் பாடுடைய கருத்தியல்கள் இல்லை என்பது வெள்ளிடைமலை. அதனால்தான் மோதல்கள் இப்போதும் தொடருகின்றன.**



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்

**சநாதன கருத்தியலுக்கு எதிர்ப்பு என்பது காலம் காலமாக இருந்து வந்து இருக்கிறது. எதிர் கருத்துகள் இருந்து இருக்கின்றன. வேத காலத்திலிருந்த சநாதன எதிர்ப்பாளர்களை ‘வைதீக நாத்திகர்கள்’ என்றனர். அந்த இயலுக்குத் தனித்தனி பெயர்கள்கூட வழங்கப்படு கின்றன. ஆகவே எந்தத் தத்துவமும் மாறாமலும் விமர்சிக்கப்படாமலும் இருக்க முடியாது, இருந்ததில்லை என்பதே உண்மை. ஆகவே 21ஆம் நூற்றாண்டில் ஒரு பழங்கருத்தியலை பாதிப்புக்கு உள்ளான வெகு மக்கள் எதிர்க்கிறார்கள். அதன் தலைவர்கள் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டு கருத்தைச் சொல்கிறார்கள். அதனைக் கடவுளுக்கு, வழிபாட்டு முறைகளுக்கு எதிரான கருத்தாகப் பார்க்க முடியாது. சுரண்டலுக்கு எதிரான பழமைவாதத்திற்கு எதிரான, காலத்திற்கேற்ற குரலைத்தான் உதயநிதியின் சநாதன எதிர்ப்புக் குரலைப் பார்க்க வேண்டும். உதயநிதியின் ஆர்ப்பாட்ட போர்க்குரல் மோகன் பகாவத்தின் மண்டைச் சுரப்பைத் தொட்டு இருக்கிறது. ஆகவேதான் அவர் இடஒதுக்கீட்டைப் பற்றி பேசுகிறார். கவலை இருப்பதாகக் காட்டிக் கொள்கிறார்.**

**வர்ணாசிரம சநாதன தருமம் சூத்திரர்களை அவர்ணஸ்தர் களை இணைத்துக் கொண்டு அவர்களைக் கீழ் நிலையில் வைத்திருப்பதிலிருந்து விடுபட வழி தெரியாத போது போர்க்குரல், வேதனைக் குரலாக எழுகிறது! ஐயோ.... உங்களைச் சூத்திரர்களாக விட்டு விட்டுப் போகிறேனே’ என்று வேதனைப்பட்டார் பெரியார். திராவிடர்களின் - தமிழர்களின் சமய, பண்பாட்டு, கலாச்சார, நாகரிக கலப்பு ஆரியர்கள்பால் - சநாதனத்தின்பால் இரண்டற கலந்ததன் விளைவு திராவிடர்களின் அடையாளம் காணாமல் போய் விட்டது. அதை மீட்டெடுக்க வேண்டும் என்பதற்காக உதயநிதி போர்க்குரல் எழுப்புகிறார். இது எப்படி தவறாகும். ‘அவர்களைப்’ போலவே நாமும் நூறாண்டுகளுக்கு மேலே இப்பணியில் ஈடுபட்டு வருகின்றோமே! எதிர்புரட்சி செய்து கொண்டு இருக்கிறோமே.**

**(3) எப்போதும் அழிவில்லாமல் எப்படிச் சநாதனம் இருந்து வர முடியும்? அது மாற்றத்தை நோக்கி விரைந்து கொண்டே இருக்கிறது. இதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. வேதங்களிலும், சமண, பௌத்த மதங்களிலும் சநாதனம் எதிர்புரட்சிக்கு ஆளாகி இருக்கிறது. பிரிட்டிஷார் வருகைக்குப் பிறகு சநாதனத்தின் மாறுதல் மேலும் தவிர்க்க முடியாதது ஆயிற்று. பிரம்ம சமாஜம், இராம கிருஷ்ணா மெசின், பிரம்ம ஞான சபை (தியோசிபிகல் சொசைட்டி), ஆரிய சமாஜம், ஜோதிராவ் ஃபூலேயின் சத்திய சோதக் இயக்கம், அய்யன் காளியின் சாது ஜன பரிபாலன இயக்கம், நாராயண குருவின் இயக்கம் இவை போல அமைப்புகள் தோன்றினவே, இவையெல்லாம் சநாதனத்தின் கூறுகளை மென்மைப்படுத்தியும் நிராகரித்தும் உருவான அமைப்புகளே ஆகும். இது மாறுதல் இல்லையா? எதிர் குரல் இல்லையா? அதை ஒழிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் தொடக்கம் அல்லவா?**

**இந்திய பக்தி இயக்க வரலாற்றில் வர்ணாசிரம சநாதன தர்மத்தை நீண்ட கால ஆய்வுக்குப் பிறகு எதிர்த்த ஒரே இயக்கம் வள்ளலாரின் சமரச சன் மார்க்க இயக்கம், சநாதன தர்மத்தை மறுத்ததாலேயே அது கடவுள் மறுப்பு இயக்கம் ஆகிவிடவில்லை. வள்ளலார் சநாதனத்தை நிராகரித்து விட்டே கடவுளின் பெயரால் அந்தக் கருத்தை எடுத்து வைக்கிறார். இவையெல்லாம் சநாதனம் என்றால் எப்போதும் நிலை யானது எனும் வாதத்தை தவிடு பொடியாக்கி விடவில்லையா? இந்த எதிர்ப்புக் குரலும் மென்மைக் குரலும் தோன்றக் காரணமாக இருந்தவர் உதயநிதியா என்ன? இல்லை. ஆனால், ஒரு கருத்தியலால் பாதிப்பு ஏற்படுகிறபோது வெகு மக்களின் பலன்கள் தட்டிப் பறிக்கும்போது எழும் குரலே உதய நிதியின் குரல். ஆகவே மாறுதல் என்பது தவிர்க்க முடியாதது ஆகும். அதே நேரத்தில் வெகுமக்களின் வாழ்வுக்கு இழிவும் அழிவும் நேரும் நிலை உருவாகிற போது ‘அந்தக் கருத்தியலை’ ஒழிக்க வேண்டும் எனும் குரல் ஓங்கி ஒலிக்கிறது. அதுதான் உதயநிதியின் குரல். இது எப்படி தவறாகும்.**

**மேலும் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே உதயநிதியின் முதல் குரல் மென்மையாக ஜே.எம்.நல்லசாமிப் பிள்ளையின் சித்தாந்த தீபிகை தலையங்கத்தில் (27.11.1897) ஒலிக்க ஆரம்பித்து விட்டது. அந்தத் தலையங்கத்தின் தலைப்பு “பழமையும் புதுமையும்!” நமது தேவைக்கு அதிலிருந்து ஒரு சிறிய பகுதியைக் கீழே எடுத்துக் கூறி இருக்கிறோம்.**

**“மாறுபாடும் ஸ்வதந்திர வாஞ்சையும் ஆர்ய தர்மாச்சாரி களின் மூளைக் கெட்டாததுமல்ல, ஒட்டாததுமல்ல வென்றும் ஆர்ய தர்மமானது மாறுதலே முக்கிய இலட்சண மாய் அமைக்கப் பெற்று அப்போதைக்கு அப்போது ஸந்தர்ப்பானுச்சாரமாய் திரிந்தும் திருந்தியும் வருகிறது”**

**சித்தாந்த தீபிகையின் இக்கூற்றிலிருந்து சநாதனம் எப்போதும் நிலையானது என்கிற நிலைப்பாட்டிலிருந்து திரிந்தும் திருந்தியும் சென்று கொண்டு இருக்கிறது என்பதை அறிந்து கொள்கிறோம். ஒரு கட்டத்தில் வர்ணமும் சாதியும் ஒழிகிறபோது சநாதனம் என்கிற கருத்தியல் தானாக ஒழிக்கப்பட்டு விடும், அதனை ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அமைப்புகள் தடுத்து நிறுத்திவிட முடியாது. தானாக ஒழியும் நிலையை வேண்டுமானால் அப்போது ‘அவர்கள்’ சநாதனம் என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் சூத்திர பஞ்சமர்களான வெகுமக்கள் பாதிப்புக்கு ஆளாகிறபோதுதான் திராவிடத்தின் குரலாக உதயநிதி ஓங்கி ஒலிக்கிறார். இதைப் பார்த்து எரிச்சலும் கோபமும் கொண்டு உதயநிதி மீது பாய்கிறார்கள்.**

**(4) இன்றைய நிலையில் வர்ணமும் சாதிகளும் என்னவாய் இருக்கின்றன. சநாதனக் கொள்கையில் ஐந்து வகைப்பாடாக ஆக்கப்பட்டிருந்த இந்திய சமூகத்தை பிரிட்டிஷார் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார், தாழ்த்தப்பட்டோர் என்று முப்பெரும் பிரிவுகளாக்கி விட்டனர். ஒவ்வொரு பிரிவினுள்ளும் ஆயிரக்கணக்கான சாதிகள் இருக்கின்றன. மேலும் அவை ஐந்து பகுப்பினுள் கால மாறுதலாலே சத்திரிய, வைசிய வகைபாட்டை இழந்து விட்டது. இது ஒரு வகை மாறுதலே.**

பிரிட்டிஷார் வழங்கிய அய்ரோப்பிய கல்வி, அரசியலில் வளர்ந்து வருகிற ஜனநாயக அமைப்புகளின் தாக்கங்கள் சில மாறுதல்களை இந்திய சமூகத்தில் ஏற்படுத்திவிட்டன. சமூகத்திலுள்ள எல்லாத் தரப்பு மக்களும் கல்வி, அரசியல் அதிகாரம், பதவி, வழிபாட்டு உரிமை, சமநிலை நோக்கியப் பயணம், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆதல் இவையெல்லாம் சமூக நீதியின் பலன்களைத் தந்தன. வர்ணக் கலப்புகள் எப்போதோ நிகழத் தொடங்கி விட்டன. சாதிகளின் பெரும் பிரிவுகளுக்குள் உட்பிரிவுகள் சமரசம் செய்து கொண்டன. பெரும் பிரிவுகளுள் கலந்து விட்டன. இதையெல்லாம் எப்போதும் நிலையான சநாதனம் வழங்க முடியாது.

சமத்துவத்தை, ஜனநாயகத்தை, மதச்சார்பின்மையை, பழமையை மாற்றுவதன் மூலமே முழுமையாக்க முடியும். செழுமைபடுத்த முடியும். இதுவே திராவிடம் ஆகும். திராவிடம் என்பது சநாதனத்தைக் காட்டிலும் எல்லா நிலையிலும் வகையிலும் மூத்தது ஆகும். அதற்கு ஒரு மாக்ஸ் முல்லர் கிடைக்கவில்லை. திராவிடம் ஓர் இயக்கத்தின் வழி தன்னைப் புதுப்பித்துக் கொண்டு நடை பயிலுகிறது. அது உலக மனிதனைக் கைகோக்கவல்ல மானுடத்தை நோக்கிய பெரும் பயணத்தை நோக்கிச் செல்கிறது. அதை அடையத்தான் குந்திக் குரலெடுத்து கூவுகிறார் உதயநிதி; அவர் கொள்கைக் குயில் கூவிக்கொண்டே இருக்கட்டும். வெற்றி திக்கட்டும் முழங்கட்டும்! ●

## நாடாளுமன்றத் தேர்தலில் மோடி அரசு வெளியேற்றப்படுவது உறுதி!

### லாலு பிரசாத்யாதவ் பேச்சு

*தியோகர், செப்.13-* வரும் தேர்தலில் மோடியை மக்கள் ஆட்சியில் இருந்து வெளியேற்றுவார்கள் என்று லாலு பிரசாத் யாதவ் தெரிவித்தார். பீகார் முன்னாள் முதல்வரும் ராஷ்டிரிய ஜனதா தளத் தலைவருமான லாலு பிரசாத் யாதவ், ஜார்கண்ட் மாநிலத்தின் தியோகர் மாவட்டத்தில் உள்ள பாபா பைத்யநாத் தாம் கோயிலில் தரிசித்த பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் நாட்டு நடப்புகள் குறித்து பேசினார்.

அப்போது பேசிய அவர், “நாட்டில் பணவீக்கமும், வேலையின்மையும் உச்சத்தில் உள்ளன. மக்களை ஏமாற்ற பிரதமர் மோடி மீண்டும் பொய் பேச தொடங்கி



உள்ளார். இதனால் வரும் தேர்தலில் அவர் நிச்சயம் வெளியேற்றப் படுவார்.

தேர்தலையொட்டி, பிரதமர் மோடி காஸ் விலையை குறைத்து மக்களை ஏமாற்ற நினைக்கிறார். இந்த விலை குறைப்பு அவருடைய பணத்தில் இருந்து வந்தது அல்ல.

அது மக்களின் வரிப் பணம். பிரதமரா சம்பாதித்தார்?” என்று கேள்வி எழுப்பினார்.

## உ.பி. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் முறைகேடு:

### முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ் குற்றச்சாட்டு!

*லக்னோ, செப்.13-* உத்தர பிரதேசத்தில் சாலைகளில் மழைநீர் தேங்குவது ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் ஊழல் நடந்திருப்பதை காட்டுகிறது என்று அகிலேஷ் யாதவ் குற்றம் சாட்டியுள்ளார். உத்தர பிரதேசத்தில் முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான பா.ஜ. கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. இந்நிலையில், சாலைகளில் மழை நீர் தேங்குவது ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் முறைகேடு நடந்திருப்பதை காட்டுவதாக சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “தலைநகர் லக்னோ உள்பட முக்கிய நகரங்கள் மற்றும் பல குடியிருப்புகள் நீரில் மூழ்கி உள்ளன. மேலும் கழிவு நீர் நிரம்பி வழிகிறது. மாநில மக்களுக்கு கனவு



களை மட்டும் காட்டிய பா.ஜ. அரசு உண்மையான களத்தில் எதையும் செய்யவில்லை. கடந்த 24 மணி நேரத்தில் மின்னல் தாக்கி 4 பேர், நீரில் மூழ்கி 2 பேர் உள்பட மழை தொடர்பான சம்பவங்களில் மட்டும் 19 பேர் பலியாகி உள்ளனர். மாநிலம் முழுவதும் உள்ள ஸ்மார்ட் சிட்டிகளின் சாலைகளில் மழைநீர் தேங்குவது பா.ஜ.அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் ஊழல் நடந்திருப்பதை காட்டுகிறது,” என்று கூறியுள்ளார்.

## தமிழ்நாட்டில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு

# 1000 கோயில்களுக்கு திருகுடமுழுக்கு நடத்தி சரித்திர சாதனை படைத்துள்ளது!

## சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 20 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உரை!

சென்னை, செப்.13-

சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில், நேற்று முன்தினம் (11.09.2023), திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள திருமண மண்டபத்தில் 20 இணைகளுக்கு திருமணத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

2022-2023 ஆம் ஆண்டிற்க்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில், "ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு 25 இணைகள் வீதம் 20 மண்டலங்களில் ஆண்டுதோறும் 500 இணைகளுக்கு திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்படும்" என அறிவிக்கப்பட்டு 04.12.2022 அன்று சென்னையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலும், பிற மாவட்டங்களில் திருக்கோயில்கள் சார்பிலும் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கையில், "பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் பொன்தாலி உட்பட ரூ.50,000/ மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி ஒரு மண்டலத்திற்கு 30 இணைகள் வீதம் 600 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது. அதன் முதற்கட்டமாக 07.07.2023 அன்று சென்னை மண்டலத்திற்குட்பட்ட 34 இணைகளுக்கு சென்னை, இராஜா அண்ணாமலை புரம், கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டு சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

### அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

அதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் (11.09.2023), திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் 20 இணைகளுக்கு திருமணத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களைவழங்கி, வாழ்த்தி பேசியதாவது,

சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் இன்றைய தினம் 20 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்துகின்ற பெரும்வாய்ப்பினை பெற்றுள்ளேன்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு சாதனை!

பி.கே.சேகர்பாபு அவர்கள் இந்து



சமய அறநிலையத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு இந்த துறைக்கு ஒரு புதிய மரியாதை, கௌரவம் ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. முதலமைச்சர் தளபதி அவர்கள் கூட அவருடைய செயலை பாராட்டியிருக்கின்றார். ஆட்சிக்கு வந்த 2 ஆண்டு காலத்தில் 1,000 திருக்கோயில்களில் திருக்குடமுழுக்கு பெருவிழாவை நடத்தியிருப்பது சரித்திரத்தில் இடம்பெற வேண்டிய, கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற வேண்டிய சாதனையாகும். காரணம் 1,000 குடமுழுக்குகள் நடத்துவது என்பது சாதாரணமான காரியம் அல்ல, நடத்துபவர்கள் ஒரு பக்கம் இருந்தாலும் நடத்துபவர்களை ஊக்குவித்து அதனை திறம்பட செய்கின்ற காரியத்தை சேகர்பாபு அவர்கள் சிறப்பாக செய்திருக்கிறார்.

சங்கத் தமிழர் வரலாற்றில் மதுராந்தக சோழனின் தாயார் செம்பியன் மாதேவி காவிரி கரையில் சுமார் 1008 சிவாலயங்களை எழுப்பினார் என்று வரலாற்றிலேயே படித்தோம். அந்த செம்பியன் மாதேவிக்குப் பிறகு தமிழ்நாட்டில் 1,000 குடமுழுக்குகளைக் கண்ட ஒரே மனிதர் நம்முடைய சேகர்பாபு தான். "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்று கூறியுள்ளார் வள்ளுவர். அதாவது, இந்த காரியத்தை இவர்தான் சிறப்பாக செய்வார் எனவே அந்த காரியத்தை அவரிடத்தில் கொடுக்க வேண்டும் என்று வள்ளுவர் சொல்கிறார். அதன்படி இந்து சமய அறநிலையத்துறையை சேகர்பாபுவிடம் கொடுத்ததற்கு காரணம் அவர் உண்மையான பக்தர், கோயில்களுக்கும், குடமுழுக்குகளுக்கும் செல்லுகின்றவர். மாதம் தவறாமல் ஐயப்பன் கோயிலுக்கும் செல்பவர். நெற்றியில் திருநீறு இல்லாமல் ஒரு நாளும் இருந்ததில்லை. போலி பக்தியாக இல்லாமல் உண்மையான பக்தி உடையவராக இருந்த காரணத்தால் அவரிடத்தில் இந்து சமய அறநிலையத்துறையை கொடுத்தார்கள்.

எனக்கு ஒரு பத்து பதினைந்து அறநிலையத்துறை அமைச்சர்களை தெரியும். அறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்தபோது அறநிலையத்துறைக்கு அமைச்சராக நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இருந்தார். அவர் கோயிலுக்கு சென்றபோது கொடுத்த திருநீறை அருகில் இருப்பவர்களிடம் கொடுக்காமல் சுவர் மீது கொட்டி விட்டார் என பிரச்சினை ஏற்பட்டதால், அறநிலையத்துறை அமைச்சரை மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே யாரிடத்தில் எந்த காரியத்தை ஒப்படைத்தால் அது வேகமாக நடக்கும் என்பதை உணர்ந்து முதலமைச்சர் அவர்கள் இந்த துறையை ஒப்படைத்து இருக்கின்றார். அவரை நான் மனதார பாராட்டுகிறேன். அவர் இந்து சமய அறநிலையத்துறையில் உயர்ந்த மனிதனாக இருப்பார் என தெரிவித்துக் கொள்கிறேன்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு பாராட்டு!

அதேபோல தம்பி மா.சுப்பிரமணியன் அவர்கள் விளையாட்டு துறையில் வல்லவர். ஒரு நாளைக்கு சுமார் 20 கிலோமீட்டர் தூரம் ஓடக்கூடியவர். உயிரை பணயம் வைத்து வேலை செய்வதில் கெட்டிக்காரர். அதனால் தான் சுகாதாரத்துறை அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கொரோனா காலத்தில் யாரும் வெளியே வர பயந்த நிலையில் தன் உயிரை பணயம் வைத்து கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களை தொட்டுப் பார்த்து வைத்தியம் செய்ய சொன்ன ஒரே அமைச்சர் நமது மா.சுப்பிரமணியன் அவர்கள். ஒரு செயலை ஈடுபாட்டோடு செய்தால்தான் வெற்றி பெற முடியும். எனக்கு எந்த துறை வேண்டுமென்று கேட்டபோது எதில் எனக்கு இன்வால்வ்மெண்ட் இருக்கிறதோ அந்தத் துறையை கொடுங்கள் என்று சொன்னேன். எனக்கு அதில் விருப்பம் இருந்ததே காரணமாகும்.

### மணமக்கள் விட்டுக் கொடுத்து வாழவேண்டும்!

கணவனும் மனைவியும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையோடு வாழ்ந்தால்தான் வாழ்க்கை செம்மையாக அமையும். இன்றைக்கு திருமணம் செய்து கொண்ட மணமக்களும் அதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கை என்பது சாதாரணமானது அல்ல. பல்வேறு பிரச்சினைகளை வரும். அந்த நேரத்திலெல்லாம் அனுசரித்து ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். அப்படி விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மை இல்லாததால் குடும்பத்தில் பிரச்சனைகள் உண்டாகிறது. இன்று மண விழா கண்டுள்ள மணமக்கள் கணவன், மனைவி என்பதை விட நண்பர்களாக, உறவினர்களாக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையோடு வாழ வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

நான் இந்த திருமண விழாவிற்கு வராவிட்டால் கூட சேகர்பாபுவை பார்த்து ஒரு சால்வை போர்த்தி ஆயிரம் பிறை கண்டவனை போல் ஆயிரம் குட முழுக்குகள் நடத்திய அவருக்கு வாழ்த்தைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். இன்றைக்கு அத்தனை பேர் மத்தியிலும் என் வாழ்த்தை அவருக்குத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார்.

இரண்டாம் கட்டமாக நேற்று முன்தினம் தமிழ்நாடு முழுவதும் திருக்கோயில்கள் சார்பில் 183 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டு சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்த நிதியாண்டிற்கு திருக்கோயில்கள் சார்பில் நடத்திட அறிவிக்கப்பட்ட 600 திருமணங்களில் 426 திருமணங்கள் இதுவரை நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஜே. எம்.எச்.அசன் மவுலானா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (11.09.2023) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் வேளாண் நிதிநிலை அறிவிப்புகளின் தற்போதைய நிலை, ஒன்றிய அரசின் நிதியுதவி திட்டங்கள் மற்றும் NABARD திட்டங்கள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சர்க்கரைத்துறை ஆணையர் சி.விஜயராஜ்குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை ஆணையர் டாக்டர் எல்.சுப்பிரமணியன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தாதேவி, வேளாண்மை கூடுதல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் (வே.பொ.) முனைவர். ஆர்.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## ஜி20 மாநாடு முடிந்து விட்டது!

# இனி உள்நாட்டு பிரச்சினையை பா.ஜ. அரசு கவனிக்க வேண்டும்!

## காங்கிரஸ் தலைவர் கார்கே வலியுறுத்தல்!

புதுடெல்லி, செப். 13-

ஜி20 உச்சி மாநாடு முடிந்துள்ள நிலையில், இனி பணவீக்கம், வேலை வாய்ப்பின்மை, மணிப்பூர் வன்முறை போன்ற உள்நாட்டு பிரச்சினைகளில் ஒன்றிய பா.ஜ. அரசு கவனம் செலுத்த வேண்டுமென காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தி உள்ளார்.

காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது டிவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது: -

இப்போது ஜி20 கூட்டம் முடிவடைந்துள்ள நிலையில், பா.ஜ. அரசு உள்நாட்டு விவகாரங்களில் கவனம் செலுத்த வேண்டும். ஆகஸ்ட் மாதத்தில் ஓட்டல்களில் ஒரு சாப்பாட்டின் விலை 24 சதவீதம் அதிகரித்துள்ளது. நாட்டில் வேலையின்மை விகிதம் 8% ஆக உள்ளது. இளைஞர்களின் எதிர்காலம் இருண்டதாக உள்ளது. பிரதமர் மோடியின் தவறான ஆட்சியால், ஊழல்



பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த விஷயத்தில், சி.ஏ.ஜி.யின் பல அறிக்கைகள் பா.ஜ.வை அம்பலப்படுத்தி உள்ளன.

ஜம்மு காஷ்மீரில் ரூ.13,000 கோடி ஜல் ஜீவன் ஊழல் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இதில் ஊழலை வெளிப்படுத்திய தலித் ஐ.ஏ.எஸ். அதிகாரி துன்புறுத்தப்பட்டுள்ளார். அதேபோல, பிரதமரின் உற்ற நண்பரின் மற்றொரு கொள்ளையும் சமீபத்தில் மீண்டும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. 2019 மக்களை தேர்தல் முன்பாக, ரிசர்வ் வங்கி கருவூலத்தில் இருந்து ரூ.3 லட்சம் கோடியை விடுவிக்க அப்போதைய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் விரால் ஆச்சார்யாவுக்கு அழுத்தம் தரப்பட்ட தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

மணிப்பூரில் கடந்த சில நாட்களாக மீண்டும் வன்முறை தொடங்கி உள்ளது. இமாச்சலப்பிரதேசம் இயற்கைப் பேரிடரால் தத்தளிக்கிறது. ஆனால் திமிர்பிடித்த பா.ஜ. அரசு, அதை தேசிய பேரிடராக அறிவிப்பதைத் தவிர்த்து வருகிறது.

இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியில், பிரதமர் மோடி உண்மையை மறைக்க கடுமையாக முயற்சிக்கிறார். ஆனால் பொதுமக்கள், கவனத்தை சிதறடிக்கும் பிரச்சினைகளை கவனிக்காமல், உண்மையைக் கேட்கவும் பார்க்கவும் விரும்புகிறார்கள். 2024 மக்களவை தேர்தலில் பா.ஜ. அரசை வெளியேற்ற மக்கள் வழிவகை செய்யத் தொடங்கி விட்டார்கள்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.



# திராவிடப் போராளிகள்

**34**

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## சனாதனத்தை அசைத்த சமூக மருத்துவர்!




*“சங்கீதம், மனத்தை, உன்னத ஒழுக்க நிலைக்கு உயர்த்தும்; மிகத் தாழ்ந்த கேவலப் படுகுழியில் தள்ளவும் தள்ளும். ஆகையால், நாம், அதிலும் முக்கியமாக நமது வாலிப ஸ்திரீபுருஷர்கள் தங்கள் சகவாச விஷயத்தில் ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டும். சங்கீதத்தில் நல்லதுமுண்டு; கெட்டதுமுண்டு. நற்குணமும் தூய்மையும் படைத்த மனிதர்கள், ஆன்மப் பரவசத்துடன் பாடும் சங்கீதமுண்டு. மோகமும் அழுக்கும் நிறைந்த பக்தியில்லாத மனிதர்கள் வெறிகொண்டு பாடும் சங்கீதமுமுண்டு.*

*ஆகையால், பகுத்தறிவுடன் பாடகரைப் பிடிக்கவேண்டும். பகிரங்க இடங்களில் பாடவும், ஆடவும் சங்கீத வித்வான்களையும், நாட்டியக்காரர்களையும் அழைக்கும்போது நமது தலைவர்கள் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். நமது சமூகம் கருத்திலும், செயலிலும் உன்னத நிலைமையை அடைய வேண்டுமென்பதே தலைவர்களின் விருப்பம். ஆகையால், நல்ல சங்கீதத் திறமை மாத்திரமன்றி, சிறந்த ஒழுக்கமுடையவர்களையே, பொதுக் கச்சேரிக்கு அழைக்க வேண்டும். ஏனெனில் அவை உலகுக்கு ஓர் உதாரணமாய்ப் பயன்பட வேண்டும்“.*

*இப்படி ஒரு கட்டுரை, கலைகளை விரும்பும் உள்ளங்கள் ஒழுக்கத்தையும் வளர்க்க வேண்டும் என்றும் கலைஞர்களுக்குப் பகுத்தறிவு வேண்டும் என்றும் 1935-ஆம் ஆண்டு மே 1-ஆம் நாள்* ***‘பகுத்தறிவு’ இதழ் 2-இல்*** *வெளியானது.*

*இதனை எழுதியவர் கலை விமர்சகரல்ல. மருத்துவக் கல்லூரியில் முறையாக மருத்துவப் பட்டம் பெற்ற டாக்டர் முத்துலட்சுமி அவர்கள்தான் இதனை எழுதினார். அதுமட்டுமன்றி, கலைகளின் பெயரால் பெண்கள் எத்தகைய சீர்கேடான வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்று அவர் விவரித்திருந்தார்.*

*அதேபோல்* ***‘குடிஅரசு’*** *ஏட்டிலும்,* ***‘ரிவோல்ட்’*** *(REVOLT) ஆங்கில இதழிலும் அவரது கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன. தந்தை பெரியார், டாக்டர் முத்துலட்சுமி அவர்களின் கடிதங்கள் மற்றும் கட்டுரையைக் குறிப்பிட்டு* ***‘நீதிக்கட்சி’*** *ஆட்சிக்குப் பலமுறை கண்டனம் தெரிவித்துள்ளார்.*

### தேவதாசி முறையை ஒழித்தவர்

*சுயமரியாதை இயக்கத்தில் நேரடியாக ஈடுபடாத பல பெண்கள் தங்கள் மொழி, இன, சமத்துவக் கொள்கைகளாலும், பெண் விடுதலைக்கான போராட்டங்களாலும் திராவிட இயக்கத்தின் போராட்டங்களுக்கு வலு சேர்த்திருக்கிறார்கள். அதேபோல் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், சாதி, மதம் மற்றும் ஆண் ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடும் பெண்களுக்கு திராவிட இயக்கம் துணைநின்றதும் வரலாறுதான். ஏனெனில், எந்தக் கொம்பைக் கொண்டு அடித்தாலும் அடிபட்டது, படவேண்டியது* ***‘சனாதனப் பாம்பு’*** *என்பதுதான் அவர்களுக்கிடையில் இருந்த புரிதல்.*

*படிப்பவர் மனதைப் பதை பதைக்கச் செய்யும் பல உண்மைகள் மறைந்து கிடந்த தேவதாசிகளின் வாழ்க்கையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தவர்கள் இருவர்.*

*மூவலூர் இராமாமிர்தம் என்ற போராளி ஏழ்மைமிக்கக் குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்தபோதும், தனக்கு வசதியும் வளமும் கொட்டித் தருவதற்குத் தயாராக இருந்த தேவதாசி முறையை எதிர்த்துப் போராடினார். அந்த மாயவலையில் மாட்டிக்கொண்ட பெண்களை, இழிவான வாழ்வில் ஈடுபடக் கூடாதென்று சொல்லி, அவர்களுக்குத் திருமண வாழ்வினை அமைத்துக் கொடுப்பதற்காகப் போராடினார் என்றால், அதே தேவதாசிக் குடும்பத்தில் பிறந்த, ஓரளவு வசதியான குடும்பப் பின்னணியில் வளர்ந்த டாக்டர் முத்துலட்சுமியோ சென்னை சட்டமன்றத்தில் பத்தாண்டுகளுக்கு மேல் போராடி, தேவதாசி முறையை ஒழிக்கச் சட்டத்தை நிறைவேற்றி வரலாறு படைத்தார். அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்காக அவர் நடத்திய தொடர் போராட்டத்தை, சென்னை மாகாணமே வியப்பாகப் பார்த்தது.*

### போலி மதசம்பிரதாயங்களுக்கு பலி!

*கோயில்களில் பெண்களுக்குப் பொட்டுக் கட்டி தேவதாசியாக வாழவைக்கும் கொடுமையைத் தடுப்பதற்காகவும் அப்பெண்களை மீட்டு, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பதற்காகவும் மேலும் புதிய தேவதாசிகள் இந்து மதத்தின் பெயரால் கோயில் வழக்கம் என்ற பெயரால் அந்த அழிவுப் பாதையில் நுழைக்கப்படக்கூடாது என்பதற்காகவும் அவர் நடத்திய போராட்டம் மிகப்பெரிய சாதனையானது.*

*எத்தனை வகை எதிரிகள்? ஸநாதனிகள், வைதீகர்கள், தேசபக்தர்கள், பெரும் பணக்காரர்கள்... ஆனால், அவர்கள் அனைவரையும்விடக் கொடிய எதிரிகளாகச் செயல்பட்டவர்கள், செல்வாக்குப் பெற்ற தேவதாசிகளாக வாழ்ந்து கொண்டிருந்த பெண்கள். அவர்கள் எழுப்பிய வாதங்களோ பரபரப்பானவை. அதாவது ‘விபச்சாரம் வேறு நாடுகளில் இல்லையா?’ என்பதே அவர்களது முதல் கேள்வி.*

*அதற்கு டாக்டர் முத்துலட்சுமி “மேனாடுகளில் நாட்டிய மாதரும், நடிகைகளுமிருப்பது வாஸ்தவம். ஆனால், அவர்களது ஐதீகங்களுக்கும், தென்னிந்திய தேவதாசி வழக்கத்துக்கும் வித்தியாசமுண்டென்பதை நாம் யாவரும் அறிவோம். தென்னிந்திய தேவதாசிகள், போலி மதச் சம்பிரதாயம் ஒன்றுக்குப் பலியாகியிருப்பவர்கள்” என்று பதில் கூறினார்.*

### சமூகநலத்துக்கான சட்டங்கள்

*இத்தனை எதிர்ப்புகளையும் மீறி கோயில்களில் பெண்களைப் பொட்டுக்கட்டி தேவதாசி ஆக்குவதைத் தடை செய்ய அவருக்கு மிகுந்த ஆதரவளித்தவர் தந்தை பெரியார். அவருக்கு ஆதரவாகப் பேசியும் எழுதியும் துணை நின்றது சுயமரியாதை இயக்கம். அதனால்தான் , தேசிய இயக்கமாகிய காங்கிரசு இயக்கத்தில் காந்தியாரின் தலைமையில் பெரு மதிப்பு கொண்டவராக விளங்கிய டாக்டர் முத்துலட்சுமி அவர்கள் தனது முயற்சி வெற்றி பெறுவதற்கான சூழ்நிலையைப் பற்றி எழுதும்போது,*

*“என்னுடைய மசோதாவிற்குச் சட்டசபைகளில் ஒவ்வொரு முறையும் எவ்வளவு ஆதரவிருந்தது என்று உணர்ந்த சர்க்கார் இனியேனும், இப்பொட்டுக்கட்டும் வழக்கத்தைக் கோயில்களினின்றும் அடியோடு தவிர்க்க முன் வருவார்களென்று நம்புகிறேன். தேசத்தில் சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டு வருகின்றது; பொது ஜனங்களின் பால் கல்வி அபிவிருத்தியடைந்து வருகின்றது; ஒடுக்கப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் விழித்துக் கொண்டார்கள்; அரசாங்கத்திற்கு இந்த நிலைமையில், இதைப்பற்றிய சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு யாதொரு தடையும் ஏற்படாதெனக் கூறுவேன்” என்று எழுதினார்.*

*மேலும் இந்தக் கொடுமையில் குழந்தைகள் மாட்டாமல் இருக்க வேண்டுமானால் ‘குழந்தைப் பாதுகாப்புச் சட்டம்’ வேண்டும் என்றும் வாதிட்டார்.*

*“மற்றைய தேசங்களில் அநுசரிக்கப்படுவது போன்றே, குழந்தைகளைப் பாதுகாப்பதைப் பற்றியும் சுவீகரிப்பதைப் பற்றியும் நமது தேசத்திலும் சட்டம் ஏற்படுதல் அத்தியாவசியம். நூற்றுக்கு நூறு வீதம் கற்றவர்களுக்கு இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி முதலிய தேசங்களிலும், பிற்காலச் சமூகநலத்தை உத்தேசித்து, இவ்வகையான சட்டங்கள் தேவையாயிருக்கின்றன. நம் சந்ததி பிற்காலத்தில் தேச நலம், மனோ நலம், ஒழுக்க நலம் இவைகளைப் பெறுவதற்கு இத்தகைய சட்டங்கள் அவசியமாயிருக்கின்றன. சிறுவர் சிறுமிகள் பாதுகாப்பதற்கு, அரசாங்கக் காப்புச் சட்டங்கள் வேண்டும். இச்சங்கங்கள் தாம் சிறுவர் சிறுமிகளைப் பார்வையிட்டு வருதல் வேண்டும்” என்று 1929-இல், வெளியான* ***‘திராவிடன் அனுபந்தம்*** *: தமிழ் மாகாண சுயமரியாதை மாநாட்டு மலரில்’ பதிவு செய்யப்பட்டுள்ளது.*

**அவரது வாதங்கள் இன்றைய போக்சோ சட்டத்தின் முன்னோடியாக இருப்பது வியப்பை அளிப்பதாக இருக்கிறது.**

*அவரது வாதங்கள் இன்றைய போக்சோ சட்டத்தின் முன்னோடியாக இருப்பது வியப்பை அளிப்பதாக இருக்கிறது.*

*டாக்டர் முத்துலட்சுமியின் பின்னணி என்ன? அவர் ஏன் தேவதாசி முறை ஒழிப்பில் முனைந்து நின்றார்?*

(வருவார்கள்...)

## நூற்றாண்டைப் போற்றும் எழுத்துகள்!




**க**லைஞர் நூற்றாண்டில் அவருக்கு சிறப்பு சேர்க்கும் விதமாக, சொல்லப்படாத பல தகவல்களுடன் சிறப்பிதழைக் கொண்டு வந்துள்ளது ‘அந்திமழை’ இதழ். ஆசிரியர் கி.வீரமணி, பேராசிரியர் சுப.வீ, அமைச்சர் தங்கம் தென்னரசு, எழுத்தாளர் இமையம் உள்ளிட்ட முக்கிய ஆளுமைகள் முத்தமிழறிஞர் கலைஞருடனான தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

வாழ்க்கையில் குறிக்கோளுடன் வாழ்ந்த தலைவர் என, ஜப்பானிய மொழியில் உள்ள ‘இகிகை’ என்கிற பண்பாட்டு அடையாளத்துடன் கலைஞரை ஒப்பிடுகிறது ‘அந்திமழை’. நீண்ட ஆயுள்கொண்ட மனிதர்கள் ‘இகிகை’ கொண்டவர்களாம். கலைஞர் வாழ்ந்து மறைந்து இருக்கலாம். ஆனால், அவர் நினைவுகள் காலம் கடந்தும் நிற்கும் என்பதையே நூற்றாண்டு எழுத்துகள் உணர்த்துகின்றன.

## ஃப்ளாஷ்பேக்





### வாக்காள ‘பெரு’மக்கள்!



பொன்னுசாமி

**நா**ன் திருவாரூர் மாவட்டத்திலிருந்து நெய்வேலிக்கு இடம்பெயர்ந்தவன். இளம் வயதில் ஏற்பட்ட கழகப் பிணைப்பு தொடர்ந்தே வந்தது. அதன் காரணமாகவே என் குழந்தைகளை தலைவர் கலைஞரிடம் அழைத்துச் சென்று பெயர் வைக்க வேண்டும் என்று விருப்பப்பட்டேன்.



1988-இல் முதல் மகன் பிறந்தபோது பொதுக்கூட்ட மேடையில் அழகிரி என்று பெயர் வைத்தார். 1991-இல் இரண்டாவது மகனுக்கு கதிரவன் என்றும், 1993-இல் மகளுக்கு மலர்விழி என்றும் பெயர் வைத்தார். மகளுக்குப் பெயர்வைத்த மேடையில், “வாக்காளர் பட்டியலில் பெயர் அதிகமாகிவிட்டது. இத்தோடு நிறுத்தி கொள்ளவும்” என்றார் அவருக்கே உரிய நகைச்சுவையுடன். 58 வயதில் இதை எல்லாம் எண்ணி மகிழ்கிறேன்.

**-பொன்னுசாமி, கிளைச் செயலாளர், நெய்வேலி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்க ளுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### ஒரே விதமான ஆணை

**1968-ஆம் ஆண்டு கலைஞரின் 45-வது பிறந்தநாள் விழாவில், பேரறிஞர் அண்ணா கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அந்த உரை கலைஞர் குறித்து, வரலாற்றுச் சிறப்புமிக்க உரையாக அமைந்தது. “தண்டவாளத்தில் தலை வைத்துப் படு என்று சொன்னாலும், அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள் என்று கூறினாலும், இரண்டையும் சமமாகக் கருதி ஏற்றுக்கொண்டு, தன்னுடைய திறமையை ஊர் உலகத்துக்குப் பயன்படுத்தும் என் தம்பி” என்று அப்போது பெருமைபடுத்தினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**239**




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131